₹10


fmpb

# அறைகூவல்

Volume 51 | Issue 4 | April 2021

## நீதிமானுடைய பேர் புகழ்பெற்று விளங்கும்

(நீதிமொழிகள் 10:7)



**Rev. Dr. சாமுவேல் T. கமலேசன்**

**18.11.1930 - 28.02.2021**

*நமது இயக்கத்தின் சிற்பியும், மகத்தான தலைமைத்துவத்தின் சிகரமும், மூன்று தலைமுறையினரால் பாசத்துடன் 'அண்ணன்' என்று அழைக்கப்பட்டு வந்த நமது மாபெரும் முன்னோடி தலைவரின் வாழ்விற்காக தேவனுக்கு நன்றி!*




# ஆரம்ப வரிகள்...

கிறிஸ்தவர்களாகிய நாம் இவ்வுலகில் வாழ்கிற நல் வாழ்க்கைதான் நாம் விட்டுச்செல்கிற மரபாகிறது. “அடுத்த தலைமுறைக்காக வாழுகிறவனே நீதிமான்” என்று இறையியலாளரும், இரத்த சாட்சியுமான டீட்ரிக் போன்ஹோஃபர் கூறுகிறார். இந்த சிந்தனைதான் எப்போதுமே தேவனுடைய சத்தியத்தைத் தலைமுறை தலைமுறையாகக் கொண்டு செல்வதற்கான தேவனின் திட்டமாக இருப்பதை நாம் வேதாகமத்தில் காணலாம். “அவர் யாக்கோபிலே சாட்சியை ஏற்படுத்தி, இஸ்ரவேலிலே வேதத்தை ஸ்தாபித்து, அவைகளைத் தங்கள் பிள்ளைகளுக்கு அறிவிக்கும்படி நம்முடைய பிதாக்களுக்குக் கட்டளையிட்டார்” என்று சங்கீதக்காரர் இதுகுறித்து சொல்கிறார் (சங்.78:5).

இயேசுகிறிஸ்துவின் மரபு, வரலாற்றில் எந்தவொரு தனிநபரையும்விட உலகில் அதிக தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அவர் விட்டுச்சென்றுள்ள இரு மரபுகளாகிய - அவருடைய வார்த்தையாகிய போதனைகளும், அவருடைய திருச்சபையாகிய சில நூறு மக்களும் உலக வரலாற்றின் போக்கையே மாற்றின. அவருடைய வாழ்க்கை, சிலுவை மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றின் மரபு - மனுக்குலம் அனைவராலும் மறுக்கமுடியாத சான்றாகக் காணப்படுகிறது (அப்.2:36;4:12; ரோமர் 5:8-11). இயேசு மனிதனாக இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில், வரவிருக்கும் சோதனைகள் மற்றும் துன்புறுத்தல்களுக்குத் தமது சீஷர்களைத் தயார்படுத்தி ஊக்கப்படுத்தினார். மேலும், அவர்கள் அநேக மரபுகளைப்பற்றி அறிந்துக்கொள்ளவும், அவர்களே அநேக மரபுகளை உருவாக்குவதற்கும் பல வாய்ப்புகள் இனி வரும் என்றும், அது அவர்களை தேவன் விரும்புகிற இடத்தில் நிச்சயமாக நிலைநிறுத்தும் என்றும் அவர் கூறினார். அவர் தமது சீஷர்களை விட்டுப் பிரிந்துச்செல்லும் நேரம் நெருங்கியவுடன், அவர்கள் ஊழியத்தைக் குறித்து புரிந்துகொள்வதை உறுதி செய்வதற்கான முயற்சிகளை இரட்டிப்பாக்கினார் (மத்.16:13-21).

“பிதா என்னை அனுப்பினதுபோல நானும் உங்களை அனுப்புகிறேன்” (யோவான் 20:21) என்று கிறிஸ்து கூறிய வார்த்தைக்கு இணங்கி பரிசுத்த ஆவியானவர், மிஷனெரிப்பணியை நிறைவேற்றுவதற்கான வல்லமையை சீஷர்களுக்குக் கொடுத்தார். ஆம், ஆத்துமாக்களைவிட விலைமதிப்புள்ள ஏதும் உலகில் இல்லை. கிறிஸ்துவுக்காக ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தும் மரபைவிட பெரிய மரபு வேறெதுவும் இல்லை.

புனித பவுல் தனது வாழ்க்கையின் இறுதிக்கட்டத்தில், மூன்று மிக எளிய மரபுகளை விட்டுச்சென்றதைக் காணலாம். அதாவது அவர், தான் ஒரு ஆவிக்குரிய போர்வீரன் என்று தன்னை நிலைப்படுத்துவதில் உறுதிக்கொண்டவராகவும், தேவனுடைய சர்வாயுதவர்க்கங்களைத் தரித்துக்கொண்டவராகவும், சத்தியத்தைப் பாதுகாப்பதில் உண்மையுடையவராகவும் கிறிஸ்துவுக்காக நல்ல போராட்டத்தைப் போராடினதை நாம் அறிகிறோம்.

கிறிஸ்துவின் விசுவாசிகளாகிய நாமும் நமக்கென ஒரு மரபை உருவாக்க அழைக்கப்படுகிறோம். தேவன் நம்மை நித்தியத்திற்கு அழைத்தப்பின்னும், நமது நல்மரபுகள் நமது நண்பர்கள் மற்றும் உறவுகளின் மத்தியில் தொடர வேண்டும். “பின்பு, பரலோகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகக் கேட்டேன்; அது: கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இதுமுதல் பாக்கியவான்கள் என்றெழுது; அவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டொழிந்து இளைப்பாறுவார்கள்; அவர்களுடைய கிரியைகள் அவர்களோடே கூடப்போம்; ஆவியானவரும் ஆம் என்று திருவுளம்பற்றுகிறார் என்று சொல்லிற்று” (வெளி. 14:13) என்கிற வசனத்திற்கேற்ப, நாம் இவ்வுலகில் வாழும் வாழ்க்கையின் அடிப்படையில்தான் நமது மரபு நம்மைப் பின்தொடரும் என்று அறிகிறோம்.

நமக்கு முன்மாதிரியாக வாழ்ந்த தலைவர்களும் தங்களது ஓட்டத்தை இனிதே முடித்து நிறைவேற்றிச் செல்லும் காலமும் கனிந்து விட்டது. நமது பாசத்திற்குரிய மூத்த அண்ணனும் நமது இயக்கத்தின் முன்னோடித் தலைவருமான அருள்திரு. அறிவர். சாம் கமலேசன் அவர்கள் விட்டுச்சென்றுள்ள மரபுகளான தேவராஜ்யத்தின் மதிப்பீடுகளும் அதை மனித வாழ்வில் மேம்படுத்துவதற்கான யுக்திகளும், நாம் அனைவரும் இயேசுவின் குடும்பமாக இவ்வுலகில் தேவநாம மகிமைக்கென ஒன்றாக இணைந்து வாழவேண்டும் என்பதை நமக்குப் பெரிதும் வலியுறுத்துகிறதன்றோ!

- JJ. ஹாரிஸ் *(தகவல் தொடர்பு துறை)*

“ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து நம்மேல் கொண்டுள்ள தமது அன்பை சிலுவையின் மூலம் நிரூபித்தார். அவர் சிலுவையிலறையப்பட்டு, இரத்தம் சிந்தி மரித்தபோது, ‘நான் இவ்வளவாக உங்களை நேசிக்கிறேன்’ என்று உலகிற்குப் பறைசாற்றினார்.”– பில்லி கிரஹாம்

“சிலுவை நமக்காக என்ன செய்தது என்பதைப் பார்ப்பதற்குமுன், கிறிஸ்துவின் சிலுவை மரணம் நம்மால்தான் நேரிட்டது என்பதை நாம் அறிதல் மிக அவசியம்.”
– ஜாண் R.W. ஸ்டாட்

“பரலோகம் அனைத்தும் கிறிஸ்துவின் சிலுவையில் அக்கறை கொண்டுள்ளது; நரகமோ கிறிஸ்துவின் சிலுவையைக் கண்டு அஞ்சுகிறது; ஆனால் ஏனோ, பூலோக மாந்தர் மாத்திரமே சிலுவையின் அர்த்தத்தைப் புறக்கணிக்கின்றனர்!”
– ஆஸ்வால்ட் சேம்பர்ஸ்

நான் அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும், அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாகி, எப்படியாயினும் நான் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருப்பதற்குத் தகுதியாகும்படிக்கும், அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன்; குப்பையுமாக எண்ணுகிறேன்.
– பவுல் (பிலி.3:10&11)

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஒரு நற்செய்திப் பணி இயக்கம்.

இயேசுவை ஒருமுறைகூட கேள்விப்பட்டிராதவர்களுக்கு நற்செய்தியை நேரடியாக எடுத்துச் செல்வதே இதன் பிரதான பணி.

இந்தியத் திருச்சபையின் மனமொத்த ஆதரவுடன் இது தன் சேவைப்பணியை நாடெங்கும் தொடர்கிறது.

சபைகள், நிறுவனங்கள், குடும்பங்கள், தனி நபர்கள் ஆகிய இவர்களின் ஜெபமும், ஈடுபாடும், தியாகமான ஈகையும் இவ்வியக்கத்தின் பணிச் சக்கரத்தைச் சுழலச்செய்யும் அச்சாணிகள். நீங்கள் இணைவதோடு பிறரும் இணைய அறிமுகம் செய்யுங்கள்.

உங்கள் மேலான ஆலோசனைகளை இந்த மின்னஞ்சலில் அனுப்பலாம் :
**feedbackfmpb@fmpb.org**

பொதுச் செயலாளர்:
S. சுதர்சன் தாமஸ் ஜெயராஜ்

# அறைகூவல்

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின்**
மாதம் ஒருமுறை மலரும் சத்தியப்பூ
ஆசிரியர்: S. சுதர்சன் தாமஸ் ஜெயராஜ்

| | |
|---|---|
| தனிப் பிரதி ரூ.10/- | வெளிநாடு |
| ஆண்டு சந்தா ரூ.48/- | ஆண்டு சந்தா ரூ.480/- |
| ஆயுள் சந்தா ரூ.500/- | ஆயுள் சந்தா ரூ.5000/- |

தொடர்பு மற்றும் நிதி உதவிக்கு
**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு**
29, உயர்நிலைப் பள்ளி சாலை, அம்பத்தூர்,
சென்னை 53. தொலைபேசி 044-26570404
பேக்ஸ் 044-26573353 கைபேசி 9444394342
மின்னஞ்சல்: *info@fmpb.org*
வலைதளம்: *www.fmpb.co.in*



# பொதுகாரியதரிசியிடமிருந்து...

அன்பிற்குரிய பெரியோரே, சகோதர, சகோதரிகளே மற்றும் சிறார்களே,

இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்!

இந்த பரிசுத்த வாரத்தில், இயேசுகிறிஸ்துவின் சிலுவைப்பாடு மற்றும் மரண நிகழ்வுகளை நாம் தியானிக்கும்போது, அது பெரிய வெள்ளியில் அல்ல; ஞாயிறன்று – அதாவது, கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலில்தான் அது நிறைவடைகிறது என்பதை அறிகிறோம். இந்த உலகில் நாம் அனுபவிக்கும் துன்பங்களும், வேதனைகளும் தற்காலிகமானது; இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமையே நித்திய மானது. இதைத்தான் அப்போஸ்தலனாகிய பவுல், “மேலும் காணப்படுகிறவைகளையல்ல, காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு, அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது. ஏனெனில், காணப்படுகிறவைகள் அநித்திய மானவைகள், காணப்படாதவைகளோ நித்திய மானவைகள்'' (2கொரி.4:17-18) என்று குறிப்பிடுகிறார்.

## டாக்டர் சாமுவேல் T. கமலேசன் அவர்களின் மறைவு:

நமக்கு அன்பானவர்களையும் கனத்திற் குரிய தலைவர்களையும் இழக்கும்போது, நாம் துக்கப்படுவது இயற்கையானதுதான். ஆயினும், அவர்களுடைய மதிப்பீடுகள், கடின உழைப்பு மற்றும் நற்குணங்களுக்கேற்ப நாம் வாழத் தவறும்போது, அவர்களின் மறைவுக்காக வருத்தப்படுவது பயனற்ற தாகிவிடும். நமது தலைமுறையில் மிகவும் தலைசிறந்த தலைவரும், நமது இயக்கத் தின் முன்னோடி தலைவருமான டாக்டர் சாம் கமலேசன் அவர்களின் இழப்பு, நமக்கு மிகவும் வருத்தத்தை உருவாக்கு கிறது; ஏனெனில், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் ஆளுகைக்குள், கடந்த நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக அவர்களது தலைமைத்துவமும், வழிகாட்டுதலும் நமது இயக்கமாகிய நண்பர் சுவிசேஷ ஜெபக் குழுவைச் சிறப்பாக வடிவமைத்தும், வரை யறுத்தும் வந்துள்ளன. அந்தப் பொன்னான நாட்களுக்காக வருத்தப்படுவதற்கும், ஏங்கு வதற்கும் அப்பால், அவர்கள் விட்டுச் சென்றுள்ள ஊழிய மரபை முன்னெடுத்துச் செல்வதில் நம்மை நாம் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். அதோடு நின்றுவிடாமல், அதையும் கடந்து நமது வருங்கால சந்ததிகளுக்கும் நல்ல ஊழிய மரபை நாமும் விட்டுச் செல்வோம். இம்மாதப் பத்திரிக்கை அவரது வாழ்க்கை மற்றும் ஊழிய விபரங்களை உள்ளடக்கிய தாகக் காணப்படுகிறது.

## எனது பிரியாவிடை:

பொதுச்செயலாளராக இப்பத்திரிக்கையில் ஆசிரியர் தலையங்கம் எழுதுவது இதுவே எனக்குக் கடைசி முறை. எனது ஐந்தாண்டு காலப் பொறுப்பு 2021, மார்ச் 31-ம் தேதியுடன் முடிவடைகிறது. அருள்திரு. ஜாண் பெர்லின் அவர்கள், இந்த ஏப்ரல் மாதம் முதல் அடுத்த பொதுச்செயலாளராகப் பொறுப்பேற்பதால், நான் அவரை மிகவும் மகிழ்வுடன் வரவேற் கிறேன். கடந்த மாத எனது ஆசிரியர் தலையங்கத்தில் அவரை நான் ஏற்கனவே அறிமுகப்படுத்தியிருந்தேன். நானும் எனது குடும்பமும் மீண்டும் ஹரியானா மாநிலத்திற்குச் சென்று, நமது இயக்கத்தின் ஊழியத்தைத் தொடர்ந்து செய்ய எதிர்நோக்கி காத்திருக்கிறோம்.

கிறிஸ்துவின் பணியில்



S. சுதர்சன் தாமஸ் ஜெயராஜ்

# சிலுவையும் உயிர்த்தெழுதலும்!



**சி**லுவை என்பது முரண்பட்டது போல காணப்படும். ஆனாலும் சிலுவை என்பது மரணத்தின் குறியீடு மட்டுமல்ல, மரணத்தைவிட, மேலும் பல காரணிகள் சிலுவையில் உள்ளன. சிலுவை, மரணத்தையும் உயிர்ப்பையும் பற்றியது; வெறுப்பு மற்றும் அன்பு, வன்முறை மற்றும் சமாதானம், குற்றஞ்சாட்டல் மற்றும் மன்னித்தல், பாவம் மற்றும் பரிசுத்தம், நொறுக்கப்படல் மற்றும் முழுமையாக்கப்படல், எல்லாவற்றையும் இழந்தாலும் எல்லாவற்றையும் பெற்றுக்கொள்ளல், அழிவு மற்றும் புதுப்பித்தல், தோல்வி மற்றும் வெற்றி ஆகியவைகளின் சின்னமாகச் சிலுவை திகழ்கின்றது. சிலுவையில் மரணம் என்பது மிகவும் கொடூரமான தண்டனையாயிருந்தது; ஆயினும் தற்போது, நிறைந்த வாழ்விற்கு அடையாளமாகச் சிலுவை திகழ்கின்றது.

மனிதகுலத்திற்காக இயேசுகிறிஸ்துவின் இணையற்ற தியாகமே, இயேசுவின் சிலுவை மரணமாகும். நம்பிக்கையின்மை, மரணம், அழிவு ஆகியவற்றின் அடையாளமாகவே முதல் நூற்றாண்டில் சிலுவை கருதப்பட்டது. இயேசுகிறிஸ்து தம்முடைய மரணம், உயிர்த்தெழுதல் ஆகியவற்றால் மேற்கூறிய நிலைகளை மாற்றியமைத்தார். சிலுவையின் மகிமை என்ன? சமுதாயத்தில் பலவீனமான எந்த மனிதனும் கர்த்தருடைய வல்லமையை விளங்கச்செய்ய முடியும் என்பதேயாகும். சிலுவையின் மருரூபமாக்கும் வல்லமைக்குச் சாட்சியாக நாங்கள் இந்த மாபெரும் ஊழியத்தில் பங்குப்பெறுகின்றோம். செல்வந்தர் மற்றும் ஏழைகள், பிரசித்திப் பெற்றோர் மற்றும் சாமானியர், அதிகாரமுள்ளோர் மற்றும் ஒதுக்கப்பட்டோர் எனப் பல் வேறு மக்கள் தினந்தோறும் சிலுவையின் வல்லமையால் மருரூபம் அடைகின்றனர்.

## *மனிதனை விடுவிக்கும் சிலுவையின் வல்லமை:*

கவலை, பயம் ஆகியவற்றால் மனித இதயம் நிரம்பியிருப்பதால், மனிதர்கள் குற்ற உணர்வுகளுடனேயே வாழ்கின்றனர். எல்லோரும் பாவம் செய்ததால் தேவ மகிமையை இழந்துபோனோம் (ரோமர் 3:9-12,23). நாம் எல்லோருமே பாவத்தினால் குற்ற உணர்வு உடையவர்களாயிருக்கின்றோம். மனம், உணர்வு, உடல்நிலை ஆகியவைகளால் உடலில் மாற்றம் விளையும்போது, பிரச்சனைகளிலிருந்து விடுபட மக்கள் முயல்கின்றனர். பாவ குற்ற உணர்வுகளின் காரணங்களிலிருந்து விடுவிக்கப்பட – சமுதாய மாற்றம், புதிய தத்துவங்கள், போதை மருந்து, மந்திரம், தன்னிடத்தில் பாவமில்லை என மறுத்தல் ஆகியவற்றை மனிதர்கள் நாடி வருகின்றனர். இவற்றின் மூலகாரணமாகிய பாவத்தைச் சிலுவை வெற்றிகரமாக நீக்கியுள்ளது. நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைக்கும்படிக்கு, இயேசுகிறிஸ்து தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார். அவருடைய தழும்புகளால் நாம் குணமாகின்றோம் (1பேதுரு 2:24).

பழைய ஏற்பாட்டில் லேவியராகமம் 4:13-21-ம் பகுதியில் பாவநிவாரணபலியைக் குறித்து வாசிக்கின்றோம். பாவம் செய்தவன் இளங்காளையை ஆசாரியனிடத்திற்குக் கொண்டு வரவேண்டும். ஆசாரியன் தன் கைகளைக் காளையின் மீது வைக்க வேண்டும். இது, மனிதனின் பாவத்தைக் காளைமீது மாற்றுவதாகும். பின்னர், அந்தக் காளை கொல்லப்பட வேண்டும்.

பாவத்திற்குப் பரிகாரமாகக் காளையைப் பலியிடுவதின் காரணமாக, மனிதன் பாவத்தின் தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்கின்றான் (லேவி.4:15-17). இவ்வாறு காளை மனிதனுடைய பாவத்தைச் சுமந்ததின் காரணமாக, மனிதன் பாவத்தி னின்று விடுதலையாகின்றான். பாவத்தின் தண்டனையாகிய மரணத்தைக் காளை ஏற்றுக்கொள்கின்றது.

பாவமறியாத ஆட்டுக்குட்டியாகிய இயேசு, உலகத்தாரின் பாவங்களையெல்லாம் தம்மீது ஏற்றுக்கொண்டு, சிலுவையில் தம்மையே பலியாக ஒப்புக்கொடுத்தார். சிலுவையை நோக்கி ஏன் மக்கள் கவர்ந் திழுக்கப்படுகின்றனர்? சிலுவையின் மீது தங்கள் பாவங்களைச் சுமத்திவிடுவதால், குற்ற உணர்வுகளிலிருந்து மக்கள் விடுவிக்கப்படுகின்றனர். நாம் மனந் திரும்பி, இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெறுகின்றபோது, நம் முடைய பாவங்கள் நமக்கு மன்னிக்கப் படுகின்றன (அப்.2:38).

## நேர்மையாக வாழ்வதற்கான ஆர்வத்தைத் தரும் சிலுவையின் வல்லமை:

எது நல்லது, சரியானது, உண்மை யானது, பரிசுத்தமானது என்பதை ஒரு மனிதன் வாஞ்சித்து, நேசிக்கும் தன்மை யை உருவாக்கும் வல்லமை உடையது, சிலுவை. ஒரு மனிதன் இவ்வுலகில் பூரணத்தை அடைய முடியாது. ஆயினும், பூரணத்துவத்தை அடைய வேண்டும் என்ற தாகத்தைச் சிலுவை ஒரு மனிதனில் உருவாக்குகின்றது. இவ்வுலகிலுள்ள யாதொரு சட்டமும் பூரணத்துவத்தை ஒரு மனிதனின் இதயத்தில் உருவாக்க இயலாது. தண்டனை என்ற மிரட்டல்களால் எது நல்லது என்பதைச் செய்வதற்கு செயல்படுத்த முடியாது. நேர்மையானதை அடைந்துக்கொள்ள சுயகட்டுப்பாட்டினால் முடியாது. எனவே, சிலுவையை நாம் விரும்புகின்றோம்; ஏனெனில், மேற்கூறிய பண்புகளை உருவாக்கும் வல்லமை சிலுவைக்கு மட்டுமே உண்டு.

"நாம் மாம்சத்திற்கு உட்பட்டிருந்த காலத்தில் நியாயப்பிரமாணத்தினாலே தோன்றிய பாவ இச்சைகள் மரணத்திற்கு ஏதுவான கனிகளைக் கொடுக்கத்தக்கதாக நம்முடைய அவயவங்களில் பெலன்செய்தது. இப்பொழுதோ நாம் பழமையான எழுத்தின் படியல்ல புதுமையான ஆவியின்படி ஊழியஞ்செய்யத்தக்கதாக, நம்மைக் கட்டியிருந்த நியாயப்பிரமாணத்துக்கு நாம் மரித்தவர்களாகி, அதினின்று விடுதலை யாக்கப்பட்டிருக்கின்றோம்" (ரோமர் 7:5,6).

கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வதற்கு முன்னதாக மனிதர்கள் பாவத்தினால் இச்சிக்கப்பட்டு, பாவ ஆசைகளுக்குக் கீழ்ப்பட்டிருந்தனர். சிலுவையில் தம்மையே பலியாக ஒப்புக்கொடுத்த இயேசுகிறிஸ்துவை விசுவாசித்தபின்னர், மனிதர்களிடையே நேர்மையான வாழ்வு வாழ்வதற்கான தாகம் ஏற்பட்டது. நியாயப்பிரமாணத்தினால் பாவம் என்றால் என்ன என்பதை அறிந்தோம். ஆனால், சிலுவையின் மூலமாய்ப் பரிசுத்த ஆவியானவர் நம்மில் தூண்டிவிடப்படுகின்றார். சுயமான நம்முடைய செயல்கள் மற்றும் நேர்மை யாக இருக்க நாமாகவே முயற்சித்தல் ஆகியவைகளைச் சிலுவை செயலற்ற தாக்கிவிடுகின்றது. ஏனெனில், கிறிஸ்து மட்டுமே நேர்மையானவர்.

மனிதனின் தோற்றம், மனநிலை ஆகிய வற்றை மாற்ற உலகில் பல காரியங்கள் நடைபெறுகின்றன. ஆனால், சிலுவை மட்டுமே ஒரு மனிதனின் இதயத்தை மாற்ற வல்லதாகும். தனக்குத்தானே ஊழியம் செய்வது மனித வாஞ்சை; ஆனால் சிலுவையில் அறையப்பட்ட இயேசுகிறிஸ்து வுக்கு ஊழியம் செய்யக்கூடிய வாஞ்சையை நம்மில் தூண்டுவது, சிலுவை மட்டுமே!

## 'நாம் நேசிக்கப்படுகின்றோம்' என்ற செய்தியைச் சிலுவை வெளிப்படுத்துகிறது:

மனிதர்களிடம் பரவிக்கிடக்கும் பிரச்சனைகளான வாலிபர் தற்கொலை, மன அழுத்தம், மது, போதை மருந்து, மன முறிவு ஆகியவற்றின் அடிப்படைக் காரணம், குறைந்த அளவிலான சுய மரியாதையே. சில சமயங்களில் மனிதர்கள் தங்களையே விரும்புவதில்லை. தாங்கள் மனிதர்களாக இருப்பதையே சிலர் வெறுக்கின்றனர். இதன் விளைவாக, பிறரிடம் தொடர்பு கொள்வதற்கே சிலர் அல்லல்படுகின்றனர்.

தாங்கள் சரியில்லை என்ற உணர்வோடு வளரும் சிறுவர்கள் கோபம், மனஅழுத்தம், பயம், பாதுகாப்பின்மை என்ற தன்மைகளால் நிறையப்பட்டு, பின்னர் அவர்கள் பெரியவர்களான பிறகு, தாங்கள் குழந்தைகளாயிருந்தபோது ஆட்கொள்ளப்பட்ட தன்மைகளையுடைய குழந்தைகளையே தாங்களும் பெற்று வளர்க்கின்றனர். இந்தத் தொடர்ச்சியை முறிக்கும் ஆற்றல் சிலுவைக்கு மட்டுமே உண்டு. ஏனெனில் சிலுவை உரத்த சத்தமாய்க் கூறுகின்றது, ''தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகில் அன்புகூர்ந்தார்'' – யோவான் 3:16.

"நாம் பெலனற்றவர்களாயிருக்கும்போதே, குறித்த காலத்தில் கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார். நீதிமானுக்காக ஒருவன் மரிக்கிறது அரிது; நல்லவனுக்காக ஒருவேளை ஒருவன் மரிக்கத் துணிவான். நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணினார்'' (ரோமர் 5:6-8). "இனி நான் உங்களை ஊழியக்காரரென்று சொல்லுகிறதில்லை, ஊழியக்காரன் தன் எஜமான் செய்கிறதை அறியமாட்டான். நான் உங்களைச் சிநேகிதர் என்றேன், ஏனெனில் என் பிதாவினிடத்தில் நான் கேள்விப்பட்ட எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தேன்" (யோவான்15:15).

சிலுவை மனிதர்களைத் தன்பக்கமாக இழுக்கின்றது; ஏனென்றால், பிறரை விட அதிகமாகச் சிலுவை மக்களை நேசிக்கின்றது என்பதை அது நமக்கு உணர்த்துவிக்கின்றது. நாம் நேசிக்கப்படக்கூடியவர்கள் அல்ல என்பதை நம்முடைய வாழ்வில் இடைபடுகின்ற மக்களும் நிகழ்வுகளும் கூறினாலும், நாம் எப்படிப்பட்ட நிலையிலிருந்தாலும் கிறிஸ்து நம்மை நேசிக்கின்றார் என்பதற்கு, நிரந்தர உறுதியான சாட்சியாகச் சிலுவை விளங்குகின்றது.

## தாழ்மையோடிருக்க விசுவாசிகளைச் சிலுவை உணர்த்துகின்றது:

சிலுவை மரணத்தைக் கிறிஸ்து மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டார். இயேசு தம்மைத் தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார் (பிலிப்பியர் 2:7,8). நாம் கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையில் அறையப்பட்டோம் (கலா. 2:20). விசுவாசிகளாகிய நாம் நம் சுயத்துக்கு மரிக்கவேண்டும். 'என்னுடைய சித்தம் அல்ல, உம் சித்தமே நிறைவேற்றப்படவேண்டும்' என்பதே நமது ஜெபமாக இருக்க வேண்டும். நம்மை முற்றிலுமாகக் கிறிஸ்துவுக்கு அர்ப்பணிப்பதே கிறிஸ்துவின் சித்தம்

நம்மில் நிறைவேறுவதற்கு ஏதுவாகும். இந்த நிலை நம்முடைய தனிப்பட்ட வாழ்வு, குடும்பம், திருச்சபை, மிஷனெரி ஊழியம், பொதுவாழ்க்கை ஆகியவற்றில் வெளிப்படவேண்டும். இப்படிப்பட்ட நிலையின் வாயிலாக நமக்கல்ல, கர்த்தருக்கு மட்டுமே மகிமை கொண்டுவரப்பட வேண்டும். இயேசு கூறினார், "ஒருவன் என்னைப் பின்பற்றிவர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்" (மத்தேயு 16:24).

## அவரோடுகூடப் பாடுபடும்படி சிலுவை விசுவாசிகளை அழைக்கின்றது:

இயேசுவின் காலத்தில் சிலுவை மரணம் மிகவும் சாபமான தண்டனையாகக் கருதப்பட்டது. இயேசுவின் சிலுவை மரணமானது மிகக் கொடூரமானதாகும். நமக்காக இயேசு அனுபவித்த வேதனைகளை நம்மால் கற்பனைசெய்துகூடப் பார்க்கமுடியாது. அவர் அனுபவித்த அவமானங்கள்: சவுக்கால் அடிக்கப்பட்டார் (மத்.27:26); அடிக்கப்பட்டார், துப்பப்பட்டார் (மத்.27:30); தாடைமயிர் பிடுங்கப்பட்டார் (ஏசா.50:6); பரியாசம் பண்ணப்பட்டார் (மத். 27:26-29); ஆடைகள் உரியப்பட்டார் (மத். 27:35).

சிலுவையிலே இயேசு சாப மரணத்தைத் தழுவினார்; எனவே, இயேசுவோடு பாடுபடும்படி சிலுவை எல்லா விசுவாசிகளையும் அழைக்கின்றது (கலா.5:11; 6:12). சாதாரண மனிதனுக்குச் சிலுவை என்பது குற்றம் புரிவோருக்கான தண்டனைக்கருவி; ஆனால் சிலுவையை நேசிப்பவர்கள் சிலுவையைக் குறித்து பிரசங்கம் செய்து, அதற்காக உபத்திரவத்தையும் அனுபவிக்கின்றார்கள். 'தன் சிலுவையைச் சுமந்துகொண்டு எனக்குப் பின்செல்லாதவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்' (லூக்.14:27). எனவே, புதிய விசுவாசிகளாக மாறியுள்ள நமது சகோதரிகள், சகோதரர்கள், திருச்சபை மூப்பர்கள், சுவிசேஷகர்கள், மிஷனெரிகள் ஆகியோர் ஊழியப்பாதையில் ஏதாவது ஒருவகையில் இன்றும் உபத்திரவத்தைச் சந்தித்துக்கொண்டு இருக்கின்றார்கள்.

## உயிர்த்தெழுதலின் நம்பிக்கை:

சிலுவையிலேயே இயேசுகிறிஸ்துவின் வாழ்க்கை முடிவடைந்திருக்குமென்றால், சிலுவையைப் பற்றிய உபதேசத்தைப் பெரிதாக எடுத்துக்கொள்ள வேண்டிய திருந்திருக்காது. ஆனால், அவர் மீண்டும் உயிரோடெழுந்தார். எந்த சக்தியாலும் அவருடைய உயிர்த்தெழுதலைத் தடுக்க முடியவில்லை. தம்முடைய உயிர்த்தெழுதலைப்பற்றி பலதடவை இயேசுகிறிஸ்து முன்னறிவித்திருந்தார். இதைப் பற்றி அறிந்திருந்த அவரது விரோதிகள் அவரது உயிர்த்தெழுதலை மறைத்து விட முயற்சித்தனர். இந்த உண்மைக்கு எதிராக உலகில் வல்லமை நிறைந்த சக்திகள் பல, கடந்த காலத்தில் அதிகமாக முயற்சித்தன; ஆனால், தங்கள் முயற்சியில் அவர்கள் வெற்றி பெறவில்லை. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் மூலம் 'உயிர்த்தெழுதல் மற்றும் அதன்பின் உள்ள நித்திய வாழ்வு' ஆகியவற்றிற்கான நம்பிக்கையைச் சிலுவை நமக்குக் கொடுக்கின்றது. ஆகவே, இவ்வுலகில் அன்பு மற்றும் நம்பிக்கை ஆகியவற்றை அழியா சத்தியங்களாக எடுத்துக்கூறுகின்ற கருவிகளாகக் கர்த்தர் நம்மைப் பயன்படுத்த, அவருடைய பலத்த கரங்களில் இன்று நம்மை ஒப்புவிப்போமாக!

– அருள்திரு. பிராங்க்ளின் ஏசுபாதம்,
*FMPB, வடஇந்திய விரிவாக்கப்பணி செயலர்.*



# அருள்திரு. அறிவர். சாமுவேல் தியோடர் கமலேசன் அவர்களின்

## வாழ்க்கையும் ஊழியமும்

அருள்திரு. அறிவர். சாமுவேல் தியோடர் கமலேசன் அவர்கள், உலக பிரசித்திப்பெற்ற ஓர் இந்திய ஊழியர். இவர் கெம்பீரமான ஆளுமை பண்புகளும், தோற்றமும், கனத்தக்குரலில் பாடக்கூடிய தாலந்துகளும், திறமைகளும், ஊழிய தலைமைத்துவப் பண்புகளும், தேவவரங்களும் ஒருங்கே பெற்றவர். இவர் 1930 நவம்பர் 18-ம் தேதி, வேலூரில் திரு. ஜோப் சுந்தரேசன் & திருமதி லில்லி சுந்தரேசன் என்ற தம்பதியரின் ஏக செல்வப்புதல்வனாகப் பிறந்தார். இவரது தாயார் இவரை வேலூரிலுள்ள கிறிஸ்தவ மருத்துவக்கல்லூரியில் வைத்து பெற்றெடுக்கும்போது, அக்குழந்தை அழாததால், பிரசவம் பார்த்த டாக்டர் திருமதி தாமஸ் அவர்கள் குழந்தையின் முதுகில் தட்டவே, குழந்தை கனத்தக்குரலில் உரத்த சத்தமாய்க் கத்தியது. அந்நேரம் அந்தப் பிரசவ வார்டு வழியாக வந்த டாக்டர் ஐடா ஸ்கடர் அவர்கள் அந்த அழுகுரலைக் கேட்டு வியந்து, அக்குரலில் ஏதோ ஒரு தனித்துவம் இருப்பதை அடையாளம் கண்டார்கள். ஆனால், இந்தக் குரல்தான் உலகெங்கிலும் தேவராஜ்யத்தை நிறுவுவதற்காக தேவனால் வருங்காலத்தில் பயன்படுத்தப்படவிருக்கின்ற கெம்பீரமான குரல் என எவரும் அப்பொழுது அறிந்திருக்கவில்லை!

அண்ணன் கமலேசன் அவர்கள், தனது பள்ளிக்கல்வியை முதலாவது திருச்சி யிலுள்ள ஈ.ஆர். பள்ளியிலும், பின்னர் பிஷப் ஹீபர் உயர்நிலைப்பள்ளியிலும் பயின்றார். இவரது தாயார் அப்பொழுது சாவித்திரி வித்யாலயாவில் பணிபுரிந்து வந்தார். பின்னர் அண்ணன் கமலேசன் அவர்கள், மதுரையிலுள்ள அமெரிக்கன் கல்லூரியில் தனது இடைநிலைப்படிப்பை முடித்தவுடன், இவரது தாயார் இவரிடம், திருச்சியிலுள்ள ஃபோர்ட் தேவாலய ஆராதனையின்போது இவரை ஊழியத்திற்கென தான் பொருத்தனை பண்ணியுள்ளதாகக் கூறவே, இவரால் அதை ஏற்றுக்கொள்ளவே முடியவில்லை. ஆனால், இவரது தாயாரோ தனது அர்ப்பணிப்பை நிறைவேற்றி முடிக்க ஆண்டவர் தனக்கு உதவிசெய்யத் தொடர்ந்து மன்றாடி வந்தார். ஆண்டவர் இவரது தாயாரின் விண்ணப்பத்தைக் கனப்படுத்தி, அண்ணன் கமலேசன் அவர்கள் சென்னை கால்நடை மருத்துவக்கல்லூரியில் படிக்கும்போது, இவரைத் தமது பணிக்கென தெரிந்துக்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆவிக்குரிய மற்றும் ஊழிய வாழ்வின் ஆரம்பம்:

அண்ணன் கமலேசன் அவர்கள் ஏழாம் தலைமுறை கிறிஸ்தவ குடும்பத்தைச்

சார்ந்தவராயிருந்தாலும், இவருக்கு அப்போது இரட்சிப்பின் அனுபவம் இல்லா திருந்தது. இவர் சென்னை கால்நடை மருத்துவக்கல்லூரியில் பயின்று வந்தபோது, இவரது கல்லூரி விடுதி அறை நண்பராகிய சங்கரநாராயணன் அவர்கள், இவரைக் கிறிஸ்துவண்டை வழிநடத்தினார். இவர் அனைத்துலக நற்செய்தி மாணவர் ஐக்கியத்தில் (UESI) மிஷனெரிப் பிரதிநிதியாகத் தெரிந்தெடுக்கப்பட்டு, டாக்டர் நார்டன் ஸ்டெரெட் மற்றும் பேராசிரியர் ஏனோக் அவர்களால் ஆவிக்குரிய வளர்ச்சியின் பாதையில் வழிநடத்தப்பட்டார். மேலும், இவர் சென்னையிலுள்ள கல்லூரிகளில் நடத்தப்பட்டு வந்த 'இவாஞ்சலிக்கல் யூனியன்' என்கிற அமைப்பின் முதல் தலைவராகவும் தெரிந்தெடுக்கப்பட்டார். **இதன்மூலம், ஒரு சிறுகுழுவாகக் குறிப்பிட்ட நோக்கத்திற்காக அர்ப்பணிக்கும்போது, தேவன் எந்தவொரு தனிநபரையும் சமுதாயத்தை மாற்றக்கூடிய மாபெரும் சக்தியாக உருவாக்க முடியும் என இவர் கண்டுக்கொண்டார்.**



அண்ணன் கமலேசன் அவர்கள் தனது சகநண்பர்களான திரு. தியோடர் வில்லியம்ஸ், திரு. ஃப்ரடெரிக் கோக் காவி மற்றும் திரு. ஃப்ரெடி டேவிட் ஆகியோருடன் இணைந்து, சகோ. பி. சாமுவேல் அவர்களின் தலைமையில் 1952-ம் ஆண்டு முதன்முதலாக விடுமுறை வேதாகமப்பள்ளியை (VBS) ஆரம்பித்து நடத்தி வந்தார்கள். சிறுவர்கள் மத்தியில் ஊழியம் செய்வது, பரிவுடன் கேட்கும் திறனையும் சுவிசேஷத்தைப் பகர்ந்துக்கொள்ளும் தாலந்துகளையும் வளர்த்துக்கொள்ள மிகவும் ஏதுகரமாயிருக்கிறது என்பதை இவர்கள் உணர்ந்துக் கொண்டனர்.

## போதகரும், சுவிசேஷ ஊழியருமாக மாறிய கால்நடை மருத்துவர்:



அண்ணன் கமலேசன் அவர்கள், குமாரி. அடிலா சில்வியாவை 1953 மே 27-ம் தேதி திருமணம் செய்துக்கொண்டு, மகிழ்ச்சியாகத் தனது குடும்ப வாழ்வை ஆரம்பித்தார். ஆரம்பக்காலங்களில், இரண்டுபேருமாகச் சேர்ந்து சென்னையிலுள்ள குழந்தைகள், மாணவ மாணவிகள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் தெருவீதிகளில் ஊழியம் செய்து வந்தனர். 1956-ம் ஆண்டு பில்லிகிரஹாமின் மாநாடு, சென்னை - டவுட்டன், கோரிபள்ளி மைதானத்தில் வைத்து நடைபெற்றபோது, அண்ணன் கமலேசனும், இவரது மனைவி திருமதி அடிலா கமலேசன் அவர்களும் அவ்வரலாற்று சிறப்புமிக்க மாநாட்டில் ஆலோசனை ஊழியம் செய்யும் வாய்ப்பைப் பெற்றார்கள். அநேகர் இவர்களுடைய ஆலோசனை ஊழியத்தின் வாயிலாக தேவனால் தொடப்பட்டதைக் கண்ட இவர்கள், 1957-ல் பெற்ற கால்நடை மருத்துவ இளங்கலைப் பட்டத்தை ஒதுக்கி வைத்துவிட்டு, முழுநேர ஊழியம் செய்யத் தீர்மானித்தார்கள்.

இவர்களது அர்ப்பணிப்பைப் பார்த்த, வட கர்நாடகாவில் ஊழியம் செய்துவந்த போதகர் சீமெண்ட்ஸ் என்ற மெதடிஸ்ட் மிஷனெரி, அண்ணன் கமலேசன் தம்பதியை அமெரிக்காவிலுள்ள ஆஸ்பரி இறையியல் கல்லூரியில் வேதப்பண்டிதம் படிக்க ஊக்கப்படுத்தினார். அதன் விளைவு 1960-ம் ஆண்டு அண்ணன் கமலேசன் அவர்கள், அக்கல்லூரியில் இறையியல் படிப்பில் முதுகலைப் பட்டம் பெற்றார். இப்படிப்பு, ஊழியத்தில் இவருக்கு ஒரு முழுமையான அணுகுமுறையைக் கற்றுக்கொடுத்ததோடு, அதை இவர் பின்னர் தனது ஊழியத்தில் நடைமுறைப்படுத்தவும் ஏதுவாயிற்று. இந்தியாவில் சுவிசேஷம் அறிவிக்கவும் மற்றும் சமூக மாற்றத்திற்கான வளங்களை உருவாக்கவும் தேவையான ஒரு விவசாயப்பண்ணையைத் திறக்க வேண்டுமென்பது இவரது முக்கிய கனவாகக் காணப்பட்டது. இதுவே சேலம் மாவட்டம், டேனிஷ்பேட்டை என்கிற இடத்தில் 1962-ம் ஆண்டு பெத்தேல் விவசாயப்பண்ணையைத் திறக்க ஓர் தூண்டுகோலாயிற்று. அண்ணன் கமலேசன் அவர்கள் இந்தப் பண்ணையின் தலைவராக சகோ. பி. சாமுவேல் அவர்களுடன் இணைந்து செயல்பட்டார். அதன் விளைவாக பெத்தேல் நிறுவனம் – பள்ளி, நூலகம், மற்றும் விவசாயப்பண்ணை ஆகியவற்றை உள்ளடக்கியதாக உருவாயிற்று. அண்ணன் கமலேசன் அவர்களுக்கு வெளிநாட்டு ஊழிய வாய்ப்பும் நாளுக்குநாள் பெருகிக்கொண்டேயிருந்தது. திருமணமான ஏழு வருடங்களுக்குப் பிறகு, அண்ணன் கமலேசன் தம்பதியருக்கு தேவன் சுந்தர்ராஜ் மாற்கு, மனோகரன் பால் என்கிற இரு மகன்களையும், நிர்மலா என்கிற மகளையும் கொடுத்து ஆசீர்வதித்தார்.



பின்னர் அண்ணன் கமலேசன் அவர்கள், 1961-ம் ஆண்டு சென்னையிலுள்ள இம்மானுவேல் மெதடிஸ்ட் திருச்சபையின் போதகராகப் பொறுப்பேற்று, முதல் ஏழு வருடங்களும் பின்னர் 1971 – 1974 வரையுள்ள வருடங்களும் போதகராக ஊழியம் செய்தார். அதன் விளைவாக அத்திருச்சபை பெரிய வளர்ச்சியையும், எழுப்புதலையும் கண்டதோடு, இவரது ஆங்கிலச் செய்தி மற்றும் பாடல்களால் அநேக இளைஞர்கள் ஈர்க்கப்பட்டு, திரளாக வரிசையில் நின்று இவரிடம் ஜெபித்தும், ஆலோசனை பெற்றும் சென்றார்கள். 1963-ம் ஆண்டு இவருக்குத் தெற்கு ஆசியாவின் சுவிசேஷகராக மெதடிஸ்ட் திருச்சபை அமைப்பால் பொறுப்பளிக்கப்பட்டது. பின்னர் இவர் மீண்டும் அமெரிக்கா சென்று, அங்குள்ள ஆஸ்பரி இறையியல் கல்லூரியில் இறையியலில் டாக்டர் பட்டம் பெற்றார். 1971-ல் அங்குள்ள எமோரி பல்கலைக்கழகத்தில் உள்ளூர் திருச்சபை ஊழியத்திற்கான அர்ப்பணிப்பு என்கிற பாடத்தலைப்பில் மற்றுமொரு டாக்டர் பட்டமும் பெற்றார். 2003-ம் ஆண்டு ஆஸ்பரி இறையியல் கல்லூரி இவரது ஊழியத்தைப் பாராட்டி, கௌரவ டாக்டர் பட்டத்தையும் கொடுத்து கௌரவித்தது.

## நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு தலைவர்:



1962-ம் ஆண்டில், இவர் சகோ. தியோடர் வில்லியம்ஸிடமிருந்து நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவை வழிநடத்திச் செல்வதற்கான பொறுப்பைப் பெற்றார். 1968-ம் ஆண்டில், நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு சங்கமாக அரசாங்கப்பதிவைப் பெற்றபோது, டாக்டர் சாம் கமலேசன் அவர்கள் அதன் தலைவராகவும், சகோ. எமில் ஜெபசிங் அவர்கள் பொதுச் செயலாளராகவும், சகோ. பேட்ரிக் ஜாஷ்வா அவர்கள் நிதிக்காவலாளராகவும் பொறுப்பேற்றுக் கொண்டனர். அதன்பின்னர் இவர் இம்மாபெரும் இயக்கத்தை இந்திய சுதேச இயக்கமாக நடத்தத் தீர்மானித்து, நமது தேசத்தைச் சுவிசேஷத்தால் சந்திப்பதை முழுவதுமாகத் தங்களை ஊழியத்திற்கென ஒப்புக்கொடுத்த தம்பி, தங்கைகள் மூலமாகவும் செயல்படுத்தி வந்தார்கள். டாக்டர் கமலேசன் அவர்களுக்கு அகில உலக ஊழிய உறவு அதிகம் காணப்பட்டாலும், இந்தியா சுதந்திரமடைந்த பின் இந்தியாவில் காணப்பட்ட வெள்ளையர்கள் மற்றும் அவர்கள் மீது இருந்த ஏகாதிபத்திய வெறுப்பைத் தனது கருத்தில் கொண்டு, முழுக்க முழுக்க இவ்வூழியத்தை இந்திய மண்ணிலேயே வேரூன்றுவதற்கான தூரதரிசன திட்டங்களை நடைமுறைப்படுத்தியது மிகவும் வியக்கத்தக்கது.

கமலேசன் அண்ணன் அவர்கள், அடிக்கடி FMPB-யையும் பெத்தேலையும் தனது இரு கண்களாகவே குறிப்பிடுவது வழக்கம். சேலம், பெத்தேலில் வருடந்தோறும் நடைபெறும் FMPB-ன் தமிழ் மாநில மாநாட்டில் தேவனுடைய வார்த்தையை இவர் தவறாமல் பகர்ந்துக் கொண்டு வந்தமை, தமிழ் திருச்சபை மற்றும் கிறிஸ்தவ சமுதாயத்தில் ஒரு பெரிய ஆவிக்குரிய மற்றும் மிஷனெரி தரிசன எழுப்புதலை உருவாக்கிற்று. **மக்கள் மீதான இவரது தனிப்பட்ட அன்பு, கரிசனை, பெயர் முதலாய் ஞாபகம் வைத்து அழைப்பது மற்றும் இவரது ஆலோசனை கொடுக்கும் பாங்கு அநேகரை ஆவிக்குரிய முதிர்ச்சிக்கு நேராக அதிகம் வழிநடத்திற்று. இதன் விளைவாக எண்ணற்ற இளைஞர்கள் பலர், மிஷனெரிகளாகவும் தலைவர்களாகவும் உருவாயினர்.**

## கிறிஸ்தவ உலகில் இவரது தலைமைத்துவம்:

1974-ம் ஆண்டு சுவிட்சர்லாந்தில் லோசான் நகரில் நடைபெற்ற, உலகைச் சுவிசேஷ மயமாக்குவது குறித்த சர்வதேச மாநாட்டிற்கு, டாக்டர் கமலேசன் அவர்கள் தலைமை தாங்கினார்கள். அதே ஆண்டில், வேர்ல்ட் விஷன் இன்டர்நேஷனலிலும் தலைமைப்பொறுப்பை ஏற்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டார். 1974 முதல் 1996 வரை வேர்ல்ட் விஷன் இன்டர்நேஷனலில் துணைத்தலைவர்களில் ஒருவராக நியமிக்கப்பட்ட முதல் இந்தியரான இவர், அதில் பல்வேறு பொறுப்புகளை வகித்து வந்தார். இவர் உலகமெங்கிலும் பயணங்களை மேற்கொண்டும், அநேக தேசத்தி லுள்ள பல்வேறு கலாச்சார பின்னணியங்களைக் கொண்ட போதகர்கள் மற்றும் ஊழியர்களுக்குப் போதித்தும், அவர்களிடையே வேறுபாடுகளைக் களைந்தும், ஒற்றுமை

யைச் செயல்படுத்தியும் வந்தார். இவரது ஆவிக்குரிய ஊக்கமான வார்த்தைகளும், ஜெபங்களும் அநேகரைக் கிறிஸ்தவ விசுவாசத்தில் உறுதியாக நிற்கப் பெரிதும் வழிநடத்தியது.

மேலும் டாக்டர் கமலேசன் அவர்கள், சுவிசேஷம் எட்டப்படாத மற்றும் சுவிசேஷத் திற்கு மூடிய வாசலை உடைய தேசங்களுக்கும் தனது உயிரைப் பணயம் வைத்து, ஊழியங்களைச் சிறப்பாக மேற்கொண்டு வந்தார். ஆதலால் கம்யூனிச நாடுகளில்கூட பிரசங்கிக்கவும், ஊழிய கருத்தரங்குகள் நடத்தவும் தேவன் இவரை வழிநடத்தினார். மத்திய அமெரிக்காவில் எல்சால்வடாரில் ஆயுதமேந்திய கிளர்ச்சியாளர்களால் வழிமறிக்கப்பட்ட இவர், அவர்களையும் தனது ஜெபத்தால் வென்று, அங்கும் தேவவார்த்தைகளைப் பகர்ந்துக்கொள்வதற்கான தனது பயணத்தைத் தொடர்ந்தார். கேரளாவில் ஆண்டுதோறும் நடைபெறும் மாராமன் மாநாட்டிலும் இவர் அடிக்கடி செய்தி யாளராக அழைக்கப்பட்டு, பயன்படுத்தப்பட்டு வந்தார். **இவர் உலகிலுள்ள எவரையும் விட அதிகமான நாடுகளில் உள்ள திருச்சபைத் தலைவர்களுடன் செய்தியளித்ததாகச் சிலர் மதிப்பிடுகின்றனர்.**

இவர் நான்கு புத்தகங்களை அதாவது, ‘இயேசு ஜீவிப்பதால் மனுக்குலம் ஜீவிக்கிறது,’ ‘திருமண வாழ்வோ அல்லது தனித்த வாழ்வோ: மகிழ்ந்திருங்கள்,’ ‘மறுமலர்ச்சியைத் தரும் இயேசுவின் வல்லமை,’ மற்றும் தமிழில் ‘வாழ்விக்கும் கிறிஸ்து’ எனும் புத்தகத்தையும் எழுதியுள்ளார். மேலும், பல பாடல் ஆல்பங்களைத் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் பதிவுச் செய்துள்ளார்.

## திருச்சபை மிஷனெரி ஊழிய உறவு:

திருச்சபையோடு FMPB மிஷனெரி இயக்க உறவை வலுப்படுத்த, டாக்டர் கமலேசன் அவர்கள் அரும்பணியாற்றினார்கள். இவரது தலைமையின்கீழ் NSM, FES போன்ற சகோதர அமைப்புகளுடன் ஊழிய உறவுகள் உருவாக்கப்பட்டன. இவர் வட இந்தியா, தென் இந்தியா மற்றும் வடகிழக்கு இந்தியாவிலுள்ள திருச்சபைத்தலைவர்கள் மற்றும் ஊழிய நிறுவனங்களுடன் நல்ஊழிய உறவுகளை ஏற்படுத்தினார். இதனால் இந்தியா விலுள்ள அநேக திருச்சபை மற்றும் ஊழிய அமைப்புகளுடன், குறிப்பாக எஃபிகோர், பெத்தேல், பிபிஜ மற்றும் YCLT ஆகிய ஊழிய அமைப்புகளும் FMPB-ம் இணைந்துச் செயல்பட அதிக வாய்ப்பாயிற்று.

2000-ம் ஆண்டில் அகமதாபாத்திலுள்ள சி.என்.ஐ. ராய்காட் வளாகத்தில் வைத்து நடைபெற்ற இவரது கூட்டங்கள், திருச்சபை மிஷனெரி ஊழிய உறவிலே பெரும் எழுப்புதலையும் தாக்கத்தையும் கொண்டு வந்தன. சி.என்.ஐ குஜராத் பேராயத்தோடு FMPB-ன் 211 இளந்திருச்சபைகளை இணைப்பதில் இவர் முக்கியப்பங்கு வகித்தார். சி.என்.ஐ சினாட் தலைவர்களும் மற்றும் குஜராத் பேராயப்பிரதிநிதிகளும் டாக்டர் கமலேசன் அவர்களின் தலைமைத்துவம், ஆளுமை, அர்ப்பணிப்பு மற்றும் திருச்சபை - மிஷனெரிப்பணியின் உயரியக் கொள்கைகளை அறிந்து தேவனை

மகிமைப்படுத்தினார்கள். மேலும், மகாராஷ்டிரா மற்றும் குஜராத்தின் எல்லைகளிலுள்ள மொராம்பா கிராமத்தில் நடைபெற்ற வசாவா இனமக்களின் வெள்ளி விழா மாநாட்டில் இவர் கலந்துக்கொண்டு அவர்களை ஊக்குவித்தது – அனைத்து விசுவாசிகள், சுதேச ஊழியர்கள் மற்றும் மிஷனெரிகளின் மத்தியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

மேலும், 2009 மே மாதம் 31–ம் தேதி, FMPB–ன் தலைமைப்பொறுப்பில் தனக்கான கடைசிநாளன்று மகாராஷ்டிரா, மும்பையில் வைத்து நடந்த மெதடிஸ்ட் மாநாட்டில் காந்தேஷ் பிராந்தியத்திலுள்ள 57 இளந்திருச்சபைகளை மெதடிஸ்ட் திருச்சபை அமைப்போடு இணைத்ததிலும் இவரது பங்களிப்பு பெரிதும் காணப்பட்டது.

பின்னர் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் 'முன்னோடித் தலைவராகப்' போதகர்கள் மற்றும் மிஷனெரி மாநாட்டு கூட்டங்களில் தனது தீவிரமான பங்களிப்பைத் தொடர்ந்து அளித்துவந்தார். 2015–ம் ஆண்டு மே மாதம் சி.என்.ஐ சினாடு பவனில் வைத்து நடைபெற்ற சி.என்.ஐ பேராயர்கள் மாநாட்டில் திருச்சபைத் தலைவர்களும், மிஷனெரிப்பணி இயக்கங்களில் பொறுப்பாளர்களும் இணைந்துத் தீவிரமாகச் சுவிசேஷத்தை அறியப்படாத மக்கள் மத்தியில் எடுத்துச்செல்வதற்கான வழிமுறைகள் மற்றும் யுக்திகளை ஆராய்ந்து அறிய இவர் வழிநடத்தியமை, திருச்சபை–மிஷனெரிப்பணி உறவிலே ஒரு மறக்கமுடியாத மைல்கல்லாக அமைந்தது.

## இழப்பைக் கையாளுதல்:

டாக்டர் கமலேசன் அவர்களுடைய மகள் திருமதி நிர்மலாவின் மகன் ஜோனத்தான் 1998–ம் ஆண்டு தனது இளமைப்பருவத்திலேயே மரித்ததும், தன்னுடைய மனைவி திருமதி அடிலா 2013 ஜுன் 23–ம் தேதி இவ்வுலக ஓட்டத்தை முடித்ததும் இவருக்கு மிகவும் அதிர்ச்சியாகவே காணப்பட்டது. அத்துடன் இவருடைய இளைய மகன் திரு. மனோகர் பால் ஆப்கானிஸ்தானில் 2019 ஜனவரி 14–ம் தேதி குண்டு வெடிப்பில் உயிரிழந்ததும் இவரை மிகவும் பாதித்தது. **தனது மகனின் அடக்க ஆராதனையில் இவர் பிரசங்கம் செய்யும்போது, துக்கத்துடன் காணப்பட்டவர்களை உற்று நோக்கி, அமைதியாக, "எனது மகன் எங்கே போயிருக்கிறார் என்பது எனக்குத் தெரியும்; அங்கு அவர் நன்றாகவே இருக்கிறார்" என்று இவர் கூறியதோடு, குண்டு வெடிப்பிற்குக் காரணமான அனைவரையும் தான் மன்னிப்பதாகக் கூறியமை, பெரும் வியப்பையும் தேவன்பால் இவர் கொண்டுள்ள ஆழமான விசுவாசத்தையும் அழகாக ஊர்ஜிதப்படுத்தியது.**

## இறுதி நாட்கள்:

இவர் இந்தியாவில் கடைசியாக 2016 மார்ச் 1–ம் தேதி, FMPB–ல் கடந்த 5 ஆண்டு களாகப் பொதுச்செயலாளராகப் பணியாற்றிய அருள்திரு. சுதர்சன் தாமஸ் ஜெயராஜ் அவர்களின் பொறுப்பு நியமன ஆராதனையில் கலந்துக்கொண்டு தேவசெய்தி யளித்தபோது, இவருக்கு வயதுமுதிர்ச்சியால் ஏற்பட்டுள்ள பெலவீன அறிகுறிகளை

அக்கூட்டத்தில் அனைவரும் உணர்ந்தார்கள். பின்னர் கடந்த பிப்ரவரி 28-ம் தேதி, 2021 இவர் இவ்வுலக ஓட்டத்தை இனிதே முடித்து கர்த்தருடைய மகிமைக்குள் பிரவேசித்தார். அன்னாரின் அடக்க ஆராதனை 2021 மார்ச் 12-ம் தேதி அமெரிக்க தேசத்திலுள்ள ஜியார்ஜியா மாநிலத்தில் இருக்கின்ற சவன்னா பட்டணத்தி லுள்ள கம்யுனிட்டி பைபிள் தேவாலயத்தில் வைத்து அத்தேசத்தின் நேரப்படி சரியாகக் காலை 10 மணிக்கு வெகுசிறப்பாக நடைபெற்றது.



டாக்டர் சாம் கமலேசன் அவர்கள், கிட்டத்தட்ட அறுபது ஆண்டுகளாக உலகமெங்கிலும் தேவனால் பயன்படுத்தப்பட்ட ஓர் விலைமதிப்பற்ற பாத்திரம். இவர் தனது இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவிடம் கொண்டிருந்த அன்பு, இவரது வார்த்தையில் மட்டுமல்ல, இவரது வாழ்க்கையிலும் மிக நேர்த்தியாக வெளிப்பட்டது. இவர் தனது போதனைகளில் தேவராஜ்ய மதிப்பீடுகளையும், இயேசுவின் குடும்பமாக மக்கள் அனைவரும் அன்போடும், ஐக்கியத்தோடும், எந்த ஏற்றத்தாழ்வுமின்றி வாழவேண்டும் என்பதையும் பெரிதும் வலியுறுத்தி வந்தார். இவரது பிரசங்கங்கள் மக்களைத் தேவனோடும், சக மனிதர்களோடும் இணைப்பதை அடிப்படையாகக் கொண்டதாகவே பெரும்பாலும் காணப்பட்டது. “தேவராஜ்ய கண்ணோட்டத்தில் நாம் ஒரு குற்றவாளியை மன்னிப்பது நமது பெலவீனத்தின் அடையாளமல்ல. மாறாக, அது நமக்கு அதிக பெலனே!” என்று இவர் கூறியது மட்டுமல்லாமல் அதைத் தனது வாழ்வில் நடைமுறைப்படுத்தியும் காட்டினார். இவர் தனது வாழ்நாட்களில் ஒரு குத்துச்சண்டை வீரராகவும், கிரிக்கெட் ரசிகராகவும், உடற்பயிற்சி செய்வதில் தனிகவனம் செலுத்துபவராகக் காணப்பட்டாலும், இவர் தனது சொந்தநலனைவிட குடும்பநலனுக்கும், ஊழியநலனுக்கும் பெரிதும் முக்கியத்துவம் கொடுத்து செயல்பட்டு வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் தனது வாழ்நாள் முழுவதும் அப்பழுக்கற்ற வாழ்க்கை வாழ்ந்தமையும், இவ்வுலகப் போராட்டத்தைக் கர்த்தருக்குள் வெற்றியாக முடித்தமையும் தேவநாமத்திற்குப் பெரிதும் மகிமை சேர்ப்பதாக அமைந்துள்ளது. இவரது வார்த்தைகளையும், இவரது முன்மாதிரி யான வாழ்க்கையையும், இவர் விட்டுச்சென்றுள்ள நல்லாவிக்குரிய மரபுகளையும் தவறாது பின்பற்றுவதே நாம் இவருக்கு அளிக்கக்கூடிய இறுதி கனமும், சிறந்த கைமாறும் ஆகும்.

*தொகுப்பு:* திருமதி மேகலா பிரபாகர் & அருள்திரு. பிரபாகர் என். (FMPB)

*ஆதாரங்கள். World Evangelization & Christian Leadership - JTK Daniel, Tamil Biography - Sis. Lalitha Chellappa, Plentiful Harvest - FMPB, Patti Heritage.* https://foxandweeks.com



# அருள்திரு. அறிவர். சாம் கமலேசன்

## (நினைவலைகளும், நிஜவார்த்தைகளும்)

டாக்டர் சாம் கமலேசன் அவர்கள் ஒரு ஆவிக்குரிய வழிகாட்டியாகவும், அறிவுரையாளராகவும், போதகராகவும், தலைவர்களை உருவாக்குகிறவராகவும், பாடகராகவும் உலகமெங்கிலுமுள்ள அநேகருக்கு ஆசீர்வாதத்தின் வாய்க்காலாகவும் காணப்பட்டார். இவர் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் நீண்டக்கால தலைவராக 47 வருடங்கள் மிகவும் சிறப்பாகச் செயல்பட்டு வந்தமை, இந்திய மிஷனெரியியல் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை. அவரோடுகூட நெருக்கமாக ஊழியம் செய்தவர்களில் சிலர் அவரைப்பற்றி கொண்டுள்ள நினைவலைகளிலிருந்தும், நாம் பதிவுச்செய்த பலரது நிஜவார்த்தைகளிலிருந்தும் சிலவற்றைத் தொகுத்து தேவநாம மகிமைக்காகவும், அநேகருக்கு ஆசீர்வாதமாகவும் பின்வருமாறு கீழே தருகிறோம்.

### கருத்து ஒற்றுமைக்காக கால்களைக் கழுவுவதும் அவரது ஊழிய மரபு!

ஒரு குத்துச்சண்டை வீரர் குருவானவரானார். ஒரு சிறிய நகரத்திலுள்ள ஏழை விதவையின் ஜெபம், அவரது குழந்தையை உலக பிரசித்திப்பெற்ற போதகராகவும், வேதப்பண்டிதராகவும், சுவிசேஷகராகவும் மாற்றிற்று. டாக்டர் கமலேசன் ஒரு மாபெரும் தலைவர் மட்டுமல்ல, நூற்றுக்கணக்கான இரண்டாம் தலைமுறை தலைவர்களை உலகெங்கிலும் உருவாக்கி அழகு பார்த்தவர். இவர் ஆவிக்குரிய அதி காரத்தையும், தீர்க்கமான மற்றும் தெளிவான சிந்தனைகளையும் கொண்டிருந்தாலும், அவைகளை நடைமுறைப்படுத்த குழுவாகக் கூடி தீர்மானிப்பதற்கே உடன் ஊழியர்களை வழிநடத்தினார். இவர் குழுவாக ஒருமித்த கருத்தை எட்டுவதற்கு கடுமையாகவும், பொறுமையுடனும் பாடுபட்டார். அதற்காக அவ்வப்போது இவர் கமிட்டி அங்கத்தினர்களின் கால்களைக் கழுவிய நிகழ்ச்சிகளும் உண்டு. தேவராஜ்யத்திற் கான இவரது பார்வை, இவர் பொறுப்பேற்று நடத்திய ஊழியங்களைவிடவும் மிகவும் பெரிதாகக் காணப்பட்டது.

**– சகோ. எபிநேசர் சுந்தர் ராஜ்,**

முன்னாள் பணித்தள இயக்குனர் – FMPB; முன்னாள் தலைவர் – IMA; நிறுவனர் – CIM

### கல்லூரி படிப்பினூடே சுவிசேஷத்தைப் பறைசாற்றுவதில் வெட்கப்படாதவர்!

1957-ம் ஆண்டில், சென்னை கால்நடை மருத்துவக்கல்லூரியின் இறுதியாண்டு மாணவனாக கமலேசன் அண்ணன் படித்துக்கொண்டிருக்கும்போது, நான் முதலா மாண்டு மாணவனாக அக்கல்லூரியில் சேர்ந்தேன். கல்லூரியில் நடைபெற்ற ஒரு பெரிய விழாவின்போது, அவர் ஏற்கெனவே ஒரு பெரிய பாடகராக அறியப்பட்டிருந்ததால், அதில் சிறப்புப்பாடல் பாடும்படி மேடைக்கு அழைக்கப்பட்டார். "தேவன் மற்றவர்களுக்குச்

செய்ததை உங்களுக்கும் செய்வார், அது ஒன்றும் இரகசியமல்ல" என்று அவர் தனது மிகவும் உள்ளார்ந்த அனுபவத்தோடு பாடிய அக்கிறிஸ்தவப் பாடலால் அநேக மாணவ மாணவியர் தங்களை தேவனுக்கென்று அர்ப்பணித்தார்கள். கல்லூரி நாட்களில் அவர் பாடகராக மட்டுமல்லாது, நல்ல ஒரு குத்துச்சண்டை வீரராகவும் காணப்பட்டதால், ஒரு குத்துச்சண்டை போட்டியில், பளுதூக்குதல் போட்டியில் பேர்பெற்ற செருக்கான உடல் கட்டமைப்புக் கொண்ட ஒரு வீரரிடம் அவர் குத்துச் சண்டை போடவேண்டிய கட்டாயம் அவருக்கு வந்தது. அப்போட்டியில் எதிர் முனையிலிருந்த அவ்வீரரை கமலேசன் அண்ணன் ஒரே சுற்றில் கீழே விழத்தள்ளி வெற்றி கண்டார். அதைக்கண்டு வியந்த நான், அவரிடம் இது எப்படி சாத்திய மாயிற்று? என்று கேட்டபோது அவர், "'தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்' (யாக்கோபு 4:6) என்கிற வசனத்தைச் சுட்டிக்காட்டி, என்னை எதிர்த்து வந்தவர் பெருமையோடு காணப்பட்டதைக் கண்டு, நான் தேவஒத்தாசையை நாடியபோது, என்னில் எங்கிருந்தோ ஓர் வல்லமை புறப்பட்டு வந்ததை உணர்ந்தேன்; தேவகிருபையால் அவ்வீரரை வென்றேன்" என்று கூறினார். பொதுவான நிகழ்ச்சிகளில்கூட, இவ்வாறு தேவசாட்சியாக அவர் விளங்கியது குறிப்பிடத்தக்கது.

**– டாக்டர் சந்திரசேகர்,**
FMPB – முன்னாள் துணைத்தலைவர்; NSM – முன்னாள் இயக்குனர்.

## சூழ்நிலைக்கேற்ப சுவிசேஷம் அறிவிப்பதில் தலைசிறந்தவர்!

ஒரு பெரிய கம்பெனி ஊழியர்கள் மத்தியில், அண்ணன் கமலேசன் அவர்கள் செய்தியளிப்பதற்கு கம்பெனியில் நான் அனுமதி கேட்டபோது, அந்த கம்பெனி நிர்வாகம், இரண்டு நிபந்தனைகளுடன் அதற்கு வாய்ப்பளித்தது – அதாவது, 'செய்தி யளிப்பவர் 'இயேசுகிறிஸ்து' என்கிற வார்த்தையை அக்கூட்டத்தில் உச்சரிக்கக்கூடாது; மேலும், அவர் தனது இரட்சிப்பின் சாட்சியைச் சொல்லக்கூடாது' என்பதாக. இதை நான் அண்ணனுக்குத் தெரிவித்தபோது, அவர் அந்நிபந்தனைகளை எவ்விதத் தயக்கமுமின்றி ஏற்றுக்கொண்டு, *'பிரஜாபதி'* என்கிற தலைப்பில் ஒரு செய்தியைக் கொடுத்தார். அச்செய்தியால் அநேகர் அன்று தொடப்பட்டனர்.

**– திரு. C. ரெஜினால்டு,** FMPB – தலைவர்.

## உலகிலேயே Dr. பில்லிகிரஹாமுக்கு அடுத்தபடியான பெரிய தலைவர்!

'உலக திருச்சபை வரலாற்றில் போதகர்கள் மத்தியில் கமலேசன் அண்ணனைவிட அதிக செல்வாக்குடையவர்கள் எவரும் இலர்' என்று நன்கு அறியப்பட்ட ஒரு முதன்மை ஆராய்ச்சி விஞ்ஞானி ஆண்ட்ரூ மெக்காஃபி சொல்கிறார். ஆம்ஸ்டர்டாமில் வைத்து நடைபெற்ற 'பிரயாணத்திலிருக்கும் மிஷனெரிகளுக்கான சர்வதேச மாநாட்டில்,' டாக்டர் பிரகாஷ் யேசுவடியான் கலந்துக்கொண்டு, அங்கு நடந்த நிகழ்வுகளின் அடிப்படையில் தனது கருத்தைத் தெரிவிக்கும்போது, 'உலக பிரசித்திப்பெற்ற மாபெரும் சுவிசேஷகர் டாக்டர் பில்லி கிரஹாமுக்கு அடுத்தபடியாக 2–ம் நிலை தலைவராக நமது கமலேசன் அண்ணன் அம்மாநாட்டில் கருதப்பட்டார்' என்று குறிப்பிட்டார்.

**– சகோ. அசோக் வேதநாயகம்,**
FMPB – முன்னாள் நவோதயா குழு இயக்குனர்; சிஷ்யா – நிறுவனர்.

## திருச்சபைகளின் உறவுக்கு மிஷனெரி இதயத்துடன் செயலாற்றியவர்!

1992-ம் ஆண்டில் வேர்ல்ட் விஷன் நிறுவனத்தின் சார்பாக ருமேனியாவில் நடந்த ஆர்தோடக்ஸ் குருவானவர்களுக்கான மாநாட்டில், புராட்டஸ்டன்ட் மற்றும் ஆர்தோடக்ஸ் இடையிலான உறவை நன்கு வளர்ப்பதற்கான ஊக்கத்தை அண்ணன் ஏற்படுத்தினார்.

**– அருள்திரு. பிரபாகர சாரதி,** FMPB – தலைமை செயலக செயலாளர்.

## இம்மாமனிதரின் அன்பின் உறவு அளவிடப்படமுடியாதது!

டாக்டர் கமலேசன் அவர்கள் என்னை வடகிழக்கு மாநிலங்களின் பிரதிநிதியாக FMPB-ன் செயற்குழுவில் பங்கேற்குமாறு அழைப்பு விடுத்தார். அவரது அழைப்பை நான் ஏற்றுக்கொண்டபோது, “நீங்கள்தான் எங்களது உலகத்திற்கான ஜன்னல்களாக இருப்பீர்கள்” என்று குறிப்பிட்டார். அக்கமிட்டியிலிருந்த அந்த 3 வருடங்களும் அவரது ஆவிக்குரிய மதிப்பீடுகளையும், தலைமைத்துவப் பண்புகளையும், தனிப்பட்ட நெருக்க மான உறவையும் நான் பார்த்து அனுபவித்தபோது, ‘மெய்யாகவே இவர் ஒரு தேவ மாமனிதர்!’ என்று அடையாளம் கண்டுக்கொண்டேன்!

**– திரு. பென் கப்துவாமா,**
FMPB – முன்னாள் செயற்குழு அங்கத்தினர் & உயர்மட்ட அரசு அதிகாரி– பீஹார்.

## அண்ணன் என்னோடிருந்ததால் ஊழியத்தில் திறந்த வாசல் கிடைத்தது!

1980-ம் ஆண்டில் ஆந்திர மாநிலத்தைச் சார்ந்த எனக்கு இந்தியாவிலுள்ள வட மாநிலங்கள் மற்றும் வடகிழக்கு மாநிலங்களில் FMPB – மிஷனெரி தரிசனத்தை விரிவாக்கம் செய்வதற்கான வாய்ப்புகள் கிடைத்தன. ஆந்திராவிலும் மிஷனெரி தரிசனத்தைப் பரப்புவதற்கு கமலேசன் அண்ணன் பெரிதும் வழிநடத்தினார்கள். ஒரு பிரபல சர்வதேச சுவிசேஷகராகத் தெலுங்கு கிறிஸ்தவ சமூகத்திற்கு இவர் மிகவும் அறியப்பட்டிருந்ததால், மற்றவர்கள் என்னை FMPB – பிரதிநிதியாக ஏற்றுக்கொள்வது மிகவும் எளிதாகக் காணப்பட்டது.

**– திரு. பி. ஹேமச்சந்திரன்,** FMPB – முன்னாள் இணை பொதுச்செயலாளர்.

## “தேவராஜ்யம்”தான் அண்ணனது இறையியலின் அடிப்படை சித்தாந்தம்!

நான் அறிந்தவரை, இந்தியாவில் கல்வியறிவு பெற்ற மற்ற சமயத்து மக்களிடையே ‘உரையாடல்’ வழியாகச் சிறப்பாக மிஷனெரிப்பணியாற்றிய டாக்டர் ஈ.ஸ்டேன்லி ஜோன்ஸ் அவர்களுக்கு அடுத்து, டாக்டர் கமலேசன் அண்ணன்தான் தேவராஜ்யத்தைப் பற்றிய இறையியலைத் தனது பிரசங்கங்களில் தெளிவாக முதன்மைப்படுத்தியவர். அவர் அடிக்கடி சொல்லும் சொற்றொடர்கள் – “அசைக்கமுடியாத ராஜ்யம்” மற்றும் “மாறாத ராஜா” இன்றும் நமது காதுகளில் ஒலித்துக்கொண்டேயிருக்கின்றன. ‘இயேசுவின் குடும்பம் ஒன்று உண்டு’ என்று அவர் அடிக்கடி பாடுகிறப் பாடலை நாம் எவரும் மறக்க முடியாது. அவர் மிகவும் தரமான மதிப்பீடுகளையும், ஊழிய மரபையும் நமக்கு முன்பாக விட்டுச்சென்றுள்ளார். நமது எண்ணங்களிலும் மனதிலும் மட்டுமல்லாமல், உலகெங்கிலுமுள்ள திருச்சபை மற்றும் மிஷனெரிப்பணி வரலாற்றிலும், குறிப்பாக நமது தாய்நாடாகிய இந்தியாவிலும் அவர் அழியாத சுவடுகளைப் பதித்துள்ளதற்காக தேவனுக்கு நன்றி செலுத்துவோம்.

**– அருள்திரு. என். பிரபாகர்** – FMPB.

## புதிய கொள்கைகளை நீண்ட விவாதத்திற்குட்படுத்துவது அண்ணனது தலைமைத்துவப் பண்பு!

FMPB-ன் நிர்வாகத்தில் அவரது பங்களிப்பு மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். FMPB-ன் ஊழியத்திற்கான கொள்கைகளை நடைமுறைப்படுத்தக்கூடிய நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்கி, அதில் ஒவ்வொரு நிர்வாகியும் தன் பங்கையாற்றுவதற்குத் தெளிவாக வழிகாட்டினார். FMPB - இயக்கத்தின் தலைவராக அதன் நிர்வாகப்பணியைப் பொதுச்செயலாளரிடமும், மற்ற மிஷனெரிச் செயலாளர்களிடமும் முழுவதுமாகப் பகிர்ந்தளித்து செயல்பட்டார். FMPB - செயற்குழுவில் கொள்கைகளை வகுப்பதற்கே முக்கியத்துவம் கொடுத்தார். புதிய கொள்கைகளை FMPB - செயற்குழுவில் முன்மொழியும்போது, இயக்கத்தின் நலனைக் கருத்தில் கொண்டு, அவரது தலைமையின்கீழ் அதைச் செயற்குழுவில் முழுவதுமாக விவாதித்துதான் பின்பு அதை நடைமுறைப்படுத்த வழிவகுத்தார்.

**- அருள்திரு. அறிவர். இ. ராஜன்** - FMPB.

## பிறரை முன்னேற்றுவதிலே அண்ணன் ஒரு பெரிய உந்துசக்தி!

FMPB-ன் பொதுச்செயலாளராக 2000-ம் ஆண்டு முதல் ஜனவரி 2009-ம் ஆண்டு வரை நான் செயல்பட்டபோது, எந்தவொரு நிர்வாக விஷயத்திலும் அவர் ஒருபோதும் தலையிடாமல், அப்பிரச்சனைகளை நிர்வாகிகளே ஜெபித்து, சிந்தித்து தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டுமென விரும்பினார். அதுசம்பந்தமாக நாங்களே அவரிடம் உதவிக்கேட்டால், அவர் ஆலோசனைகளை மட்டுமே தருவது வழக்கம். இயக்கத் திற்கான கொள்கைகளை வகுப்பதில் மட்டுமே அவர் முனைப்புக் காட்டியது, அவரது தலைமைத்துவ உயரியப் பண்புகளை நமக்குத் தெளிவாகக் காட்டுகிறதன்றோ!

**- அருள்திரு. ஜாண் கிருபாகரன்,** FMPB - முன்னாள் பொதுச்செயலாளர்.

## மிகவும் பரந்த முன்னோக்கு சிந்தனையுடைய தலைவர்!

கமலேசன் அண்ணன் மிகவும் பரந்த கண்ணோட்டம் உடையவர். அவர் ஒருபோதும் குறுகிய சமுதாய குறியீடுகளை ஏற்றுக்கொள்ளவோ, ஊக்கப்படுத்தவோ மாட்டார். FMPB- எப்போதெல்லாம் உள்விவகார சிக்கல்களைச் சந்தித்ததோ, அப்போதெல்லாம் அவர், 'நமது நாடு இதைவிட மிகவும் கடுமையான பிரச்சனைகளைச் சந்தித்து வருகிறது; எனவே, நமக்கிடையே காணப்படுகிற சிறுசிறு பிரச்சனைகளைத் தவிர்த்து, தேசத்திலுள்ள மிகப்பெரிய பிரச்சனைகளைக் குறித்து கவலைப்படுவோம்' என்று கூறுவார். அதிகாரத்தைவிட தனிப்பட்ட உறவுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தார். அவர் அடிக்கடி ஒற்றுமையை வலியுறுத்தியதோடு, 'நாம் FMPB-குடும்பமாகச் சாத்தானை எதிர்த்து நிற்பதையே முக்கியப்படுத்துவோம்!' என்று அறைகூவல் விடுத்தார்.

**- அருள்திரு. ஐ.கே. ஆபிரகாம்,** FMPB - முன்னாள் பொதுச்செயலாளர்.

## சிக்கலான காரியங்களையும் விரைவில் புரிந்துக்கொள்ளும் மாமேதை!

FMPB – செயற்குழுவில், அண்ணனோடு அமர்ந்திருக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. அக்குழுவில் விவாதத்திற்காக நாங்கள் பணித்தளத்திலிருந்து எடுத்துவரும் மிகவும் சிக்கலான, அவருக்குப் பரிட்சயமில்லாத காரியங்களைக்கூட, நாங்கள் விவரிக்க ஆரம்பித்த ஒருசில வினாடிகளிலேயே அக்காரியத்தின் ஆழத்தை மிகத் தெளிவாகப் புரிந்துக்கொள்ளும் மனத்தெளிவு அவரிடமிருந்ததைக் காணமுடிந்தது. அக்குழுவிலுள்ள அனைத்து அங்கத்தினர்களின் கருத்துக்களுக்கும் மதிப்பளிப்பதும், அவைகள் சிலசமயங்களில் சாதாரணமானவைகளாகத் தோன்றினாலும், அவற்றை உற்றுக்கவனிப்பதும் அவரது சிறப்பியல்பாகும். அவர் கமிட்டிகளின் ஒழுக்கத்தையும் மாட்சிமையையும் சிறப்பாகக் கடைபிடித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

**– அருள்திரு. ஜாண் பெர்லின்,**
FMPB – பணித்தள செயலாளர், FMPB – பொதுச்செயலாளர் – நியமனம்.

## சாதுரியமாகப் பேசுவதில் அண்ணன் ஒரு சிகரம்!

ஒரு சமயம் கமலேசன் அண்ணனிடம், 'வில்லியம் கேரி – நவீன மிஷனெரி இயக்கங்களின் தந்தை என்றால், அவருக்குமுன் இந்திய தேசத்திற்கு வந்து தமிழ் மண்ணில் ஊழிய சாதனைகளைப் புரிந்த மிஷனெரி சீகன் பால்கு யார்?' என்று ஒருவர் சற்று குதற்கமாகக் கேட்கவே, அண்ணன் எந்தவிதத் தயக்கமுமின்றி மிகவும் புத்திசாலித்தனமாக, 'அப்படியானால், சீகன் பால்கு – நவீன மிஷனெரி இயக்கங்களின் தாத்தா என எடுத்துக்கொள்ளலாம்' என்று பதிலளித்தார். *(பல நூற்றாண்டுகளாகக் கிறிஸ்தவ வரலாற்று ஆசிரியர்கள் மத்தியில் இன்னும் இந்த கேள்வி ஒரு விவாத மாகவே காணப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.)*

**– அருள்திரு. அறிவர். JTK டேனியல்,**
முன்னாள் முதல்வர் – செராம்பூர் கல்லூரி;
FMPB – முன்னாள் கௌரவ பொதுச்செயலாளர்.

## ஊழிய அநுகூலத்திற்காக அமெரிக்க குடியுரிமையை மறுத்த தியாகம்!

கமலேசன் அண்ணன் நிரந்தரமாக அமெரிக்காவில் தங்குவதற்கு அனுமதி பெற்றிருந்தபோதும், அமெரிக்க குடியுரிமையைப் பெற்றுக்கொள்ளவில்லை. அமெரிக்க அரசு குடியுரிமை அதிகாரிகள், அவரை அமெரிக்க குடியுரிமை பெற்றுக்கொள்வதற்கு ஊக்கப்படுத்தியபோதும், அதற்கு அவர்: "நான் இந்திய குடிமகனாகவே இருக்க விரும்புகிறேன்; அது எனது இந்திய ஊழியத்திற்கும், மற்ற தேசங்களின் ஊழியத்திற்கும் பெரிய அநுகூலமாகக் காணப்படுகிறது" என்று கூறி, அவ்வாய்ப்பைத் தனது வாழ்நாள் முழுவதும் பெற்றுக்கொள்ளாது தியாகம் செய்தது பெரிதும் குறிப்பிடத்தக்கது.

**– அருள்திரு. சுதர்சன் தாமஸ்,** FMPB – பொதுச்செயலாளர்.

**1**

**ஏப்ரல்**

**வியாழன்**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ராபர்ட் ராஜலிங்கம், திரு. தௌஜபாவ் குயிட்டே
திரு. சுங்லென்லல் சிங்சிட், திரு. தங்கோகின் லுஃபெங்க்
திருமதி. மன்னா ராஜ வித்யா அகஸ்டியன்
திருமதி. மெலொடி டிம்சன்டிங் வய்ஃபெய்
திரு. ஸியான்லுன்தாங்க் ஸௌ டி.

# ஜம்மு

## நரோத்: ஜீவர் ஜோஸ்வா & ஷேத்ரிமயூம் பிரியா தேவி

**துதிக்க:** இப்பணித்தளத்தில் முதன் முறையாக 345 நபர்களுக்குச் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. புதிதாக 2 நபர்கள் கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் அடியெடுத்து வைத்துள்ளனர். புதிதாக 2 தன்னார்வ ஊழியர்கள் நமது இப்பணித்தள ஊழியத்தில் இணைந்துள்ளனர். கேல்பூர் கிராம அங்ரீஜ்பாலைத் தீராத தலைவலியிலிருந்தும், நாகிரி கிராம பிம்லாவை மூச்சுத்திணறல் கோளாறிலிருந்தும் தேவன் சுகப்படுத்தினார். தக்கோலியா கிராம நீலம் தேவியை தேவன் பொல்லாத ஆவியின் பிடியிலிருந்து விடுதலையாக்கினதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தக்கோலியா கிராமத்தைச் சார்ந்த ரோஷிணியின் குடும்ப மக்களின் இரட்சிப்பிற்காக; தீய ஆவியின் பிடியிலிருந்து பதால்பூர் பகுதி சுனிதாவை தேவன் விடுவிக்க; நாகிரி கிராம நமது விசுவாசி வந்தனாவிற்குக் குழந்தை பாக்கியம் கிடைக்க; கர்த்தரை ஆராதிக்க வரும் தனது கணவரை ஆராதனைக்கு வரவிடாமல் தடுக்கும் தக்கோலியா கிராம ஷில்பா மனம் மாற; நமது ஊழியத்தைக் குறித்து தவறான காரியங்களைப் பரப்பி, நமது ஊழியத்திற்கு இடைஞ்சல் உண்டுபண்ணும் நாகிரி கிராம மினு மனந்திருந்த; நாகிரி கிராமப்பகுதியில் கர்த்தரை ஆராதிக்க நல்ல இடமொன்று கிடைக்கவும், தக்கோலியா பகுதியில் ஞாயிறு ஆராதனை தொடங்கப்படவும்; மாஷா சமுதாயத்தினர் மத்தியில் சுவிசேஷத்திற்குத் திறந்தவாசல் கிடைக்க; கண்பார்வை கோளாறிலிருந்து நீலம்தேவிக்கு நல்ல சுகம் கிடைக்க; விசுவாசத்தில் பின்மாற்றமடைந்துள்ள தாலூர் கிராம விசுவாசிகள் மீண்டும் தங்களது விசுவாசத்திற்குள் வர தேவன் கிருபை செய்ய ஜெபிப்போம்.

## *“நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே சேவிப்போம்!”*

*நியூடெல்லி, பட்பர்கன்ஜ் பணித்தளத்தில், கார்கோடா கிராமத்தைச் சேர்ந்த சோனியா 3 வருடத்திற்கு முன்னர் இரட்சிக்கப்பட்டார். அவர் அநேகரைக் கிறிஸ்துவண்டையில் வழிநடத்துவதுடன் தனது இல்லத்திற்கு வருபவர்களுக்கு ஜெபிப்பதால் அவர்கள் சுகம் பெற்றுச் செல்கின்றனர். அவரது கணவர் வீர்சிங் குடிப்பழக்கத்திற்கு அடிமையாகி, சுவிசேஷம் சொல்வதினால் சுதேச ஊழியர்களை மிரட்டினார். தனது கணவனின் உபத்திரவத்தினால், அவர் தனது நான்கு குழந்தைகளையும் அழைத்துக்கொண்டு வெகுதூரத்திலிருக்கும் தனது தாய் வீட்டிற்குச் சென்றுவிட்டார். தனது கணவரின் மனமாற்றத்திற்காக ஊக்கமாக ஜெபித்துக் கொண்டிருந்தார். ஜெபத்திற்கு செவிமடுத்த ஆண்டவர், 15 நாட்களுக்குப் பிறகு அவரது கணவர் அவரோடு தொலைபேசி மூலம் தொடர்புக்கொண்டு, பிரயாணச் செலவிற்கு பணம் அனுப்பி, வீடு திரும்பும்படியும் தனது தவறான செய்கையை மன்னிக்கும்படியும் கேட்டுக்கொண்டார். சோனியா திரும்பி வந்து தற்போது கணவருடன் மகிழ்ச்சியுடன் வாழ்கிறார். அவரது கணவர் வீர்சிங் கிறிஸ்தேசுவைச் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள ஜெபியுங்கள். அல்லேலூயா!*




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ராஜதுரை பி., திரு. ஜெபராஜ் எஸ்.
திருமதி. ஆலிவ் ஜெனிஃபர் நத்தானியேல் எட்வர்ட்
திரு. செந்தில் முருகன் வி.
திரு. ரபீந்திர முர்மு

### ஆர். எஸ். புரா & அக்னூர்:
### டேவிட் அய்யனார் & மன்பிரீத் கௌர்

**துதிக்க:** புதிதாக 3 கிராமங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளன மற்றும் புதிதாக 3 நபர்கள் கிறிஸ்துவை அறிகிற அறிவிற்குள் வந்துள்ளனர். நடந்து முடிந்த ஊழியப்பயிற்சிக்கூடுகை, ஊழியப்பின்தொடர்பணி, இயேசு திரைப்பட ஊழியம், வெளிசந்திப்பு ஊழியம் மற்றும் சத்சங் கூடுகைகளைப் பலவிதங்களில் தேவன் ஆசீர்வதித்துத் தந்தார். ஆக்ராசாக் மற்றும் பனோட்டா பகுதிகளில் வசிக்கும் மக்கள் சுவிசேஷத்தின் மீது வாஞ்சை காட்டுகின்றனர். ஆக்ராசாக் கிராம பிங்கியை தேவன் தீய ஆவியின் பிடியிலிருந்து விடுவித்தார். படிலா கிராம மானுவை வயிற்றுக்கிருமி பிரச்சனையிலிருந்தும், குல்லியன் கிராம சந்தோஷிதேவியை சைனஸ் கோளாறிலிருந்தும் தேவன் சுகமாக்கினார். ஆக்ராசாக் கிராம லட்சுமியின் திருமணத்தை தேவன் அற்புதமாக ஆசீர்வதித்துத் தந்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இப்பணித்தளத்தில் பின்மாற்றமடைந்திருப்போர் மீண்டும் விசுவாசத்திற்குள் துளிர்க்க; ஆர்.எஸ். புரா பகுதி மக்கள் தேவனை ஆராதிக்க சரியான இடமொன்று கிடைக்க; நமது ஊழியத்தில் உதவிசெய்ய நமது விசுவாசிகள் தாங்களாகவே முன்வர; காதர்பூர் கிராம ஜான்வியையும், குல்லியன் கிராம சுபமையும் பக்கவாதத்திலிருந்தும், பயோட்டா கிராம ருக்மணியைத் தீராத முதுகு வலியிலிருந்தும், கோட் கால்வல் கிராம பிந்தரைக் காலெலும்பு முறிவிலிருந்தும் தேவன் பூரணமாகச் சுகப்படுத்த; ஆக்ராசாக் கிராம நமது விசுவாசிகளான படியல் மற்றும் சந்திரகலாவிற்கு நல்ல வாழ்க்கை துணைகளமைய; நமது சுதேச ஊழியர் பஞ்சாம் மற்றும் அவரது குடும்பத்தினரின் உடல் ஆரோக்கியத்திற்காக ஜெபிப்போம்.

## ஹிமாச்சலப் பிரதேசம்

### ஜியோரி:
### சங்கர் & துர்கா தேவி (எ) ரூத் மேரி

**துதிக்க:** முதன்முதலாக 2 கிராமங்களில் சுவிசேஷ விதைகள் தூவப்பட்டுள்ளன. நமது சுதேச ஊழியர் ஹிராலாலைக் காசநோயிலிருந்தும், நமது விசுவாசி ராகுலைக் கால்வலியிலிருந்தும், குமுதாவைக் கடும் இரத்தப்போக்கிலிருந்தும் கர்த்தர் சுகமாக்கினார். 5 முறை கருச்சிதைவு ஆன நமது விசுவாசி ஜோதிக்குச் சுகப்பிரசவம் அமைந்ததற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது புதிய விசுவாசி ஷியாம் சிங்கைத் தீய ஆவியின் பிடியிலிருந்து விடுவிக்க; சண்ருதேவி மற்றும் ரூப்லால் ஆகியோரைச் சிறுநீரகக் கோளாறிலிருந்தும், பப்லிராணியைக் கைப்புண்களிலிருந்தும் தேவன் சுகப்படுத்த; தங்களுக்கென சொந்தமாக வீடு கட்டிக் கொண்டிருக்கும் நமது விசுவாசிகளான செவதிதேவி, கரண் தாசி ஆகியோரின் தேவைகள் அனைத்தும் சந்திக்கப்பட ஜெபிப்போம்.

**3**
**ஏப்ரல்**
**சனி**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. மரியம்மாள் பால் சாலமோன்
திரு. ஐசக் ஆர்., திருமதி. பியூலா முரளிதரன்
திருமதி. ஜெய சௌந்தரி ஜெபராஜ் சாமுவேல்
திரு. டாவுட் டுடு

## ஹிமாச்சல் பிராந்திய அலுவலகம் :

### த்சாங்சே சங்தம் & சுச்சானோ

**துதிக்க:** 21 கிராமங்களில் வைத்து நடைபெற்ற வெளிசந்திப்பு ஊழியத்தைக் கர்த்தர் ஆசீர்வதித்துத் தந்ததோடு, அதில் கலந்துக்கொண்டோரில் அநேகர் சுவிசேஷத்தின் மீது வாஞ்சை காட்டவும் தேவன் கிரியை செய்தார். எல்லாத் திருச்சபைகளிலும் நமது மிஷனெரிகள் சங்கிலித்தொடர் ஜெபத்தை அறிமுகம் செய்து, அதைத் துவங்கி வைக்க தேவன் ஒத்தாசை காட்டினார். ஆனி பணித்தளத்தைச் சார்ந்த 21 கிராமங்களில் ஜீப்குழு மூலம் சுவிசேஷ விதைகள் விதைக்கப்பட்டுள்ளன. நேர்வா பணித் தளத்தில் தேவன் சுவிசேஷ வாசலைத் திறந்துத் தந்துள்ளார். பெங்கால் கிராமத்தி லிருந்து 10 நபர்கள் நமது ஊழியத்தில் புதிதாகத் தொடர்புபடுத்தப்பட்டுள்ளனர். பெங்கால் கிராமத்தில் புதிதாக ஒரு ஆராதனை துவங்கப்பட்டுள்ளது. வலிப்பு நோயிலிருந்து தேவன் நமது புதிய விசுவாசி அசோக்கைச் சுகப்படுத்தியதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கபில், விபின், தீபக், விக்கி, சுஷ்மா ராணி, பபிதா, கீதா, ராதிகா, திலீப்சிங் ஆகிய நமது புதிய தொடர்பாளர்களின் இரட்சிப்பிற்காக; சுந்தர்நகர் பணித்தளத்தில் சுவிசேஷத்திற்குத் திறந்த வாசல் உருவாக; பக்கவாதத்திலிருந்து தானிராமையும் ஞாபகமறதி கோளாறிலிருந்து ரோஷல் யாவையும் தேவன் குணப்படுத்த; நவி பகுதி லதா, ராம்தயாள் மற்றும் ரக்ஷாவின் இரட்சிப்பிற்காக; கேகார் பகுதியில் ஒரு சிறிய ஆராதனைக்குழு தொடங்கப்பட ஜெபிப்போம்.

## ரோஹ்ரு:

### ஜாண்சன் சங்கர் & ஜெபராணி

**துதிக்க:** 4 கிராமங்களில் புதிதாகச் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. புதிதாக ஒரு நபர் கிறிஸ்துவைத் தனது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளார். நமது சுதேச ஊழியரின் வீட்டை தீ விபத்தி னின்று தேவன் பாதுகாத்தார். கொடிய வியாதிகளிலிருந்து நமது விசுவாசிகளான மீர்தாஸி, சுக்மாயா மற்றும் சுர்ஜியானையும், தீராத வயிற்றுவலியிலிருந்து தியோவையும் தேவன் சுகப்படுத்தினார். மலையோரத்தி லிருந்து கல் புரண்டு தலையின்மீது விழுந்ததில் எந்தவொரு காயமும் இல்லாமல் தேவன் ராஜ்குமாரைப் பாதுகாத்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கைபேசி கூட்டிணைப்பு அழைப் பின் மூலம் நடந்த ஜெபக்கூடுகைகளில் தவறாமல் பங்குப்பெற்று வந்த ஏறத்தாழ 100 விசுவாசிகளின் ஆவிக்குரிய வளர்ச்சிக் காக; அர்ச்சனாவின் இரட்சிப்பிற்காக; விமலின் குடும்பத்தில் தேவ சமாதானம் நிலவ; மனநிலை பாதிப்பினால் அவதிப்படும் அனில் கீதா, வினேஷ் ஆகியோரின் சுகத் திற்காக; நமது புதிய தொடர்பாளர்களான பாதம் தாஸ், வீரு, சுனிதா, பிரமோத் ஆகியோர் குடிப்பழக்கத்திலிருந்து விடுபட; நிர்மலா மற்றும் பிரீத்தியின் சுகப்பிரசவத் திற்காக ஜெபிப்போம்.

**4**
**ஏப்ரல்**
**ஞாயிறு**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. கிரேஸி ஸ்டான்லி ஜார்ஜ்
திருமதி. கௌரம்மா @ சுவேதா அமரேந்திரன்
திருமதி. அன்னா ரோஸ்லின் ஆர்.

# பஞ்சாப்

## மோகா:

### ஜஸ்டின் & சாராள் ஜான்சி ராணி

**துதிக்க:** புதிதாக ஒரு கிராமத்தில் சுவிசேஷம் பறைசாற்றப்பட்டுள்ளது. புதிதாக 9 நபர்கள் கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் வந்துள்ளனர். சிம்ரன் கௌர் மற்றும் கோபியை தேவன் நெஞ்சு வலியிலிருந்து குணப்படுத்தினார். ஜாகிசிங்கைப் பெரிய விபத்தில் எவ்விதக் காயமுமின்றி தேவன் அற்புதமாகச் காப்பாற்றினார். நமது விசுவாசியான கிர்னா கௌருக்கு தேவன் சுகப்பிரசவத்தை நல்கினார். அஜித்வால் கிராம குல்வந்த் கௌரை தேவன் பிசாசின் பிடியிலிருந்து மீட்டெடுத்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பின்மாற்றமடைந்திருக்கும் விசுவாசிகள் மீண்டும் விசுவாசத்திற்குள் வர; அஜித்வால், சத்சாக், ராய்கட், கோட்லி, தரம்கட், போபாரா மற்றும் டுடிக்கி ஆகிய கிராமங்களில் சுவிசேஷ வாசல்கள் திறக்கப்பட; எல்லா விசுவாசிகளும் தவறாமல் நமது ஆராதனைகளில் வந்து பங்குப்பெற; குடியின் பிடியில் சிக்கித்தவிக்கும் மன்பிரீத் சிங், லட்டி சிங், ஹரன், மிண்ட்டு மற்றும் பிற குடும்பங்கள் விடுவிக்கப்பட; தரம்கட் ஆலயக்கட்டுமானத்திற்கான தேவைகள் யாவும் சந்திக்கப்பட; தீய ஆவியின் பிடியிலிருந்து கமல் கௌர் விடுதலை பெற; பிரேம், மானு, ராகுல், கிஷா, விக்கி, ஷம்மி, மிட்டா, சுனித், குர்தேஜ், லக்கி ஆகியோர் தங்களது குடும்பத்துடன் தவறாமல் நமது ஆலய ஆராதனைக்கு வந்து பங்குப்பெற; நமது விசுவாசிகளான ரஜினி கௌர், ஜோதி, காஞ்சல், ஆமான் ஆகியோருக்குக் கர்த்தருக்குப் பயந்த வாழ்க்கைதுணைகள் அமைய; நமது விசுவாசிகளின் குடும்பங்களான சுக்கி கௌர் மற்றும் மன்தீப் ஆகியோருக்குக் குழந்தை பாக்கியம் கிடைக்க; பாப்லி கௌர், ரேகா கௌர், ஆர்த்தி, மது, சன்னி, ஜெஸ்வீர் சிங், ஜஸ்பிரீத் கௌர் ஆகியோர் இயேசுவின் நற்செய்தியின் மீது ஆர்வம் காட்டுவதோடு, கிருபையாக இரட்சிக்கப்படவும்; நமது புதிய தொடர்பாளர்களான பாபி கௌர், ரேகா, கதுசிங், ஹீனா ஆகியோரின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக ஜெபிப்போம்.

## *எதிர்ப்பு தேவனுடைய ஆசீர்வாதங்களைத் தடுக்காது!*

*திருமணமாகி ஐந்து ஆண்டுகள் முடிந்தும் குழந்தையின்மை, மகாராஷ்டிரா மாநிலம், கட்சந்தூர் பணித்தளத்தில் ரச்சாபள்ளி என்ற கிராமத்தில் ஜொங்கு குடும்பத்தைச் சோர்வில் ஆழ்த்தியது. அநேக வழிபாட்டுமுறைகளைக் கையாண்டும், இப்பிரச்சனை தீராததால், இயேசுகிறிஸ்துவை நம்பித் தொழுதுகொள்ள ஆரம்பித்தனர். அவர்கள் ஜெபத்தினைக் கேட்டு தேவன் அவர்களுக்கு ஒரு பெண் மகவை அருளினார். அக்குழந்தை மிகக் குறைந்த எடையாகயிருந்ததினால் மிக ஆபத்தான நிலையில் இருந்தது. தேவன் அவர்களது கூக்குரலைக் கவனித்து அக்குழந்தைக்குச் சுகமளித்தார். அவர்கள் இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதினிமித்தம், அவர்களுடைய உறவினர்கள் அப்பெண்ணுடைய மகப்பேறு சமயத்திலும், குழந்தை பிறந்தப் பிறகு அதனுடைய சிகிட்சையிலும் உதவ முன்வரவில்லை. ஆனாலும், நமது விசுவாசிகளின் உதவியினால் யாவும் சுமூகமாக முடிந்து அக்குடும்பம் மிகுந்த துன்பங்கள் மத்தியிலும் மகிழ்ச்சியாக உள்ளனர். அல்லேலூயா!*




### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. ராம கிருஷ்ணா அகிபாடா
திரு. பாலாஜி நெட்டாலம், திரு. அமரேந்திரன்
திருமதி. ஜெபா கிரேஸ் டேவிட்
திரு. ஜோதி ரஞ்சன் பர்தான், திரு. லுங்மின்தாங் பைட்டே

### பர்னாலா & பட்டிண்டா:
### கிருபா ரக்ஷனா பரே & ஷகினா

**துதிக்க:** முதன்முறையாக 2 கிராமங்களைச் சுவிசேஷத்தினால் சந்தித்துள்ளனர். புதிதாக 6 நபர்கள் கிறிஸ்துவண்டை விசுவாசத்துடன் சேர்ந்துள்ளனர். பஜிகிரா பஸ்தி மற்றும் தர்ஷன்சிங் ஆகியோரது இல்லங்களில் வைத்து முதன்முறையாக சத்சங் கூடுகைகள் தொடங்கப்பட்டுள்ளன. தீய ஆவியின் பிடியிலிருந்து பப்லியை தேவன் விடுவித்தார். உபவாச ஜெபத்திற்குக் கூடியிருந்த சமயத்தில் ஏற்பட்ட பூமியதிர்ச்சியிலிருந்து தேவன் நமது அனைத்து மிஷனெரிகளையும், சுதேச ஊழியர்களையும் சேதமின்றி பாதுகாத்தார். பாய்ரூபா துணைமையத்தைச் சார்ந்த நமது சுதேச ஊழியர் ஜித்தேந்தர் குடும்பத்திற்குக் குழந்தை பாக்கியம் தந்து தேவன் ஆசீர்வதித்துள்ளார். தில்வா கிராம நமது விசுவாசி கங்காதீப்பின் திருமணத்தை தேவன் மிகச் சிறப்பாக நடத்தித் தந்தமைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வரும்நாட்களில் பல்வேறு இடங்களில் நடத்தத் திட்டமிடப்பட்டிருக்கும் சத்சங் மற்றும் இயேசு திரைப்பட ஊழியங்களின் ஆசீர்வாதங்களுக்காக; கிறிஸ்துவின் மீது தங்களுக்குள்ள விசுவாசத்தை அறிக்கையிட பர்னாலா மற்றும் பத்திண்டா பணித்தளங்களில் வசிக்கும் விசுவாசிகளுக்கு இருக்கும் தடைகள் நீங்க; முசமி வலிப்பு நோயிலிருந்து சுகம் பெற; பிசாசுகளின் பிடிகளிலிருக்கும் தர்ஷன், ஜஷ்பால் சிங், ஷேனா, மனிஷா, அஞ்சு மற்றும் வீராவின் குடும்பங்களுக்காக; குடிப்பழக்கத்திலிருந்து விடுபட இயலாமல் தவிக்கும் சஞ்சய், ராஜீ, அமன்தீப், ராவ், ரவி, சத்பால், சத்னாம், ஹன்ஸ், மௌள் மாண்டி, தெர்ஷாம், கிஷோர், ராஜிந்தர் சிங், பக்ரித், தனுலா ஆகியோருக்காக; நமது புதிய விசுவாசி ரீனாவின் கணவரும் கர்த்தரை இரட்சகரென விசுவாசிக்க ஜெபிப்போம்.

### ஜைத்தோ:
### சித்தரஞ்சன் தான்டி & தேஜேஸ்விதா

**துதிக்க:** 2 கிராமங்களில் புதிதாக இயேசுவின் நற்செய்தி அக்கிராம மக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. புதிதாக 11 நபர்கள் கிறிஸ்துவின் மீது விசுவாசம் வைக்கத் தொடங்கியுள்ளனர். சபை மூப்பர்களுக்கான ஒருநாள் பயிற்சிக்கூடுகையைச் சிறப்பாக நடத்தி முடிக்க தேவன் நமது மிஷனெரிகளுக்கு உதவி செய்தார். தீய ஆவிகளின் பிடிகளிலிருந்து தேவன் சோனுசிங், மன்பிரீத் கௌர், ராமன்தீப் கௌர் ஆகியோரை விடுவித்தார். தேவன் சஞ்சனா சர்மாவை மூச்சு கோளாறிலிருந்தும், சுக்தேவ் சிங்கைக் கண் கிருமித்தொற்றிலிருந்தும் சுகப்படுத்தினதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** உணவு குழாயில் ஏற்பட்டுள்ள பிரச்சனையினால் கஷ்டப்படும் ராணி கௌர், பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டிருக்கும் நமது புதிய விசுவாசி ராஜ்வீர் சிங், மனநோயினால் அவதிப்படும் ஜித்ஜெல் கிராம பல்கரன் சிங் ஆகியோருக்குப் பூரண சுகம் கிடைக்க; அமன்தீப் கௌர், சர்வஜித் கௌர் மற்றும் பிரப்ஜியோத் கௌருக்கு நல்ல சுகப்பிரசவங்கள் அமைய; ரஞ்ஜியோத், சோனு, தீபக் ஆகியோரது குடும்பங்களில் குழந்தை பாக்கியங்கள் கிடைக்க; ரடிசிபுரா, ஹரினோ, கஷம்பட்டி, மட்டா, கொட்காபுரா ஆகிய பகுதிகளில் சுவிசேஷத்திற்குத் திறந்த வாசல் உருவாக; குல்விந்தர் சிங், பிட்டு சிங், அமன்தீப் கௌர், நீட்டா சிங், மன்பிரீத் கௌர், ஜஸ்கரன் சிங் ஆகியோருக்கு நல்ல வாழ்க்கை துணைகளமைய; கிறிஸ்துவில் தங்களது விசுவாசத்தை அறிக்கையிடக் காத்திருக்கும் 15 நபர்களுக்காக ஜெபிப்போம்.

**6**
**ஏப்ரல்**
**செவ்வாய்**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. சுதர்சன் தாமஸ் ஜெயராஜ்
திரு. ஃபிராங்ளின் எம். ஒய். பாதம்
திருமதி. சூர்ஜ்யகாந்தி உதிப்தகுமார் பாக்
திரு. காடிசெலா பிரவீன்

# ஹரியானா

## பர்வாலா: பாபுபாய் & சரஸ்வதி

**துதிக்க:** ராக்கி, ஹெபல்பூர் மற்றும் கும்பாவில் சுவிசேஷம் புதிதாகப் பறைசாற்றப்பட்டுள்ளது. மருத்துவ சேவைப்பணியில் நமது விசுவாசி மம்தா பிரமுகலானாவிற்கு வேலை கிடைக்க தேவன் கிருபை செய்தார். பொல்லாத ஆவியின் பிடியிலிருந்து தேவன் ரேகாவை விடுதலை செய்தார். ஜெபத்தின் மூலம் கய்பிபூர் கிராம ஜாமர் ஜித்தின் மகன் அனிலைக் கடத்தல் கும்பலிடமிருந்து தேவன் மீட்டெடுத்துக் கொடுத்தார். கய்பிபூர் கிராம கவிதாவைக் குழந்தை பாக்கியத்தினால் கர்த்தர் ஆசீர்வதித்தமைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கோரக்பூர் கிராமத்தில் ஆலயம் கட்ட நல்ல நிலம் கிடைக்க; கய்பிபூர் கிராம 3 வயது சிறுவன் ஆஷிஷ் குமாரின் வயிற்றிலுள்ள கல் கரையவும், சாகு கிராம சீத்தால் தீய ஆவியின் பிடியிலிருந்து விடுவிக்கப்படவும்; குடிப்பழக்கத்திற்கு அடிமைப்பட்டிருக்கும் வேதாவின் இரு குமாரர்களும் மனந்திரும்பி, குடிப்பழக் கத்தைக் கைவிட; கார்கோடா, ஹாசன்கார், நயகார், போபுவா மற்றும் புகனா என்ற கிராமங்களிலுள்ள மக்களின் இரட்சிப் பிற்காக ஜெபிப்போம்.

## ஜீவன் நகர்:

### அலியாக்கீம் ஜெனா & தீபிகா

**துதிக்க:** கிறிஸ்துவைத் தனது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டதின் விளைவாக, வீட்டை விட்டு துரத்தப்பட்டிருந்த நமது புதிய விசுவாசி சுக்தேவின் குடும்பத்தை மீண்டும் அவரது பெற்றோர்கள் ஏற்றுக் கொண்டனர். மங்கத் ராமின் குடும்பம் தங்களது விசுவாசத்தைக் கிறிஸ்துவில் அறிக்கை செய்துள்ளனர். சாந்த் நகர் சந்தீப்பின் மனைவிக்கு அவரது பிரசவக் கால நாட்களில் ஏற்பட்ட மின்சார அதிர் வினிமித்தம் உண்டான இரத்தப்போக்கி லிருந்து தேவன் அவரைக் காப்பாற்றி, நல்ல சுகப்பிரசவத்தைக் கட்டளையிட்டார். அரவை இயந்திர விபத்திலிருந்து தேவன் சாந்த் நகர் சோனுவின் கரங்களைப் பாதுகாத்தார். கத்ரானா தெருவைச் சார்ந்த பகா சிங்கின் இல்லத்தில் புதிதாக ஆராதனைக்குழுவொன்று தொடங்க கர்த்தர் உதவி செய்தமைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஷகிரா, ரூபாபூர் கிராமங்களில் சுவிசேஷ வாசல்கள் திறக்கப்பட; நமது விசுவாசிகள் அநேக மக்களைக் கிறிஸ்து வண்டை நடத்த; பட்டேல் தாபர், கய்பிபூர், மட்டானா ஆகிய திருச்சபை வளாகங்களில் சுற்றுசுவர்கள் கட்டப்பட; தப்வாலி மண்டி பகுதியைச் சேர்ந்த கோபாலின் குடும்பம் இரட்சிக்கப்பட; பக்கா, பத்ரால், ஜஸ்சி, ஜெய்சிங் வாலா, தும்வாலி மற்றும் கௌரிபுத்தார் கிராமங்களில் சத்சங் நிகழ்ச்சிகள் நடத்தப்பட; மண்டி தப்வாலி துணைமையத்தைச் சார்ந்த மங்கல், தர்ஷிம், ஜெய்பால், ஹனுமான், சாது ஆகியோர் குடிப்பழக்கத்திலிருந்து வெளிவர; நமது ஊழியச்செயல்பாடுகளில் விசுவாசிகளும் சபைமூப்பர்களும் தங்களது மனமுவந்த ஒத்துழைப்பைக் காட்ட ஜெபிப்போம்.

**7**
**ஏப்ரல்**
**புதன்**

*உபவாச ஜெபநாள்*

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஜாண் டேவிட் ராஜ்
திரு. பவன் குமார்
திரு. அல்போன்ஸ் ஜெ.

### தோஷம்:

**ஜாண் டேவிட்சன், சிவகுமார்**

**துதிக்க:** புதிதாக 6 கிராமங்களுக்குச் சுவிசேஷ வார்த்தைகள் சென்றடைந்துள்ளன. பார்கவ் சமுதாயத்தினரிலிருந்து 3 புதிய தொடர்பாளர்கள் நமக்கு ஊழியத்தில் ஆசீர்வாதப்பங்காகக் கிடைத்துள்ளனர். சிவானி கிராமத்தில் இரவுநேர ஜெபக்கூடுகைகள் நடத்த தேவன் அநுக்கிரகம் பாராட்டினார். அறுவை சிகிட்சையின் மூலம் மூலப் பிரச்சனையிலிருந்து தேவன் ரோஷனைச் சுகப்படுத்தினார். சிறிய ஜெபக்குழுவான சாத்னாலி கிராம அங்கத்தினர்கள் வெளிசந்திப்பு ஊழியத்தில் முனைப்புடன் ஈடுபடுவதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சர்சானா கிராம நமது புதிய விசுவாசி சந்தீப் கிறிஸ்துவின் மீது தான் கொண்டுள்ள விசுவாசத்தில் உறுதியாய் நிற்க; பார்சி, கனாக், சர்சானா ஆகிய இடங்களிலுள்ள நமது புதிய தொடர்பாளர்கள் தங்களது விசுவாசத்தைக் கிறிஸ்துவில் முற்றிலுமாக அறிக்கையிட; சாத்னாலி கிராம பிரியங்காவிற்கு தேவன் சுகப்பிரசவம் கட்டளையிட; சமீபத்தில் ஏற்பட்ட தானிமாகு கிராம மகாவீரின் மரணத்தினால் துக்கப்பட்டுக் கொண்டிருக்கும் அவரது குடும்பத்தினரின் மனஆறுதலுக்காக ஜெபிப்போம்.

# ராஜஸ்தான்

## ராஜஸ்தான் பிராந்திய அலுவலகம்:

**அமிர்காந்த் டிகல் & நிரோலா**

**துதிக்க:** புதிதாக 20 கிராமங்களில் இயேசுவின் நற்செய்தி எடுத்துரைக்கப்பட்டுள்ளது. 86 கிராமங்களிலும் நடந்த ஊழியப் பின்தொடர்பணியைக் கர்த்தர் ஆசீர்வதித்துத் தந்தார். 52 இடங்களில் வேதாகம வகுப்புக் குழுக்கள் கிரமமாக நடந்து வருகின்றன. நமது ஆல்வார் விடுதி மீண்டும் திறக்கப்பட்டு, பிள்ளைகள் வரத் தொடங்கியுள்ளனர். அஜித்கார் கிராமத்தில் புதிதாகப் பணித்தளம் ஒன்று திறக்க தேவன் ஒத்தாசை புரிந்தமைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நட் மற்றும் ராய்கெர் இன மக்கள் கூட்டங்களின் இரட்சிப்பிற்காக; நெருக்கமான நாட்களில் நமது விசுவாசிகள் தங்களது விசுவாசத்தில் உறுதியாக நிற்க; தங்களது சொந்த ஜனங்களுக்குச் சுவிசேஷம் அறிவிக்க நமது விசுவாசிகள் தாங்களாக முன்வர; நமது விசுவாசிகளின் நடுவிலிருந்தே ஜீப்குழு ஊழியத்திற்கென ஒரு ஓட்டுனர் கிடைக்க; விசுவாசிகள் தங்களது விசுவாசத்தைக் கிறிஸ்துவில் ஒளிவுமறைவின்றி அறிக்கை செய்ய; அனுப்கார், சாங்ரியா, ஸ்ரீ கங்காநகர், தபுகிடா ஆகிய இடங்களில் ஆலயங்கள் கட்டத் தகுந்த நிலங்கள் கிடைக்க; தங்களது சபைகளைத் தாங்களாகவே முன்னின்று நடத்த நமது சபை மூப்பர்கள் முன்வர; நமது ஊழியர் தனது சொந்த மாநிலமாகிய ஒடிசாவிற்குச் சென்றுத் தனது வயது முதிர்ந்த பெற்றோருடன் இருக்கப்போகும் நாட்களையும் பிராயாணங்களையும் தேவன் ஆசீர்வதித்துத் தர; ஹனுமன் கட்டிலிருக்கும் நமது ஊழியர் தர்ஷன் சிங் முதுகு தண்டுவடப் பிரச்சனையிலிருந்து முற்றிலுமாகச் சுகமடைய ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. இம்மானுவேல் ரஞ்சித்சிங் எஸ்.
திரு. சாலமோன் ஜெபராஜ் ஜெ.
திருமதி. பின்னி ஞானம் ஜாண் தினேஷ்
திருமதி. அனியா ஜோஸ்ஃபின் வெங்கடேசன்
திருமதி. ரேணு அருண் காந்தா, திரு. ஜாண்சன் ஜெ.
திருமதி. சாரா மால்தோ

## ஸ்ரீ கங்காநகர்:

### வி. குமார் & பெட்ரிஷியா

**துதிக்க:** பற்பல இடங்களில் நடந்த ஊழிய நிகழ்ச்சிகளை தேவன் ஆசீர்வதித்துத் தந்தார். குருசார் 2W-விலுள்ள நமது விசுவாசி பூஜாவின் திருமணத்தை தேவன் பலவிதங்களில் ஆசீர்வாதமாக நடத்திக் கொடுத்தார். 16S-லிருக்கும் நமது விசுவாசி நாதுராமிற்குச் சொந்தமாக வீடு கட்டவும், SSB காலனியிலுள்ள சுனிலுக்கு ஒரு வீடு சொந்தமாக விலைக்கு வாங்கவும் கர்த்தர் கிருபை பாராட்டினார். நமது விசுவாசிகளான குல்தீப் மற்றும் அவரது மனைவி சுனிதா ஒருவருக்கொருவர் தங்களது தவறான புரிந்துகொள்ளுதலிலிருந்து விடுபட்டு, மீண்டும் குடும்பமாக இணைந்து வாழ கர்த்தர் உதவி செய்திருக்கிறார். பொல்லாத ஆவியின் பிடியிலிருந்து 5H-ல் வாழும் குர்பிரீத்தை தேவன் விடுதலை செய்தமைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வெளிசந்திப்பு ஊழியங்களில் நமது விசுவாசி சுபாஷ் உற்சாகமாக ஈடுபட; இரத்தச்சோகை வியாதியிலிருந்தும் நரம்பு பிரச்சனையிலிருந்தும் தேவன் விமலாவைச் சுகமாக்க; நமது விசுவாசி சர்ப்ஜீத்தின் குடும்பத்திற்கு மழலை பாக்கியம் கிடைக்க; நமது விசுவாசி ராமனின் திருமணம் ஆசீர்வாதமான முறையில் நடைபெறவும், இதன்மூலம் அவரது பெற்றோர்கள் மீண்டும் அவருடன் இணையவும் தேவன் அநுக்கிரகம் ஈவ ஜெபிப்போம்.

## உத்தரப் பிரதேசம்

### டூண்ட்லா: பச்சியாபாய் போஹ்னாபாய் & சவிதாபேன்

**துதிக்க:** புதிதாக 5 கிராமங்களில் சுவிசேஷம் சென்றடையவும், அதன்மூலம் 3 நபர்கள் விசுவாசத்தில் கிறிஸ்துவண்டை கிட்டிச்சேரவும் தேவன் கிருபை ஈந்தார். கயமாய் மற்றும் தனுமாய் கிராமங்களில் நடைபெற்ற ஆத்தும ஆதாயப் பயிற்சி நிகழ்ச்சியைக் கர்த்தர் வெகுவாய்ச் சிறப்பித்துத் தந்தார். நமது புதிய தொடர்பாளர்களான சர்வேஷ், சீமா, கமலேஷ் ஆகியோரது குடும்பங்கள் சுவிசேஷத்தின் மீது அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். புதிய விசுவாசிகளுக்கானப் பயிற்சிகூடுகை மற்றும் பெண்கள் கூடுகைகளை ஃப்ரோசாபாத், தனுமாய், டூண்ட்லா ஆகிய இடங்களில் அநேகருக்கு ஆசீர்வாதமாக தேவன் நடத்தித் தந்தார். கர்த்தரின் ஆசீர்வாதங்களையும், சரீர ஆரோக்கியத்தையும், இரட்சிப்பையும் அபரிமிதமாகப் பெற்றிருப்போர் தங்களுக்கு அருகாமையில் வசிப்போர் மத்தியில் கர்த்தரின் நற்சாட்சிகளாக வாழ தேவன் உதவி செய்கின்றதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பாஜெல், ரத்தூர் போன்ற மக்களினக் கூட்டங்கள் மத்தியில் சுவிசேஷ வாசல்கள் திறக்கப்பட; இரவுநேர ஜெபக் கூடுகைகள் மற்றும் சத்சங் கூடுகைகளை நடத்த ஒரு சுவிசேஷ குழுவை உருவாக்கத் திட்டமிடும் காரியங்களை தேவன் கனப் படுத்திக் கொடுக்க; கயமாய் பகுதி சியான்சிங், பய்துஷ், ஜெகதீஷ் ஆகியோரது குடும்பங்கள் தேவ இரட்சிப்பைக் கண்டடைய; கல்யாண், சய்தய்லால், காமினி ஆகிய கிராமங்களில் நடந்த சுவிசேஷ ஊழியத்திற்கு நல்ல பலன் கிடைக்க; ஃப்ரோசாபாத் மற்றும் தனுமாய் பகுதிகளில் நடத்தத் தீர்மானித்திருக்கும் வாலிபர் கூடுகைகளில் கர்த்தரின் ஆசீர்வாதம் நிறைவாகத் தங்கியிருக்க ஜெபிப்போம்.

**9**

**ஏப்ரல்**

**வெள்ளி**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. லிடியா அகஸ்டஸ் புஷ்பராஜ்
திரு. கோல்டன் ஜே. இன்பராஜ்

## காட்டம்பூர்:

## ஜங்கோலுன் தௌதாங் & தியான்சிங் ஹௌசல்

**துதிக்க:** 9 கிராமங்களில் புதிதாகக் கிறிஸ்துவின் நற்செய்தி அறிவிக்கப்பட்டுள்ளது. 24 நபர்கள் புதிதாக இயேசுவை விசுவாசிக்க ஆரம்பித்துள்ளனர். சித்தானி கிராம நமது விசுவாசி ராதாவின் கணவர் 5 வருடங்களுக்குப் பிறகு மீண்டும் திரும்பி வந்து, தனது மனைவியிடம் ஒப்புரவாகக் கர்த்தர் கிருபை ஈந்தார். அரசாங்கத் திட்டத்தின் கீழ் நமது விசுவாசிகளான மம்தா, அனிதா, சுசிலா ஆகியோருக்கு தேவன் நல்ல வீடுகளைத் தந்ததோடு, சிவாவிற்கு நல்ல வேலையையும் கட்டளையிட்டார். பெரியளவு வெளிசந்திப்பு சத்சங் கூடுகைகளை ராகா கிராமத்தில் எவ்விதத் தடையுமின்றி நடத்தி முடிக்க தேவன் ஒத்தாசை புரிந்தமைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வரும்நாட்களில் நடக்கவிருக்கும் சிறுவர் விடுமுறை வேதாகமப் பள்ளி ஊழியங்களைக் கர்த்தர் ஆசீர்வதிக்க; ரட்சணா, வினிதா, சாந்தி ஆகியோருக்குச் சுகப்பிரசவங்கள் நடைபெற; நமது சுதேச ஊழியர்கள் மத்தியில் நடக்கும் உள்ளூர் இடமாற்றங்கள் சமாதானமாய் நடைபெற; அரசாங்க பல்வேறு நலத்திட்டங்கள் நமது விசுவாசிகளுக்கும் சுதேச ஊழியர்களுக்கும் தடையின்றி கிடைக்க; பலவித வியாதிகளிலிருந்து பிரதீப், ஹரிபால், சாக்ஷி பிரபா, உமா சரோஜ், கங்கா தேவி, சாவித்திரி, தானு, ஜானு மற்றும் மரியமிற்கு அற்புத சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

## *இரத்தக்கசிவுடன் இருந்தவருக்கு கிறிஸ்தேசுவின் இரத்தம் சுகமளிக்க போதுமானது!*

*மகாராஷ்டிரா மாநிலத்தில், ஜிம்மலாகட்டா பணித்தளத்திலுள்ள ஏர்காடா கிராமத்தைச் சேர்ந்த மடியா கோண்ட் வகுப்பிலுள்ள ஜகா வேலாதி என்பவரின் மகள் சுனிதா, பெரும்பாடுள்ள மகளாக இரத்தக் கசிவினிமித்தம் அவதியுற்றுக்கொண்டிருந்தார். சிகிட்சைக்காக வெகு இடங்களுக்கு அவரை அழைத்துச் சென்றிருந்தும், சுகம் கிடைக்கவில்லை. அவர் மூர்ச்சையடைந்ததினிமித்தம் அவர் சுகம் பெறுவார் என்ற நம்பிக்கை அவரது பெற்றோரை விட்டு அகன்றது. அவரது சாவைக் காணும்படி அநேகர் வந்திருந்தனர். அவரது தாயார் விசுவாசிகளிடத்தில் தொடர்புகொண்டு ஊழியர் வந்து ஜெபிக்கும்படி வேண்டுதல் கொடுத்தார். ஊழியர்கள் வந்தபொழுது, அவரைப் படுக்கையுடன் சுமந்துக்கொண்டு வந்தனர். அவர்களின் அறிவுரைப்படி, அவரை ஜெபத்திற்கு பின்னர் மருத்துவமனைக்கு 'ஆம்புலன்ஸ்' வாயிலாக அழைத்துச் சென்றார்கள். அங்கு அவருக்கு முதலுதவி அளித்தப் பின்னர், அஹேரி தாலுகாவிலுள்ள மருத்துவமனைக்கு அனுப்பியதுடன் ஜெபத்தில் தரித்திருந்தனர். 5 நாட்களுக்குப் பின்னர் சுகமுடன் அந்த சகோதரி வீடு திரும்பினார். கிராம மக்களே அவரைக் காண வருகை தந்தனர். அவரது தகப்பன் இயேசுகிறிஸ்துவைப் பற்றியும், விசுவாசிகளைப் பற்றியும் சாட்சி கூறினார். தற்போது அக்குடும்பம் ஆலய ஆராதனையில் கிரமமாகக் கலந்துக்கொள்கின்றனர். அல்லேலூயா!*

**10**
**ஏப்ரல்**
**சனி**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஆபிரகாம் ஜி., திரு. சன்னமல்லப்பா அங்காடி
திருமதி. ஜெயந்தி துரைசாமி @ ஃபிரான்சிஸ்
திரு. டேவிட் ஹன்ஸ்தக்

## புந்தேல்கண்ட் பிராந்தியம்:

### என். ராஜதுரை & பிரேமா

**துதிக்க:** ஒருவருடத்திற்கு முன் ஜெபத்தின் மூலம் பக்லாமர் கிராம ஜங்கிரியாவைக் கர்த்தர் சுகப்படுத்தினதின் விளைவு, அவர் இதுவரை 12 நபர்களைக் கிறிஸ்துவண்டை கொண்டு வந்து சேர்த்துள்ளார். சகத்பூர் கிராம நமது விசுவாசி லுல்லுபாயின் ஜெபத்தைக் கேட்டு, காற்றின் திசையைக் கூட தேவன் திருப்பி, அவருக்கு இவ்வருடம் அவரது விவசாய நிலத்தில் பயிரிட்டிருந்த கொண்டைக் கடலையில் நல்ல அறுவடையைத் தந்துள் ளார். ஜாலுன் பணித்தள ஊழியத்தை மேம்படுத்தும் பொருட்டு அங்கே ஓர் புதிய தன்னார்வ ஊழியர் பணியமர்த்தப் பட்டுள்ளார். சிர்சாகலார் பகுதியில் ஆலயம் கட்ட ஓர் நல்ல நிலத்தை வாங்க தேவன் ஒத்தாசை செய்துள்ளார். பாகர்பூர், டிக்கோலி கிராமங்களில் மக்கள் சுவிசேஷத்திற்கு மிகுந்த ஆர்வம் காட்டுவதினால், நமது ஜீப்குழு மூலம் அவர்கள் மத்தியிலே 10 இரவுநேர ஜெபக்கூடுகைகள், சத்சங் கூடுகைகள் மற்றும் 9 இயேசு திரைப்பட ஊழிய நிகழ்ச்சிகள் யாவற்றையும் சிறப்பாக நடத்தி முடிக்க தேவன் நமது ஊழியர்களுக்குக் கிருபை காட்டினார். ஜான்சி, மோத், பிந்த் மற்றும் குணா பணித்தளங்களில் நடந்த 1000 மணிநேர ஜெபவேளைகளை தேவன் ஆசீர்வதித்துக் கொடுத்தார். மொரேனா பணித்தளத்தைச் சார்ந்த எமிலியா, டத்தேரா மற்றும் டோராரி என்ற 3 புதிய கிராமங்களில் சுவிசேஷத்திற்கு நல்ல வரவேற்பை தேவன் கட்டளையிட்டுள்ளார். கதவ்ரா பணித்தளத்தில் தனது மனைவி பூஜைமை ஆராதனைக்கு வரவிடாமல் தடை செய்துக்கொண்டிருந்த அவரது கணவரின் இதயத்தை தேவன் நல்மாற்றத்திற்கு உட்படுத்தியுள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பிந்த், தப்ரா ஆகிய பணித் தளங்களில் நடைபெறப்போகும் மூப்பர்கள் பயிற்சிக்கூடுகையை தேவன் ஆசீர்வதித்துத் தர; சிவ்னி ஆலய நிலத்தை அளவெடுக்கும் பணி விரைவில் முடிய; கிட்டவுண்டா மற்றும் தாம்ராஸில் ஆலயங்கள் கட்டப் படத் தகுந்த நிலங்கள் கிடைக்க; நமது சபைமூப்பர்கள் தங்களது சபைகளைத் தாங்களே நடத்துவதற்கான ஆவிக்குரிய ஞானத்தை, பெலனைப் பெற்றிட; உதய்பூர் திருச்சபையில் ஆவிக்குரிய எழுப்புதல் உருவாக; சுல்தான்பூர், தாய், நயகான், பரோல், பெலிசிகோட்டி, இட்டால் ஆகிய இடங் களிலுள்ள திருச்சபை மக்கள் கிறிஸ்துவில் நாளுக்குநாள் வளர ஜெபிப்போம்.

# மத்தியப் பிரதேசம்

### டப்ரா: சத்திகந்த் பரிச்சா & சகரிகா

**துதிக்க:** மெஹான், சலாம்பூர் ஆகிய இரு கிராமங்களில் புதிதாக இயேசுவின் நற்செய்தி கூறப்பட்டுள்ளது. நமது விசுவாசி பப்லியின் கணவரைப் பெரிய சாலை விபத்தி னின்றும், கிட்டோண்டா கிராம அனிலின் மகனை மின்சார அதிர்வினின்றும் கர்த்தர் பாதுகாத்தார். தனித்தாள் ஊழியம் மூலம் தேவன் 12 நபர்களைக் கிறிஸ்துவண்டை வழிநடத்த நமது ஊழியர்களுக்கு உதவி செய்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது சபை மூப்பர்கள் மற்றும் விசுவாசிகளின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; இவ்வருட சிறுவர் விடுமுறை வேதாகமப்பள்ளி ஊழியத்தை தேவன் ஆசீர்வதித்துக் கொடுக்க; அடிக்கடி நமது ஊழியத்திற்குச் சிரமம் தரும் பிற மிஷனெரி இயக்க ஊழியர்களுக்கு தேவன் தெளிந்த புத்தியைத் தர ஜெபிப்போம்.

## 11 ஏப்ரல் ஞாயிறு

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. பெரில் சிரோமணி ஏகலைவன்
திரு. பீட்டர் பிரபாகரன்

### பால்: மகேந்திரன் & புஷ்பம்

**துதிக்க:** புதிதாக 6 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் 8 நபர்கள் புதிதாக இயேசுவை ஏற்றுக்கொண்டுள்ளனர். நமது விசுவாசி அஜீத்தின் திருமணத்தைக் கிறிஸ்தவ முறையில் நடத்த தேவன் உதவி பாராட்டினார். வசந்தியைப் பக்க வாதத்திலிருந்தும், சங்கீதாவைச் சரீர வீக்கத்திலிருந்தும், பியர்சிங்கை மூலப் பிரச்சனையிலிருந்தும் தேவன் குணப் படுத்தியதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கடுமையாக நமது ஊழியத் திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் நவால்சிங் மனந்திரும்ப; நமது விசுவாசி சாம்லாலின் தொலைந்துபோன இருசக்கர வாகனம் மீண்டும் கிடைக்க; பின்மாற்றமடைந் திருக்கும் நமது விசுவாசி ஜய்னாவின் குடும்பம் மீண்டும் விசுவாசத்திற்குள் வர; குடல் பிரச்சனையிலிருந்து தீப்பு பரிபூரண சுகம் பெற ஜெபிப்போம்.

### தூல்கோட்: குலாம் கிஸ்கு

**துதிக்க:** புதிதாக 3 கிராமங்களுக்குச் சுவிசேஷம் சென்றடைந்துள்ளது. முதன் முறையாக 26 நபர்கள் கிறிஸ்துவின் அன்பிற்குள் பிரவேசித்துள்ளனர். தீய ஆவிகளின் பிடிகளிலிருந்து தேவன் மோட்டகுத்ரா மற்றும் மித்தியை விடுதலை செய்தார். கமலி கிராம துர்காபாயைச் சரீர வீக்கத்திலிருந்து தேவன் குண மாக்கியதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மகல்சியா என்ற பெண் தேவதையை வழிபடுவோர் கிறிஸ்துவின் அன்பிற்குள் வர; கராமியா கிராம ஜாண்சன் பட்டேல் சிறுநீரகப் பிரச்சனையிலிருந்தும், ஜமானி கிராம சங்கீதாபாய் சரீர கட்டி களிலிருந்தும் சுகமடைய; தீய ஆவிகளின் பிடிகளிலிருந்து சபார்பாய், லட்சுமிபாய், பிக்ரிபாய் ஆகியோர் கர்த்தரால் விடுவிக் கப்பட ஜெபிப்போம்.

## ஜார்க்கண்ட்

### ஜெய்பூர்:

**அசோக் நாயக் & சுரபி நாயக்**

**துதிக்க:** புதிதாக 2 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. தேவன் ஜெயந்தி கஹரியின் மகள் மற்றும் துராம் டியோகிராமைக் கன்ன வீக்கத்திலிருந்தும், தியா பண்ராவைத் தீராத முதுகு வலியிலிருந்தும் சுகம் பெறச் செய்தார். பெரிய இருசக்கர வாகன விபத்தினின்று தேவன் பிரதான் மந்திரைப் பாதுகாத்தார். நமது விசுவாசி சுகுமதி சாம்பியாவிற்கு தேவன் சுகப்பிரசவத்தைக் கட்டளையிட்டதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மௌதி கிராமத்தில் சுவி சேஷத்தைத் தாங்கள் தீவிரமாக வெறுப்பதோடு, நமது விசுவாசிகளைக் கிறிஸ்தவ விசுவாசத்தை விட்டு வழிவிலகச் செய்பவர்கள் மனந்திரும்ப; ஜோஜோ ஹட்டு, குலாபூர் ஆகிய இரு கிராமங்களில் வசிப்போர் யாவரும் இரட்சிக்கப்பட; மௌதி மற்றும் ஜெய்பூர் பகுதிகளிலுள்ள திருச்சபையினருக்கு சிறிய சிறிய ஆலயங்கள் கட்டப்பட ஜெபிப்போம்.

## 12 ஏப்ரல் திங்கள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

செல்வி. சுசித்ரா லிம்மா

### மண்ட்ரோ: மிர்ஜியோ கிஸ்கு & செலினா ஹன்ஸ்தக்

**துதிக்க:** முதன்முறையாக 9 கிராமங்களில் சுவிசேஷம் உட்புகுந்துள்ளது. புதிதாக 7 நபர்கள் கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் வந்துள்ளனர். கெய்ரா திருச்சபையைச் சார்ந்த டேவிட் மராண்டி மற்றும் லூசி கிஸ்கு ஆகியோர் தும்டா – தமக் போன்ற இசைக்கருவிகளைத் தங்களது திருச் சபைக்கு இனாமாகத் தந்துள்ளனர். கோ்வா மற்றும் கெய்ரா திருச்சபையினர் தசமபாகம் கொடுப்பதற்கு பழக்கப்படுத்தப்பட்டுள்ளனர். லெந்து காலத்தில் திருச்சபை விசுவாசிகள் யாவரும் ஒவ்வொரு விசுவாசியின் இல்லத் திற்கும் சென்றதுமட்டுமல்லாமல் அவர் களுக்காக ஜெபித்தும் வந்தனர். வீட்டுக் கூரையிலிருந்து கீழே விழுந்த முன்ஷி மராண்டியை தேவன் காயமின்றிப் பாதுகாத்தார். சிகுர்போனா கிராமத்தில் முதல்முறையாகச் சுவிசேஷத்தை அறிவிக்க நமது சுதேச ஊழியருக்கும், விசுவாசிகளுக்கும் தேவன் கருணை நல்கினார். பக்கவாதத்திலிருந்து தெரசா கிஸ்குவையும், தீ விபத்தினின்று மனிஷா மராண்டியையும், வலிப்பு நோயிலிருந்து பெரோனிகா ஹன்ஸ்தாவையும், கல்லீரல் தொற்றுக்கிருமியிலிருந்து நத்வா பஸ்கி யையும், மூளை மலேரியாவிலிருந்து பிரியா கிஸ்குவையும், புற்றுநோயிலிருந்து சங்கீதா ஹெம்ரோமையும் தேவன் குணப்படுத்தி யதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது வாலிபப்பிள்ளைகள் கா்த்தருக்குப் பயப்படுகிற பயத்தில் வளரவும், திருச்சபை ஆவிக்குரிய செயல்பாடுகளில் பங்குப் பெறவும்; குடி, போதை மற்றும் வேசித்தனப் பாவங்களில் சிக்கிக் கொண்டிருக்கும் சந்தால் இனமக்கள் அப்பாவக்கட்டுகளிலிருந்து விடுதலை பெற; புற்றுநோயினிமித்தம் மரணத்தைத் தழுவிய லூக்காஸ் பஸ்கியின் பிள்ளைகளின் ஆறுதலுக்காகவும், அவர்கள் இரட்சிப் படையவும்; பெரிசியா, லக்ரா, படோர், மத்பேடா, ஹரக்கா, இத்தாகரி, தேவதானர், கல்ஹஜ்ஹோார், கிட்டாஜ்ஹோர், கெந்துவா மற்றும் ரங்குகிட்டா ஆகிய இடங்களில் நடத்தவிருக்கும் வெளிசந்திப்பு ஊழியங் களைக் கர்த்தர் ஆசீர்வதிக்க; மெஹி பகுதி யிலே வாழ்ந்துக்கொண்டிருக்கும் 67 பின்மாற்றமடைந்துள்ள விசுவாசிகளின் குடும்பங்கள் மீண்டும் கிறிஸ்துவின் விசுவாச மந்தைக்குள் வந்துச் சரணடைய ஜெபிப்போம்.

### *பிசாசைக் கண்டவன் கிறிஸ்தேசுவைக் கண்டான்!*

*ஜார்க்கண்ட் மாநிலத்தில் லால்மட்டியா பணித்தளத்தைச் சேர்ந்த ஜெய்மன்தி தேவி 8 மாத கர்ப்பிணி, ஹர்லாடோலா என்ற கிராமத்தில் பிசாசு பிடியினால் அவதியுற்றார். அவர் தனது நினைவை இழந்ததினால், அவருடைய முகம் மிகவும் கருமையாக மாறியது. பிசாசு காட்டிக்கொண்டிருந்ததை மட்டுமே பார்த்து கொண்டிருந்தார். சமீப காலத்தில், இதே நிலையை அடைந்த மற்று மொருவர் மரித்திருந்தார். எனவே, அவரது குடும்பம் மிகவும் பயந்து, ஆலய மூப்பரிடம் அழைத்துச் சென்றனர். மொகாபத்தான் கிராமத் தில் நடந்துக் கொண்டிருந்த மூன்று நாள் உபவாச கூடுகைக்கு அவரை அழைத்துச் செல்லுமாறு அந்த மூப்பரின் மனைவி பணித்தார். யாவரும் கூடி ஜெபிக்கின்ற வேளையில், அந்த அசுத்த ஆவி அவரை விட்டு உடனே அகன்றது. சுகம்பெற்ற அவர் மறுநாள் நடந்துவந்து நமது ஆலய ஆராதனையில் குடும்பமாகப் பங்குப் பெற்றார். அல்லேலூயா!*

**13**
**ஏப்ரல்**
**செவ்வாய்**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. லிடியா சுதர்சன் தாமஸ்
திருமதி. அகோனி குட்டோய் அச்சுமி
திரு. கிறிஸ்டியன் பிரகாஷ், திருமதி. ஜெபமலர் ராஜன்

## பகையா & தீன்பஹாட்:
### ஜெபக்குமார் & பொன்லதா

**துதிக்க:** புதிதாக 22 நபர்கள் கிறிஸ்துவை விசுவாசிக்கத் தொடங்கியுள்ளனர். ஜமால் பூரிலுள்ள நமது விசுவாசியொருவரின் ஜெபத்தைக் கேட்டு, பொல்லாத ஆவி பிடித் திருந்த ஒரு மனிதனை தேவன் விடுவித்தார்; அதன்பொருட்டு, அக்கிராமத்தில் புதிதாக ஆராதனை தொடங்கப்பட்டுள்ளது. கெல பண்ணா திருச்சபையைச் சார்ந்த நமது விசுவாசி ராணி லெக்தா நமது இயக்கத் தின் மூலம் ஒடிசாவிற்கு மிஷனெரியாகச் செல்ல தேவன் பாராட்டிய அளவில்லா கிருபைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மாடியிலிருந்து கீழே விழுந்து உயிர் சேதமின்றி ஜெபத்தின் மூலம் காப்பாற்றப்பட்ட பட்டேல் மற்றும் சுவிசேஷத் திற்குச் செவிசாய்க்கும் சுனதி கிராம ராம்ஜி ஆகியவர்களின் இரட்சிப்பிற்காக; ஜீவன் மாற்கு, ஒராவன் சமிதி மூலம் அங்குள்ள திருச்சபைகளையெல்லாம் தாமாகவே செயல்பட வைக்க எடுக்கும் முயற்சிகள் அனைத்தையும் தேவன் ஆசீர்வதிக்க; புதிதாக ஒவ்வொரு மாதமும் உருவாகும் திருச்சபைகளுக்கு நல்ல உபதேசியார்கள் கிடைக்க; தீன்பஹாட் பணித்தளத்தில் ஓர் ஆலயம் கட்டப்பட ஜெபிப்போம்.

## அமரபாடா:
### பென்ஹர் & மேரி ஜான்சி ராணி

**துதிக்க:** 20 நபர்கள் முதன்முறையாக இயேசுவை ருசிக்கத் துவங்கியுள்ளனர். நமது விசுவாசிகளான பாலிசார் சோரேன், ராஜேஷ் சோரேன், பிட்டி ஹஸ்தா, ஹோப்னா முர்மு ஆகியோர் ஜெபத்தின் மூலம் மூளை மலேரியாவிலிருந்து சுகம் பெற்றுள்ளனர். திருமணமாகி 17 வருடங்களுக்குப் பின், சாமுவேல் ஹஸ்தா & அல்பினா முர்முவிற்கு தேவன் மழலை பாக்கியம் அருளியிருப்பதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இயேசுவைச் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டதினால், தனது சொந்த கிராம மக்களாலேயே ஒதுக்கிவைக்கப்பட்ட சூழ்நிலையில் உபத்திரவத்தைச் சந்தித்து வரும் நார்ஜி கிராம பியாரி முர்முவிற்காக; மிசில் ஹெம்ரோம், குன்கா கிஸ்கு மற்றும் ருசிலால் முர்மு ஆகியோர் இரட்சிக்கப்பட; திலியா, பாகர்பூர், பக்காய், காய்பத்தன் ஆகிய கிராமங்களில் சுவிசேஷ வாசல்கள் திறக்கப்பட ஜெபிப்போம்.

## பேருந்தில் பயணிக்கும்பொழுது மின்சார தாக்குதல் செயலிழந்தது!

*மகாராஷ்டிரா, ஜிம்மலாகட்டா பணித்தளத் தில் டச்சிலிபேட்டா கிராமத்தைச் சேர்ந்த நமது விசுவாசி பென்டம்மா ஜுரத்தினால் கஷ்டப்பட்டார். அவர் சிகிட்சை பெற்று வீடு திரும்பும்போது, நமது ஊழியரின் வீட்டிற்கு ஜெபத்திற்காக வந்திருந்தார். பின்னர் அவர் தன் வீட்டிற்குப் பேருந்தில் திரும்பும் சமயம், ஜிம்மலாகட்டாவைக் கடக்கும்போது, ஒரு மின்சார கம்பம் பேருந்தின் மேல் விழுந்தது. அனைவரும் திகிலடைந்து வெளியேற முயன்று, குதித்துக் காயமடைந்தனர். பென்டம்மா, ஜெபித்து பின்னர் பேருந்தி லிருந்து காயமின்றி இறங்கினார். தேவனுக்கே மகிமை!*

**14 ஏப்ரல்**
**புதன்**

*உபவாச ஜெபநாள்*

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஹெப்சிபா ஜேக்கப் பிரதீப் குமார்
திருமதி. ராஜம் பால் சம்பத்
திருமதி. கண்மணி ராஜாசிங்
திரு. பிஜய் மால்தோ

# மேற்கு வங்காளம்

## கங்காராம்பூர் : தீஹே & சரணி

**துதிக்க:** புதிதாக 3 கிராமங்களில் சுவிசேஷ விதைகள் விதைக்கப்பட்டுள்ளன. சுஹாஜ், கோகோதங்கா, சிநேகரி, சோன்டா திஹே, சோஹேட், தெலிகான், செல்பாரா, பாபோன்கான், புர்புக்கிரியா ஆகிய கிராமங்களில் நடைபெற்ற இயேசு திரைப்பட ஊழியத்தையும், சுவிசேஷத்தை ஆர்வமுடன் கேட்ட 2 குடும்பங்களையும் தேவன் ஆசீர்வதித்தார். பாபோன்கான் கிராமத்தில் நடைபெற்ற விடுமுறை வேதாகமப்பள்ளி நிகழ்ச்சி பெரும் விளைவுகளை ஈந்ததோடு, சுவிசேஷத்திற்குத் திறந்த வாசலையும் உருவாக்கித் தந்துள்ளது. நமது விசுவாசி சாமுவேல் ஹெம்ரோம் & அஞ்சலி அவர்களின் திருமண நிகழ்ச்சியை தேவன் அபரிமிதமாக ஆசீர்வதித்தற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷத்தை எதிர்க்கும் பனாய் டுடு மனந்திரும்ப; சாம் ஹஸ்தக், ராபின் பெஸ்ரான், ராஜேஷ் கிஸ்கு, ஸ்டீபன் மார்தி, சுபில் ஆகியோரின் இரட்சிப்பிற்காக; பலியாகோரா கிராம ரேணுகா சோரேனுக்குக் குழந்தை பாக்கியம் கிடைக்க; கால் வீக்கத்திலிருந்து ரத்தன் சோரேனையும், தீராத தலைவலியிலிருந்து நமது சுதேச ஊழியர் ஹோப்னா முர்முவையும் தேவன் நன்கு சுகமாக்க ஜெபிப்போம்.

## இட்டாஹார்: அஸ்தபான் ஆதித்ய குமார் லிம்மா & மனினி பெபர்த்தா

**துதிக்க:** புதிதாக 3 கிராமங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளன. புதிதாக 10 நபர்கள் இயேசுகிறிஸ்துவின் மந்தைக்குள் இணைந்துள்ளனர். 4 இடங்களில் ஆவிக்குரிய நாடக நிகழ்ச்சிகளை தேவன் ஆசீர்வதித்துக் கொடுத்ததோடு ஏறத்தாழ 400 நபர்கள் முதன்முதலாக இயேசுவின் அன்பை இதன்மூலம் ருசிக்கவும் ஏதுவாயிற்று. இடம்பெயர்ந்துச் சென்ற நமது விசுவாசிகள் மீண்டும் தங்கள் இல்லங்களுக்குச் சுகபத்திரமாய் திரும்பியுள்ளனர். பிலாய் முனி கிராம சுனில் முர்முவைத் தீராத முதுகு வலியிலிருந்து தேவன் அற்புதமாக சுகப்படுத்தியதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பின்மாற்றமடைந்திருக்கும் நமது விசுவாசிகளான பன்போல் கிராம கோபிராஜ் டுடு, துட்கோல் கிராம பிமோல் ஹஸ்தக், ஹக்னா போக்கூர் கிராம சுனிராம் சோரேன், பசாஹர் கிராம புத்து முர்மு & கிஷான் முர்மு, பொக்காரிபுட் கிராம ராஜன் முர்மு ஆகியோர் மனந்திரும்பி மீண்டும் விசுவாச வாழ்விற்குள் வர; பசாஹர் கிராம ஜூமுர் முர்மு முதுகு வலியிலிருந்தும், உஜான்தர் கிராம புத்து ஹெம்ரோம், ஹக்னா போக்கூர் கிராம லோஜன் சோரேன் காசநோயிலிருந்தும் சுகம் பெற; நமது விசுவாசிகளான பப்லு முர்மு & சுனி மார்தி, ராம் ஹன்ஸ்தக் & சாமி முர்மு, ராஜு முர்மு & மோனிகா மார்தி ஆகிய குடும்பங்களுக்குக் குழந்தை பாக்கியங்களை தேவன் அருள ஜெபிப்போம்.

**15**
**ஏப்ரல்**
**வியாழன்**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. பாசுதேவ் மால்தோ
திருமதி. ஜெபா தெபொராள் வேதமாணிக்கம்

### சம்சி: தீப் ரத்னா & மித்லேஷ்

**துதிக்க:** 2 கிராமங்களில் புதிதாக நற்செய்தி உரைக்கப்பட்டுள்ளது. 10 நபர்கள் புதிதாகக் கிறிஸ்துவின் விசுவாச மந்தைக்குள் இணைந்துள்ளனர். தேவன் விடுமுறை வேதாகமப்பள்ளி ஊழியத்தை ஆசீர்வதித்துத் தந்தார். அதுமட்டு மல்லாது அநேக புதிய மக்களின் தொடர்பும் இவ்வூழியத்தின் மூலம் கிடைத் துள்ளது. காசிம்பூர் கிராமத்தில் 2 குடும் பங்கள் சுவிசேஷத்தின் மீது வாஞ்சை காட்டுகின்றனர். வாரி பகுதியைச் சார்ந்த ரத்தனியா கிராமத்தில் புதிதாக ஆராதனை யொன்று சமீபத்தில் தொடங்க தேவன் உதவி நல்கியதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சபையின் ஆவிக்குரிய செயல் பாடுகளில் அச்சபை மூப்பர்கள் மனமு வந்து ஈடுபட; வரும்நாட்களில் பல யிடங்களில் நடக்கவுள்ள வெளிசந்திப்பு ஊழியங்களுக்காக; பட்வாரி பெஸ்ரா, தினம் ஹன்ஸ்தா, பிஜு முர்மு, மகுல் கிஸ்கோ, மோகன் கிஸ்கோ, மஞ்ஜி கிஸ்கோ ஆகியோரது குடும்ப மக்களின் இரட்சிப் பிற்காக; வாரி, குரியல், ஜித்தல்பூர், பகன்டோலா ஆகிய இடங்களில் ஆலயங் கள் கட்டப்பட; ஜித்தல்பூர் கிராம நமது புதிய விசுவாசி மங்கல் ஹன்ஸ்தாவிற்குப் பக்கவாதத்திலிருந்து சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

### கூச் பெஹர்:
### ஜென்னிஷ் & சுகந்தி புஷ்பம்

**துதிக்க:** புதிதாக காளிபாரா, பக்சத்திரி, கர்காரியா ஆகிய 3 கிராமங்களில் சுவிசேஷ வசனங்கள் விதைக்கப்பட்டுள்ளன. நமது ஊழியங்களில் பெரிதும் உதவி செய்யும் புதிய தொடர்பாளர்களின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; இயேசு திரைப்படத்தின் மூலம் ஏறத்தாழ 400 நபர்கள் முதன் முறையாகத் தங்களது வாழ்வில் இயேசுவைக் குறித்து கேள்விப்பட கர்த்தர் கிருபை செய்தமைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது புதிய தொடர்பாளர்களான நடராஜ் ராய், ஹரதான் சுத்ராதார், சுக்தேபாராய் மற்றும் சுபு ராயின் இரட்சிப்பிற்காக; போதை பொருட்களுக்கு அடிமையாகி, தங்களது உடல்நலத்தைக் கெடுத்துக்கொண்டிருக்கும் மக்கள் யாவரும் மனந்திரும்ப; வரும்நாட்களில் நடக்க இருக்கும் ஊழிய நிகழ்ச்சிகளின் ஆசீர்வாதங்களுக்காக ஜெபிப்போம்.

## *கடிக்கின்ற மகன் கிறிஸ்துவை ருசித்தான்!*

*உத்தரகாண்ட் மாநிலத்திலுள்ள பஸ்பூர் பணித்தளத்தில், டாக்கூர்தாஸ் என்பவர் பரவாலா கிராமத்தில் உள்ளவர். இவரது 8 வயது நிரம்பிய மகன் பிசாசு பிடியினால் அவதியுற்றுக் கொண்டிருந்தான். தனது அருகாமையில் எவர் வந்தாலும், அவர்களைக் கடிப்பது அவன் வழக்கமாக இருந்தது. ஆகையால் கிராமத்தில் அனைவரும் அவனைக் கண்டு அஞ்சுவர். மிகுந்த வருத்தத்துடன், கிறிஸ்துவை விசுவாசி யாதிருந்த அவர் ஊழியரிடம் ஜெபிக்கும்படி, தனது மகனை அழைத்துச் சென்றார். நமது ஊழியர் 'அங்கித்' என்ற அச்சிறுவனைத் தரையில் உட்கார வைத்து, அவனது கையில் தனது கையை வைத்து, பிசாசு அவனை விட்டுப்போகும்படி கட்டளை கொடுத்தார். உடனே அவன் விடுதலை பெற்றான். இதனைக் கண்ட அநேகர் 'இயேசுவே கிறிஸ்து!' என்று அறிக்கையிட்டனர். அல்லேலூயா!*

## 16 ஏப்ரல் வெள்ளி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. கிங்ஸ்லி ஐசக் ஜாண்சன் எம்.
திருமதி. அமுதா குமார் பால்
திரு. ஸ்ரீனிவாசன் ஜெ., திரு. டென்சிங் ஆர்.
திரு. அஸ்தபான் ஆதித்ய குமார் லிம்மா

# அஸோம்

## லக்கிம்பூர்:

### சி. ஹெச். ஜாண் & வேணி

**துதிக்க:** புதிதாக 18 நபர்கள் கிறிஸ்துவை விசுவாசிக்க ஆரம்பித்துள்ளனர். நமது தன்னார்வ ஊழியர் பிரணாப் சுதேச ஊழியராகப் பணி செய்ய தன்னை அர்ப்பணித்துள்ளார். அவரது ஊழியத் திற்குப் பயன்படும்படியாக லோக்ரா பணித்தள நமது விசுவாசி இத்தேஷ்வர் நர்ஹோ தனது இரு சக்கர வாகனத்தை அவருக்கு நன்கொடையாகக் கொடுத் துள்ளார். நமது சபை மூப்பரான ரோஹிம் பட்டீர் நமது ஊழியச்செயல்பாடுகளில் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றார். குலாபாலி கிராமத்தில் எழும்பிய எதிர்ப் பலை கர்த்தரின் கிருபையால் அமர்ந் தடங்கியது. ஷிரகவா மற்றும் தெலியாபாரி கிராமங்களில் ஊழியத்திற்குத் திறந்த வாசலைத் தேவன் தந்துள்ளார். மன நோயிலிருந்து சிவானந்தையும், தீய ஆவியின் பிடியிலிருந்து சுமியாவையும் தேவன் விடுவித்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** எதிர்ப்புகளின் மத்தியிலும் நமது அனைத்து புதிய விசுவாசிகளும் கிறிஸ்துவுக்குள் வளர; லுத்தேஷ்வர் பட்டீர், மிர்னால் பட்டீர், மினகாந்தோ, பெஸ்ரா, கஜோல், ஆயோ, அக்குராம் மற்றும் அவரது தந்தை ஆகியவர்களின் இரட்சிப்பிற்காக; நமது விசுவாசிகளான பாப்பா தோலே & ராஜிப் சின்ட்டி ஆகியோருக்குக் குழந்தை பாக்கியம் கிடைக்க; நமது பணித்தளங்களிலிருக்கும் மந்திரவாதிகள் யாவரும் மனந்திரும்ப; மய்ஜோனி, மானிக் தோலே சிறுநீரகப் பிரச்சனையிலிருந்தும், அர்மோன் பக்கவாதத்திலிருந்தும், பீனா பெகு சரீர கட்டியிலிருந்தும் பூரண சுகம் பெற ஜெபிப்போம்.

## கோஹ்பூர்:

### டென்சிங் & கவிதா

**துதிக்க:** புதிதாக 9 நபர்கள் கிறிஸ்து வின் அன்பிற்குள் அடைக்கலம் புகுந் துள்ளனர். சொக்கலா பகுதி ஆலயக்கட்டு மானப்பணி சிறந்த முறையில் நடை பெற்றுக் கொண்டிருக்கிறது. அக்கட்டிட கட்டுமானப்பணியில் நமது சபை மூப்பர் களும் தீவிரமாக ஈடுபட்டு வருகின்ற தற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பின்மாற்றமடைந்துள்ள நமது விசுவாசி கயூமின் தாயாரைக் காச நோயிலிருந்தும், உன்ரவால் மற்றும் பர்தோவை மனநிலை பாதிப்பிலிருந்தும் தேவன் சுகப்படுத்த; தாங்களாகவே சொந்தமாகச் சாராயம் காய்ச்சுகின்ற தொழிலைச் செய்துவரும் நமது மிஸ்ஸிங் சமுதாய மக்கள் அத்தீயப் பழக்கத்தை விட்டுவிட; அதிக புயல்காற்று மற்றும் கன மான மழைக்காலங்களில் நமது மக்கள் யாவரும் காக்கப்பட ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஸ்தனிஸ்லாஸ் சுவாமிதாஸ்
திரு. பிரபாகர சாரதி, திரு. பாபு பி.
திருமதி. மேரி ஜான்சி ராணி பென்ஹர்

# சத்தீஸ்கட்

## பையாதன்:

### முத்துக்குமார் & நேத்ரவதி

**துதிக்க:** நமது புதிய தொடர்பாளர்களான கோன்சா கிராம அஜய்குமார், ஜம்தி கிராம கோவிந்த், தும்ரியா கிராம சுனில், சுசில், பர்சாபாரா கிராம பாஸ்கர் ஆகியோர் தேவ வசனத்தைக் கேட்டு, கர்த்தரில் அனுதினமும் வளர்ந்து வருகிறார்கள். தும்ரியா, பர்சாபாரா, நவபாரா ஆகிய கிராமங்களில் வெளிசந்திப்பு ஊழிய நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றன. மகுலி, பாஞ்சா, சிவபிரசாத் நகர் ஆகிய கிராமங்களில் ஆராதனைக்கூடுகைகளும் கலபகாரா, கேவ்ரா ஆகிய கிராமங்களில் வீடு சந்திப்புகளும் நேர்த்தியாக நடைபெற்றதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது ஊழியங்களைத் தன்னார்வ ஊழியர்கள் முன் வந்துச் செய்ய; ஆஷிஷ் லாலா கல்லீரல் தொற்றுக் கிருமியிலிருந்தும், நவபாரா கிராம டோலுராம் சிறுநீரகப் பிரச்சனையிலிருந்தும், ராம்பாய் மூட்டு வலியிலிருந்தும் சுகம் பெற; தம்பதியினரான சந்தீப் & பிரஜுத்தி குழந்தை பாக்கியம் பெற ஜெபிப்போம்.

## சம்ப்பா:

### ரமேஷ்வர் தயாள் நிர்மல் & மதுகலா; பூபதி, வினாயக்

**துதிக்க:** ஜோன்தாரா, தோங்கொ், ஜால் மாலா ஆகிய 3 கிராமங்களில் புதிதாகச் சுவிசேஷம் பறைசாற்றப்பட்டுள்ளது. புதிதாக 3 நபர்கள் கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் வந்துள்ளனர். நமது புதிய விசுவாசி பீர்பால் டிகா குடும்பம், சுரஜ்குமார் நரங்கி குடும்பம், போதானி குடும்பம் ஆகியோர் வெளிசந்திப்பு ஊழியங்களில் ஆர்வமாகப் பங்கெடுக்கின்றனர். 25 மொழிகளில் நடந்த ஊழியப்பின்தொடர்பணியையும், 8 இடங்களில் நடந்த ஆராதனைகளையும் தேவன் ஆசீர்வதித்துத் தந்தமைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நாம் நடத்திய ஆவிக்குரிய மாநாடுகளில் வந்து கலந்துக் கொண்ட நமது சாத்னமி இன விசுவாசிகள் 200 பேரும் தங்களது ஆவிக்குரிய வாழ்வில் நன்கு வளர; குழந்தைத் திருமணம், வரதட்சணை முறை மற்றும் குடிப்பழக்கம் போன்ற சமுதாயத் தீமைகள் வேரோடு பிடுங்கி எறியப்பட; நமது விசுவாசிகளும், நமது ஊழிய முக்கிய தொடர்பாளர்களும் பிற மாநிலங்களுக்குத் தங்களது சொந்த தொழில்களினிமித்தம் புலம்பெயர்ந்துச் செல்வதால், அங்கே அவர்களது விசுவாசத்திற்கு பங்கம் விளையாதிருக்கும்படியாக; பாம்காரிலுள்ள நமது சாத்னமி இன சிறுவர்களுக்குத் தேவையான சிறுவர் விடுதியொன்று இயக்கப்பட; சமாரியா மற்றும் கோனி கிராமங்களில் ஆலயம் கட்டப்பட வேண்டிய நிலத்தைச் சரியாகப் பதிவுச் செய்ய; கமரியா கிராமத்திலுள்ள சாத்னமி மக்கள் யாவரும் கிறிஸ்துவை அறிந்துக்கொள்ள ஜெபிப்போம்.

## 18 ஏப்ரல் ஞாயிறு

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ரூபன் சாமுவேல் ஜே.
திருமதி. மேரிகுட்டி வின்செண்ட்
திருமதி. லிஸி வாவச்சன்
திருமதி. பிரிசில்லாள் ரமேஷ் வேல்ராஜ்
திருமதி. கீதாஞ்சலி நாயக்
திரு. ஜாண்டேவிட்சன் செல்வராஜ்

### காட்கோரா:
### டிட்டிங்பௌ & மலங்மெய் சனாலுங்

**துதிக்க:** 15 கிராமங்கள் புதிதாகச் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளன. கபுபாரா, புட்டிபாக்னா ஆகிய கிராமங்களில் புதிதாக ஆராதனைக்குழுக்கள் துவங்கப்பட்டுள்ளன. புட்டிபாக்னா மற்றும் திலியாமர் கிராமங்களிலுள்ள விசுவாசிகளுடன் நடத்தப்பட்ட உபவாச ஜெபக்கூடுகையை தேவன் ஆசீர்வதித்துத் தந்தார். பஞ்சதார் கிராம சாந்தினியைத் தீய ஆவியின் பிடியிலிருந்து கர்த்தர் விடுவித்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கபஷோரா கிராமத்திலுள்ள சுவிசேஷ எதிர்ப்பாளர்கள் மனந்திரும்ப; அநேக சவால்களின் மத்தியில் பன்கேதா திருச்சபை விசுவாசிகள் தங்களது விசுவாசத்தில் உறுதியாக இருக்க; 6 நபர்களை மாத்திரமே விசுவாசிகளாகக் கொண்டுள்ள மார்வா தோரஹா கிராமத்திலுள்ள பிறமக்களும் இரட்சிக்கப்பட; இக்கிராமத்திலுள்ள விசுவாசிகளைக் குடிப்பழக்கத்திற்குள்ளாக்கும் பிற இயக்க ஊழியர்கள் மனந்திருந்த; வரும்நாட்களில் நடக்கவிருக்கும் விசுவாசிகளின் மேளாவிற்கான ஆயத்தப் பணிகளுக்காகவும் தேவ ஆசீர்வாதங்களுக்காகவும் ஜெபிப்போம்.

### லுடேக்: டேவிட் மசிஹ் & நிஷா

**துதிக்க:** புதிதாக 8 கிராமங்களில் சுவிசேஷ வார்த்தைகள் உரைக்கப்பட்டுள்ளன. பார்பரா பகுதியில் கடந்த நாட்களில் ஒரு நபர் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டுள்ளார். விபத்தினின்று நமது சுதேச ஊழியரொருவரின் மகனை தேவன் பாதுகாத்தார். காங்ரா கிராமத்தில் நமது ஆராதனையில் புதிதாக ஒரு குடும்பம் வந்து இணைந்து தேவனை ஆராதிக்க ஆரம்பித்துள்ளமைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தீராத காய்ச்சலினிமித்தம் பெங்களூரில் மருத்துவமனையில் அவசரப்பிரிவில் சிகிட்சை பெற்றுவரும் நமது புல்தெகா திருச்சபை விசுவாசி அர்ஜுனை தேவன் சுகப்படுத்த; நமது விசுவாசி பார்வதிக்குக் குழந்தை பாக்கியம் கிடைக்க; துமர்பார் பகுதியில் வாழும் கோர்வா இன மக்களும் நம்முடன் இணைந்து தேவனை ஆராதிக்கும் படியாக அங்கே ஓர் ஆலயம் கட்டப்பட ஜெபிப்போம்.

### பிரதாப்பூர்: தினேஷ் குமார் & நீத்து

**துதிக்க:** புதிதாக 9 கிராமங்களில் சுவிசேஷம் பறைசாற்றப்பட்டுள்ளது. சனாபாரா, பாசபாரா, மகுவாபாரா ஆகிய 3 இடங்களில் வாழும் கோண்ட் இன மக்கள் மத்தியிலிருந்து தேவன் நமக்குப் புதிய தொடர்பாளர்களை ஊழியத்தில் தந்துள்ளார். கங்கோதிரி திருச்சபையினர் நாளுக்குநாள் பெருகி வருகின்றனர். பற்பல மொழி இனத்தவர்களும் இத்திருச்சபையின் ஆராதனையில் கிரமமாகப் பங்கேற்கின்றனர். பிரதாப்பூர் பணித்தளத்தில் தேவன் ஊழியத்திற்கென திறந்த வாசலைத் தந்துள்ளமைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மந்திரவாதப் பழக்கங்களையும் தன்வசம் வைத்துக்கொண்டு, இயேசுவை முழுவதும் நம்பாதபடிக்கு அவரைக் குறித்தும் மக்களிடம் பறைசாற்றிக் கொண்டிருக்கும் மாயாபூர் கிராம சோமர்சாய் இரட்சிக்கப்பட; கங்கோதிரி மற்றும் கோண்டபாரா திருச்சபையினர்களின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக ஜெபிப்போம்.

**19**
**ஏப்ரல்**
**திங்கள்**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. மெயின்ராஜ் ஐ.
திருமதி. சுவர்ணலதா சஞ்சீப் குமார் ஆன்ட்ரப்

### வாட்ராஃப் நகர்:
### பூபதி & பாலின் மேரி

**துதிக்க:** புதிதாக முர்கோல், மகாதேவ்பூர், சாந்திபூர், ராம்கோலா, ராய்பூர் ஆகிய கிராமங்களில் சுவிசேஷத்தைப் பறை சாற்ற தேவன் அநுக்கிரகம் ஈந்தார். ஒகாரி, சவதாபூர், லமோரி, புவிமன், மித்தலாபூர், ஜப்ராபாரா ஆகிய கிராமங்களில் ஆரா தனைகள் தடையின்றி நடைபெற்று வரு கின்றன. நமது விசுவாசிகள் தாங்களாகவே அவர்களது சொந்தபந்தங்களுக்குச் சுவி சேஷத்தைப் பகருகின்றதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இப்பணித்தளத்திலுள்ள சுவிசேஷ எதிர்ப்பாளர்கள் யாவரும் மனந்திரும்ப; விசுவாசிகள் தங்களது விசுவாசத்தில் தளராமல் முன்செல்ல; சுவிசேஷத்தைக் கேட்டிருப்போர் அனைவரும் கிறிஸ்துவைச் சொந்தமாக அறிகிற அறிவின் அனுபவத் திற்குள் வர ஜெபிப்போம்.

## ஒடிசா

### ரிமுலி: சங்கர் & ஜெலின்

**துதிக்க:** புதிதாக 2 கிராமங்களில் சுவிசேஷ வார்த்தைகள் பகரப்பட்டுள்ளன. புதிதாக 11 நபர்கள் கிறிஸ்துவின் பக்கம் சேர்ந்துள்ளனர். எல்லாத் திருச்சபைகளிலும் விசுவாசிகளின் முகாம் சிறந்த முறையில் நடைபெற்று வருகின்றது. கொங்கனா கிராமத்தில் நமது ஆராதனையில் புதிய நபர்கள் பங்கேற்கின்றனர். எதிர்பாராது விபத்தைச் சந்தித்த மக்களுக்கு முதலுதவி செய்யவும் கிறிஸ்துவின் அன்பை அவர்களிடம் பகிரவும் கர்த்தர் நமது ஊழியர்களுக்குப் பாராட்டிய கிருபைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அர்சோலா, கொங்கனா ஆகிய கிராமங்களில் வசிக்கும் நமது விசுவாசிகளின் நற்சாட்சியுள்ள வாழ்விற்காக; குடிபோதைக்கு அடிமையாகியிருப்போர் அப்பழக்கத்தி லிருந்து விடுபட்டு மனந்திரும்ப; ஹரிதாஜுடி கிராம நமது விசுவாசி பர்தன் முண்டாவை அவரது சொந்த ஜனங்களே உபத்திரவத் திற்கு உட்படுத்தும் நிலையிலிருந்து கர்த்தர் அவரை விடுவிக்க; பினோத்பூர், கிரிகுலா மற்றும் ஹரிதாஜுடி கிராமங்களில் மீண்டும் ஆராதனைகள் தொடங்கப்பட ஜெபிப்போம்.

## குஜராத்

### பாஜிபுரா:
### மார்கஸ் மால்தோ & சாரா மார்கஸ்

**துதிக்க:** ஒரு கிராமத்தைப் புதிதாகச் சுவிசேஷத்தினால் சந்தித்துள்ளனர். சாமுவேல்பாய், இம்மானுவேல்பாய், சரத்பேன் ஆகிய நமது விசுவாசிகளுக்கு தேவன் தகுந்த வாழ்க்கை துணைகளை அமைத்துத் தந்துள்ளார். எவ்வித இடைஞ்சலு மின்றி ஊழியம் செய்ய தேவன் நமது விசுவாசிகளுக்கும், சுதேச ஊழியர்களுக்கும் கிருபை புரிகிறதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பாஜிபுரா பணித்தள திருச்சபை விசுவாசிகளின் நற்சாட்சியுள்ள ஆவிக் குரிய வாழ்விற்காக; சுவிசேஷத்தைக் கேட்டிருப்போர் கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொண்டு, தங்களது விசுவாசத்தை அவரில் அறிக்கை பண்ண; மங்ரோலியா கிராம விசுவாசிகளின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; நமது சபை மூப்பர்கள் தங்களது ஆவிக்குரிய வளர்ச்சிக்குப் பெரிதும் பயன்படும் தேவ வசனத்தைக் கற்றுக்கொள்வதில் நல்ல ஆர்வம் காட்ட ஜெபிப்போம்.

**20 ஏப்ரல் செவ்வாய்**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. சாந்தா வினயராஜ்
திருமதி. லைசம்மா பாபு
திரு. ஜாஹர் சாய் பன்னா

### பாவ்நகர்: கரோடா பிஸ்வா ரஞ்சன் & பிரபினா ராணி

**துதிக்க:** நமது விசுவாசி கீதாபேன் தனது அருகாமையில் வசிக்கும் மக்களுக்குச் சுவிசேஷத்தைப் பகருவதுடன், அநேகரை அதன்மூலம் கிறிஸ்துவண்டை கொண்டு வருகிறார். நமது புதிய தொடர்பாளர்களான மிட்டால்பேன் மற்றும் அவரது கணவர் இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களாயினர். தேவன் பிரேமைத் தீய ஆவியின் பிடியிலிருந்து மீட்டதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கீதாபேனின் கணவர் இரட்சிக்கப்பட; நமது புதிய தொடர்பாளர்களான பிரவீனாபேன், ஜோஷி மற்றும் ஜத்தின்பாய் இயேசுவைத் தங்களது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; ஹாதிபேன் தனது வீட்டை நாம் ஆராதனை நடத்தத் திறந்துத் தந்துள்ளார். ஆலாங் என்ற இடத்தில் ஆராதனைக்கென ஒரு கொட்டகையைப் போடத் திட்டமிடும் திட்டம் நல்ல முறையில் செயல்வடிவம் பெற; வன்யா ஜாதியின நமது புதிய விசுவாசியாகிய ரட்சணா வர்மா தனது உற்றார் உறவினர்களிடத்தில் இயேசுவைக் குறித்து தனது விசுவாசத்தைப் பகர; பாவ்நகர் பகுதியில் தேவனை ஆராதிக்க ஒரு நல்ல இடம் கிடைக்க ஜெபிப்போம்.

### சஹயாத்ரி பிராந்தியம்:
**சாமுவேல் சுப்பிரமணி & சுசிலா**

**துதிக்க:** காந்திபாயின் 45-வது வயதில் அவருடைய குடும்பத்திற்கு தேவன் மழலை பாக்கியத்தைக் கட்டளையிட்டுள்ளார். உமர்காம் பணித்தளம், நவினகிரியிலுள்ள நமது விசுவாசியின் மனைவி சாந்திபேன் அநேகநாள் ஜெபத்திற்குப்பின் தனது கணவரோடு இசைந்து வாழ சம்மதம் தெரிவித்துள்ளார். பெரிய விபத்தினின்று நமது விசுவாசி சுக்ரிபேனின் மகனை தேவன் காப்பாற்றியுள்ளார். ஓஜார் திருச்சபை ஆலயக்கட்டுமானப்பணி மேற்தளப்பகுதி வரை உயர்ந்து வந்துள்ளது. பக்கவாதத்திலிருந்து தேவன் சாம்ஜிபாயைச் சுகப்படுத்தினார். நமது புதிய தொடர்பாளர் ஷர்மிளா பேனுக்கு தேவன் சுகப்பிரசவம் நல்கினார். மாதுரி கிராம அனிஷாபேனிற்குத் திருமணமாகி 5 வருடங்களுக்குப் பிறகு, தற்போது குழந்தை பாக்கியம் கிடைத்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நடக்க இயலாமலிருக்கும் நகர் கிராம தேவுபாயிற்கும், காசநோயினால் அவதிப்படும் ரஷ்மிதாபேனிற்கும் நல்ல பூரண சுகம் கிடைக்க; உமர்காம் பணித்தள கமலேஷ், சுனில், ஜிக்கு பேன், அமின்பேன், தாமன் பணித்தள பூஜாபேன், லதாபேன், பாவனா, அங்கிதா, மற்றும் பிற பணித்தள வாசிகளாகிய அமிதா, அஞ்சலி, சுனிதா, ஹன்சா ஆகியோர் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**21**
**ஏப்ரல்**
**புதன்**

*உபவாச ஜெபநாள்*

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. அருள்மணி ஆர்., திரு. தியாகராஜன் பி.
திருமதி. ஜெயந்தி மார்டி

## சூரத் :

### மாதவராய் & ஜெபதங்கம்

**துதிக்க:** பின்மாற்றமடைந்திருந்த நமது விசுவாசி சந்தோஷ் நீண்டகால இடைவெளிக்குப்பின் மீண்டும் குடும்பமாகத் திருச்சபை ஆராதனைக்கு வரத் தொடங்கியுள்ளார். ஊரடங்கிற்குப் பின், ஞாயிறுபள்ளி ஊழியங்கள் தற்போது மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பந்தேஷ்வரா என்ற இடத்தில் புதிதாகப் பெண்களுக்கான ஜெபக்கூட்டமொன்று துவங்கப்பட்டுள்ளது. நமது விசுவாசி ரஜினிபாயின் குடும்பத்திற்கு அரசாங்கத்திடமிருந்து வீட்டுக்கடன் கிடைக்க தேவன் உதவி செய்தார். நமது புதிய தொடர்பாளர் ராஜ்குமாரி பேன் படிப்பறிவற்றவரானபோதிலும், தற்போது வேதப்புத்தகத்தை வாசிக்கத் துவங்கியுள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** 10-ம் வகுப்பு படிக்கும் மாணவி வர்ஷாவைத் தீய ஆவியின் பிடியிலிருந்து தேவன் விடுவிக்க; உஷாபேனின் குடும்பம் இரட்சிக்கப்பட; பின்மாற்றமடைந்திருக்கும் நமது விசுவாசிகளான சுகந்த் மற்றும் பிரியா மீண்டும் விசுவாசத்திற்குள் வர; ஆலயம் கட்டுவதற்கான அனுமதி உதவி திட்டக்கமிஷனரிடமிருந்து விரைவில் சுலபமாகக் கிடைக்க ஜெபிப்போம்.

## தராம்பூர் & கொர்காம் விடுதி:

### விக்னேஷ்வரன் & ஏஞ்சலின்

**துதிக்க:** புதிதாக 4 கிராமங்களில் சுவிசேஷம் உரைக்கப்பட்டுள்ளது. சிறிய காயங்களோடு ரஞ்சியாபேனைப் பெரிய விபத்தினின்று தேவன் காப்பாற்றினார். கோபா கிராம நமது சபைமூப்பரின் மகன் ஜெய்ராமின் திருமணம் கிறிஸ்தவ முறையில் சிறப்பாக நடக்க தேவன் உதவி செய்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தீராத கால்வலியிலிருந்து தேவன் அஞ்சலிபேனைச் சுகப்படுத்த; கண்களில் கல் விழுந்ததினால் கண் பார்வையில் கோளாறு ஏற்பட்டிருக்கும் குலாபாயிற்கு தேவன் அற்புத சுகம் தர; 6-ம் வகுப்பு முதல் 10-ம் வகுப்பு வரை படிக்கும் நமது விடுதிப்பிள்ளைகள் மீண்டும் விடுதிக்கு வந்திருப்பதால், அப்பிள்ளைகளின் ஆரோக்கியம் கெடாமலிருக்க ஜெபிப்போம்.

## ஜாலோத்:

### பால்ராஜ் & கோயில் புஷ்பம்

**துதிக்க:** தலை முறுக்கினால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த வஹிலா கிராம நமது விசுவாசி ஜந்தாபேனையும், நெஞ்சு வலியிலிருந்து நத்துபாயையும், குடலிறக்கத்திலிருந்து மவீரா கிராம பூண்டிபேனையும் தேவன் சுகமாக்கினார். நமது விசுவாசி வந்தனாபேனிற்குக் கர்த்தர் குழந்தை பாக்கியம் நல்கியதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** லக்கன்பூரில் ஆலயம் கட்ட இருக்கும் தடைகள் யாவும் மாற; நீனா பேன் & சத்தீஸ்பாயின் குடும்பத்தில் தேவசமாதானம் நிலவ; பொல்லாத ஆவியின் பிடியிலிருந்து தேவன் துலிபேனை விடுவிக்க ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. டேவிட் நிக்கல்சன்
திருமதி. ஜெப ரோஸ் விஜயன்
திருமதி. பிதுகாந்தி லிமா ஸ்ரீதர் மொபிடெனி
திருமதி. ஹட்நெய்கிம் லெட்கோலுன் பைட்டே

## தாத்ரா மற்றும் நகர் ஹவேலி

### சில்வாசா :

**அகிலேஷ் குமார் & கிரண்தேவி**

**துதிக்க:** புதிதாக 5 கிராமங்களில் சுவிசேஷ விதைகள் ஜெபத்துடன் விதைக்கப்பட்டுள்ளன. எல்லாத் திருச்சபைகளிலும் அறுவடை பண்டிகை சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. நமது விசுவாசிகளின் தாலந்து திறமைகளை மேம்படுத்தும்பொருட்டு, பாட்டுப்போட்டி 3 இடங்களில் சிறப்பாக நடைபெற்றன. சில்லிஃப்தாக் கிராம விசுவாசிகள் ஆலயம் கட்டுவதற்குத் தேவையான நிலமொன்றை வாங்க, தலா ஒரு குடும்பத்திற்கு ரூ.5,200/- என உதாரத்துவமாய்க் கொடுக்க முன்வந்துள்ளமைக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அம்பாபாரி கிராமத்தில் ஓர் ஆலயம் கட்டத் தகுந்த நிலம் கிடைக்க; வரும்நாட்களில் நடக்க இருக்கும் வெளிசந்திப்பு ஊழிய நிகழ்ச்சிகள், சபை மூப்பர்கள் மற்றும் சுதேச ஊழியர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சிகள் யாவையும் தேவன் ஆசீர்வதித்துக் கொடுக்க; பரஸ்பாடா கிராம நமது புதிய விசுவாசி ராஜேஷ்பாய் தீய ஆவியின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட ஜெபிப்போம்.

## மகாராஷ்டிரா

### சிந்கேடா துணை - வடாலி:

**ஜக்மோகன் சிங் & ஸ்வாதி**

**துதிக்க:** புதிதாக 2 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. 2 இடங்களில் நடந்த இயேசு திரைப்பட ஊழியத்தை தேவன் ஆசீர்வதித்ததின் மூலம் அநேகர் தேவ அன்பை முதன்முறையாகத் தங்கள் வாழ்வில் பெற்றுள்ளனர். நமது புதிய தொடர்பாளர்களான சந்தனாபாய், ஜிஜாபாய் மற்றும் மங்கு ஆகியோரது குடும்ப மக்கள் அனைவரும் புகையிலை போடுதல், குடிப்பழக்கம் ஆகிய தீயப்பழக்கங்களைக் கைவிட்டு, தங்களை முழுவதுமாகக் கிறிஸ்துவிடம் அர்ப்பணித்துள்ளனர். புர்ஜாத் கிராம விசுவாசிகளைப் பல்வேறு வியாதிகளிலிருந்து தேவன் சுகப்படுத்தியமைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இனிவரும் நாட்களில் நடக்கவிருக்கும் ஆவிக்குரிய கூட்டங்களுக்காக; தீயப்பழக்கங்களை அறவே விட்டுவிட்டு, கிறிஸ்துவைப் பின்தொடர வாஞ்சிக்கும் தில்பாரின் ஆத்தும இரட்சிப்பிற்காக; தீராத முதுகு வலியிலிருந்து பானுதாஸையும், அதிக எலும்பு மூட்டு வலிகளிலிருந்து சங்கர் தெலாரியையும், மனநோயிலிருந்து ஜீவாவையும், கண்பார்வையின்மையிலிருந்து கலாபாயையும் சுகமாக்க தேவன் கிரியை செய்ய ஜெபிப்போம்.

## 23 ஏப்ரல் வெள்ளி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. பவர் ராம்தாஸ் ஜார்மல்

### குண்டாமோடி & தாப் :

### மூர்த்தி & பாரதி

**துதிக்க:** புதிதாக 5 கிராமங்களில் இயேசுவின் நற்செய்தி அறிவிக்கப் பட்டுள்ளது. புதிதாக 6 நபர்கள் கிறிஸ்துவை விசுவாசிக்கத் தொடங்கியுள்ளனர். பூஜாரபாடா கிராம சைதிபாயை தேவன் சரீர கட்டியிலிருந்து சுகமாக்கியுள்ளார். மேளலாடிபாடா கிராம சவ்லிபாயை தேவன் கெட்ட ஆவியின் பிடியிலிருந்து விடுவித்தார். கடந்தமாதம் நடந்த அனைத்து ஊழிய நிகழ்ச்சிகளையும் தேவன் அனைவருக்கும் ஆசீர்வதித்துக் கொடுத்ததோடு, நமது ஊழியத்தையும் பல இடங்களில் வளரச் செய்துள்ளதற் காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மால்பாடா மற்றும் குந்தாமோடி பகுதிகளைச் சார்ந்த நமது விசுவாசிகளான சுனிதா, சாகன், சந்தோஷ், சங்கீதா ஆகியோர் தவறாமல் நமது ஆலய ஆராதனைகளில் பங்குப்பெற; உக்க லாம்பா கிராம மோஜிபாயைக் கெட்ட ஆவியின் பிடியிலிருந்து தேவன் விடு விக்க; மௌல்யாடிபாடா கிராம பொக்கி யாபாயை டெங்கு காய்ச்சலிலிருந்து கர்த்தர் சுகப்படுத்த; ஜுனாவானிபாடா, மோக், வார்கேடி, உமதி மற்றும் சல்லி பாரி பகுதிகளில் நடக்கும் ஆலய ஆராதனைகளில் ஒழுங்குத் தவறாமல் பங்கேற்கும் குடும்பங்களின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக ஜெபிப்போம்.

### போரடி: ஓம்பிரகாஷ் & சப்னா

**துதிக்க:** புதிதாக 8 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. சாலியாபாடா கிராம துக்ராம்பாயை தேவன் பெரிய விபத்திலிருந்து காப்பாற்றினார். ராணிஜிரா, அஜந்தா, பாம்பூர், சாலியா பாடா, மிதகாவ், சிக்கலிபாடா, தபாபாடா சமன்யா ஆகிய கிராமங்களில் வேதாகம வகுப்புக்குழுக்கள் துவங்கப்பட்டுள்ளன. கொடிதா என்ற கிராமத்தில் வைத்து நடைபெற்ற பெண்கள் மேளாவையும், சபை மூப்பர்கள் பயிற்சிக்கூடுகையையும் தேவன் ஆசீர்வதித்துத் தந்தார். அதன் விளைவு அதில் பங்குப்பெற்றோர் அனைவரும் தங்களது விசுவாசத்தையும் அர்ப்பணிப்பையும் கிறிஸ்துவில் புதுப் பித்துக்கொண்டனர். சிக்கலிபாடா, ஜெகன் தாஞ்சன், நிம்பாரி, கடய்பானி, வஹாடி, சுக்காகுடாரா போன்ற கிராமங்களில் ஊழியப்பின்தொடர்பணிகள் சிறப்பாக நடைபெற்றதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வரும்நாட்களில் நடக்க வுள்ள ஆவிக்குரிய கூட்டங்களின் ஆசீர் வாதங்களுக்காக; சஹானா பீடி கிராம ராஜுபாயை வாய்ப்புற்றுநோயிலிருந்தும், வஹனியாபானி கிராம விஜய்சிங்பாயைச் சிறுநீரகக் கல் பிரச்சனையிலிருந்தும், சாலியாபாடா கிராம அபசியாபாயைக் கண் பார்வையின்மையிலிருந்தும், தபாபாடா கிராம கத்தியாபாயை நீர்த்திரவக்கூழ் (hydrosol) பிரச்சனையிலிருந்தும் தேவன் பூரணமாகக் குணப்படுத்த; அபாசிங்பாடா கிராம ராஜாராம்பாயையும், காதர்தேவ் கிராம ஆஷாபாயையும் கெட்ட ஆவிகளின் பிடிகளிலிருந்து தேவன் விடுதலை செய்ய ஜெபிப்போம்.

## 24 ஏப்ரல் சனி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஜாண்சன் தமிழ்செல்வன்
திருமதி. சூசன் தாமஸ் மேத்யூ, திருமதி. நான்சி எம்.
திரு. சாவ் புன்யா, செல்வி. ஸ்மிதா ராணி லிம்மா

### சாலீஸ்காவ்: திம்மண்ணா தீமோத்தேயு & மமதா நான்சி

**துதிக்க:** புதிதாக 8 கிராமங்களில் சுவி சேஷத்தைப் பறைசாற்றவும், 6 நபர்கள் புதிதாகக் கிறிஸ்துவின் அன்பைத் தங்களது வாழ்வில் முதன்முறையாக ருசிக்கவும் தேவன் கிருபை செய்துள்ளார். நடந்து முடிந்த வெளிசந்திப்பு ஊழியக்கூடுகையின் மூலம் சிந்துர்னி, வார்கெட், ராங்கெட், வய்ஜாபூர், போல்தானா, வாட்ஜல் ஆகிய இடங்களிலிருந்து 7 குடும்பங்கள் நமது தொடர்பிற்குள் வந்துள்ளனர். வாலிபர்கள் கூடுகை, ஞாயிறு ஆராதனைகள், உபவாச ஜெபங்கள், பெண்கள் கூடுகைகள் மற்றும் பிற ஆவிக்குரிய கூட்டங்கள் அனைத்தையும் கைபேசி கூட்டிணைப்பு மூலம் தவறாமல் நடத்திட தேவன் நமது ஊழியர்களுக்கு உதவி செய்தார். ஷிரூத்தில் ஒரு ஜெபக் குழுவையும், வார்கெடி கிராம பகுதிகளில் ஒரு ஆராதனைக்குழுவும் தொடங்கப் பட்டுள்ளதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சிந்துர்னி கிராமத்தில் புதிதாக ஆராதனைக்குழுவொன்று தொடங்கப்பட; நமது விசுவாசி பூஜா கணேஷ் கார்த்திக்குக் குழந்தை பாக்கியம் கிடைக்க; கல்லீரல் செயலாமை யிலிருந்து சாந்து தணிக்கெ சுகம் பெற; புலம்பெயரும் விசுவாசிகள் அனைவரும் தங்களது விசுவாசத்தில் ஆணித்தரமாகயிருக்க ஜெபிப்போம்.

### டெக்கான்: விஜயன் & ஜெபரோஸ்

**துதிக்க:** கெட்டிபள்ளி, பந்தேவாஹி ஆகிய திருச்சபைகளில் நடந்த இரவுநேர ஆவிக்குரிய கூட்டங்களையும், எட்டபள்ளி பணித்தள சபை மூப்பர்கள் பயிற்சிக்கூட்டத்தையும், கட்சந்தூர் பணித்தள வேதாகம வகுப்புக்குழுவையும், தலைவர்கள் பயிற்சிக்கூடுகையையும் தேவன் பெருமளவில் ஆசீர்வதித்துக் கொடுத்தார். ஆலப்பள்ளி, அசிஃபாபாத் போன்ற பணித்தளங்களிலுள்ள 27 கிராமங்களில் புதிதாக நமது ஜீப் குழு மூலம் வெளிசந்திப்பு ஊழியங்கள் மிகச் சிறப்பாக நடைபெற்றன. ஏற்கனவே சந்தித்திருந்த 27 பழைய கிராமங்களில் ஊழியப்பின்தொடர்பணிகள் சிறப்பாக நடந்து முடிந்தன. நமது ஜீப் குழு ஊழியத்திற்கு ஒரு புதிய ஓட்டுனர் கிடைக்கவும், நமது முந்தைய விடுதி மாணவனான ரோஷன் நமது ஊழியத்தில் தன்னார்வ ஊழியனாக இணையவும் கர்த்தர் கிருபை ஈந்தார். நமது விடுதி மாணவர்களான அஜய் அத்ராம், மகேஷ் குர்னுலே ஆகியோர் தங்களது உயர்நிலைக்கல்வி படிப்பாகிய MSW என்ற சமுதாயப்பணியைக் குறித்ததான படிப்பை நல்ல உயர்ந்த மதிப்பெண்களோடு நிறைவு செய்ய தேவன் நல்ல வாய்ப்பு ஈந்தார். ஹிதெட்காசா ஆலயக்கட்டுமானப்பணி துவங்கப்பட்டு, அப்பணியில் நமது விசுவாசிகள் யாவரும் உற்சாகமாகத் தங்கள் பங்களிப்பைச் செயல்பாடுகளில் காண்பித்து வருகிறமைக்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கண்பஹாடி, ரட்சேபள்ளி, வாடிகுடா, ராம்நகர் ஆகிய கிராமங்களிலிருக்கும் சுவி சேஷ எதிர்ப்பாளர்கள் யாவரும் கிறிஸ்துவின் அன்பால் தொடப்பட; பொட்டிகாவ், விட்டல் வாடா (ஆலப்பள்ளி பணித்தளம்), அம்ருத் குடா (அசிஃபாபாத் பணித்தளம்) ஆகிய கிராமங்களில் நடைபெறப்போகும் ஊழியப் பின்தொடர்பணிகளுக்காக; வெளிசந்திப்பு ஊழியத்தில் நடித்துக் காட்டப்படும் நாடக நிகழ்ச்சிகளனைத்தும் அதிக பயன்நிறைந்ததாக அமைய; ஜிம்மலாகட்டா, பண்டே ஆகிய பணித்தளங்களில் ஆவிக்குரிய எழுச்சி உருவாகவும், சரியான திட்டங்களை ஆலோசனைகளாக தேவன் அதற்குத் தரவும்; ஒராவன் மற்றும் மாசி கோண்ட் இன மக்கள் மத்தியில் நல்லமுறையில் ஊழியம் செய்யத் தேவையான நல்ல சுதேச ஊழியர்களும், மிஷனெரிகளும் கிடைக்க; ராஜ் கோண்ட் மற்றும் மடியா கோண்ட் இனமக்கள் மத்தியில் பணி செய்ய புதிய பணித்தளங்கள் திறக்கப்பட ஜெபிப்போம்.

## 25
## ஏப்ரல்
ஞாயிறு

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. பெஞ்சமின் பி., திரு. பிரதீப் முஷாஹரி
திருமதி. ஜெபஜோதி பால்ராஜ்
திரு. ஜெருயேல் பானி
திருமதி. மதுகலா ரமேஷ்வர் நிர்மல்

### சுர்கானா:
**மயில்சாமி ஜோசப் & ஏசுமணி**

**துதிக்க:** துகாவாடி கிராமத்தில் நடந்த வெளிசந்திப்பு ஊழியக்கூடுகையின் மூலம் கிரண் என்ற ஒரு புதிய குடும்பத்தை தேவன் நமக்குத் தொடர்பாளர்களாகத் தந்துள்ளார். உம்பச்சவாடா மற்றும் கேடா கிராமங்களில் சுவிசேஷத்திற்கு நல்ல வரவேற்பு காணப்படுகிறது. பாதர்டி கிராம சாந்தாபாயைத் தீராத வியாதியிலிருந்தும், வாங்கனி கிராம ஜனக் நடு வக்மாரேயை மூச்சு கோளாறிலிருந்தும் தேவன் அற்புத மாகச் சுகப்படுத்தியதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அதிகமானோர் சுவிசேஷத் திற்கு ஆர்வமாகச் செவிசாய்க்கும் கேடா கிராமத்தில் காணப்படும் சுவிசேஷ எதிர்ப் பாளர்கள் யாவரும் மனந்திரும்ப; துங்காவாடி கிராமத்தில் சுவிசேஷ வாசல் திறக்கப்பட; உம்பர்பாடா கிராம வானுபாய் தனது குடிப்பழக்கத்தைக் கைவிடவும், இரட்சிக்கப்படவும் ஜெபிப்போம்.

### கான்தேஷ்பீலி வேதாகம மொழிப்பெயர்ப்புப்பணி & நேர்:
**அஜய்குமார் லிமா & பிரத்யாசினி**

**துதிக்க:** புதிதாக 13 கிராமங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளன. காந்தேஷ் பீலி மொழியில் பழைய ஏற்பாட்டு மொழியாக்கம் தொடர்ந்து சுமூகமாக நடைபெற்று வருகிறது. பத்னி, நகாய் ஆகிய கிராமங்களில் புதிதாக ஆராதனைகள் தொடங்கப்பட்டுள்ளன. சிம்தானா கிராமத்தில் புதிதாக ஊழியம் தொடங்கப்பட்டதினிமித்தம் 5 நபர்கள் சுவிசேஷத்தின் மீது ஆர்வம் காட்டி வருகின்றனர். சில பிரச்சனைகளினால் நிறுத்தப்பட்டிருந்த பெஹத் கிராம ஆராதனை மீண்டும் தொடங்கப் பட்டுள்ளது. பத்னி கிராம லீலாபாய் நெஞ்சுவலியிலிருந்தும், பட்டாபாயின் மகன் மற்றும் சய்தனாபாய் சரீர கட்டி களிலிருந்தும், ராஜ்பாய் தொண்டை வியாதியிலிருந்தும் சுகம் பெற்றதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பீல் பகுதியில் வசிக்கும் போதகர்களும் விசுவாசிகளும், ஆலயங் களிலும் தனி தியானங்களிலும் காந்தேஷ் பீலி மொழியில் நாம் மொழியாக்கம் செய்து வெளியிட்டுள்ள புதிய ஏற்பாட்டைத் தொடர்ந்து பயன்படுத்த; கோதாவரி, சிம்தானா ஆகிய கிராமங்களில் புதிதாக ஆராதனைகள் நடத்த வாய்ப்புகள் கிடைக்க; வரும்நாட்களில் நடக்கப்போகும் பெண்கள் கூடுகை, விடுமுறை வேதாகமப்பள்ளி ஊழியம், மூப்பர்கள் கூடுகை, வாலிபர் கூடுகை, இயேசு திரைப்பட ஊழியம் யாவும் கர்த்தரால் சிறப்பாக ஆசீர்வதிக்கப்பட; குஜராத் மற்றும் பிற மாநிலங்களுக்கு இடம்பெயர்ந்துச் சென்றுள்ள நமது விசுவாசிகள் சுகநலத்துடன் தங்களது இல்லங்களுக்கு வந்துச்சேர; பெர்சிபூர் கிராம லட்சுமிபாய் பக்கவாதத்திலிருந்தும், வஸ்மார் கிராம ரோஹித் வாய்ப்பேசாமை யிலிருந்தும் அற்புத சுகமடைய; தர்செல் கிராமத்தில் ஆராதனையைத் தொடர்ந்து நடத்துவதற்கு ஏற்படும் தடைகள் யாவும் நீங்க ஜெபிப்போம்.

**26 ஏப்ரல் திங்கள்**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. கனகநேசம் செல்லத்துரை
திரு. பொன் அகஸ்டின் இ.
திரு. சிவகுமார் சி., செல்வி. காயத்ரி சி.

# கர்நாடகா

## ஹுப்ளி பிராந்தியம்:

**சுனில் தத்தகாரா & மீனாக்கி**

**துதிக்க:** புதிதாக 18 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு, அதன்மூலம் புதிதாக 17 நபர்கள் கிறிஸ்துவண்டை சேர தேவன் கிருபை புரிந்துள்ளார். நமது முண்டர்கி பணித்தள விசுவாசிகள் ஒழுங்கும் கிரமமுமாக இந்தத் தவசுக்கால நாட்களை ஜெபத்துடனும் உபவாசத்துடனும் கடைபிடித்தனர். ஷிறஹட்டி பணித்தளத்தில் புதிதாக 3 குடும்பங்கள் நமது ஆராதனையில் வந்து கலந்துக்கொள்கின்றனர். பசவனா பாஜிபாடி திருச்சபை விசுவாசிகள் வெளி சந்திப்பு ஊழியங்களில் உற்சாகமாகப் பங்குப்பெறுவதோடு, அதில் நடத்தக்கூடிய நிகழ்ச்சிகளுக்கு ஆகும் செலவையும் அவர்களே சொந்தமாகப் பணம் சேகரித்து பார்த்துக்கொள்கிறார்கள். பின்மாற்ற மடைந்திருந்த நமது விசுவாசிகளான இத்திருச்சபை மக்கள் செட்டப்பா மற்றும் சாரதாம்மா மீண்டும் விசுவாசத்திற்குள் வர தேவன் காட்டிய கிருபையின் அன்பிற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கானாபூர் பணித்தளத்தில் சமீபத்தில் மரித்துப்போன சன்னம்மாவின் இழப்பினால் தவிக்கும் அவரது குடும்ப மக்கள் ஆறுதல் பெற; இப்பணித்தளத்தைச் சார்ந்த லிங்கதஹள்ளி கிராமத்தில் ஒரு புதிய ஜெபமையம் தொடங்கும் திட்டத்தைக் கர்த்தர் ஆசீர்வதித்துத் தர; நனதாகட் திருச்சபை ஆவிக்குரிய தரத்தி லும் ஆத்தும எண்ணிக்கையிலும் பெருக; உத்னால், உபல்தானி, உபல்தானி தண்டா, ஏர்னள்ளா, ஜாலிஹள்ளா ஆகிய கிராம மக்கள் யாவரும் இரட்சிக்கப்பட; ஷிறஹட்டி பணித்தள நமது புதிய விசுவாசி சகாதேவாவிற்கு இருக்கும் தீய ஆவியின் பயங்கள் யாவும் அவரை விட்டு முற்றிலு மாக விலக; நமது விசுவாசிகளான நவீன் மற்றும் முருகன் தங்களுக்கென சொந்த மாக வீடுகள் கட்டுவதற்கான நிலங்களை வாங்கத் தேவையான பண உதவியை அரசாங்க உதவித்திட்டத்தின் மூலம் பெற; கனதரகாடா கிராம விசுவாசிகள் 1000 மணிநேர ஜெபத்தை அனுசரித்திருப்பதின் மூலம், தங்கள் வாழ்வில் நல்ல ஆவிக்குரிய வளர்ச்சியைப் பெற ஜெபிப்போம்.

## துன்புறுத்தப்பட்டும், புறக்கணிக்கப்படவில்லை!

*ஒடிசா மாநிலம், கியோன்ஜஹார் பணித்தளத் திலுள்ள பன்குருடி கிராமத்தில் நமது புதிய விசுவாசியாகிய புத்ராம் முண்டா, கிறிஸ்து இயேசுவுக்குள் சமாதான மான வாழ்வு நடத்தி வந்தார். அவர்களது சமாதானத்தைக் கெடுக்கும்வண்ணம் மற்ற அவிசுவாசிகள் அவர்களைத் துன்புறுத்தத் துவங்கினர். மிகுந்த உபத்திரவத்தின் மத்தியி லும் அவர்கள் மிகவும் அமைதியாக இருந்தனர். பின்பு மனஅழுத்தத்தின் காரண மாக வீடு, நிலம், தொழில் யாவற்றையும் துறந்து கிராமத்தை விட்டு வெளியேறி, மற்றுமொரு இடத்தில் குடியேற திட்டமிட்டனர். எல்லோருடைய ஜெபத்தினாலும், ஊக்கமிக்க அறிவுரையினாலும் அங்கேயே தங்கி, தன்னைத் துன்புறுத்துகிறவர்களை நேசித்து சாட்சியாக வாழ்ந்து வருகின்றனர். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக!*

**27**
**ஏப்ரல்**
**செவ்வாய்**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஆசீர் மோசஸ் தியாகராஜ் எஸ்.
திருமதி. ஜோதிமணி மனோஜ்
திருமதி. இடிகினலா மௌனிகா காடிசெலா

## கோலார் பிராந்தியம்:
### திம்மேஷ் & கவிதா

**துதிக்க:** கங்கட்டாவிலிருந்து 6 நபர்களும், பைரூக்கூர் திருச்சபையினரும் எவ்விதத் தடையுமின்றி தங்களது விசுவாசத்தைக் கிறிஸ்துவில் அறிக்கையிட்டுள்ளனர். செனப்பா மற்றும் சசிகுமார் ஆகிய 2 குடும்பங்கள் புதிதாகக் கங்கட்டா ஆராதனையில் வந்து கலந்துக்கொள்கின்றனர். எட்டு இடங்களில் நடக்கின்ற வெளிசந்திப்பு ஊழியங்களில் நமது விசுவாசிகள் ஆர்வமாகக் கலந்துக்கொள்கின்றனர். ஆலயம் கட்டுவதற்கான நிலத்தைத் தானமாகக் கொடுத்த வெங்கடேஷப்பா ஒரு விபத்தின்மூலம் தனது இடுப்பு, நெஞ்செலும்புகள் யாவும் முறிந்துப் போய், அதனால் இருதயம் மிக அதிகமாய்ப் பாதிக்கப்பட்டிருந்தபோதிலும், கர்த்தர் அவரை அற்புதமாகச் சுகப்படுத்தினார். நமது ஸ்ரீனிவாசபுரா சபை விசுவாசிகள் தாங்கள் தவறாமல் ஆலய ஆராதனைகளில் பங்குப்பெறுவதோடு, அநேக புதிய ஜனங்களையும் சபைக்கு அழைத்துவர தேவன் அவர்களுக்குப் பாராட்டும் கிருபைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிதாகத் திருச்சபை ஆராதனைகளில் வந்து பங்குப்பெறும் மக்கள் மனந்திரும்பி, தங்களது விசுவாசத்தைக் கிறிஸ்துவில் அறிக்கை செய்ய; தவசுக் காலங்களை ஜெபத்தில் சரியான முறையில் செலவிட்ட நமது விசுவாசிகளின் ஆவிக்குரிய வாழ்வு அதிகமதிகமாகக் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட; தங்களுக்கு இருக்கும் எதிர்ப்புகளின் மத்தியிலும் நமது விசுவாசிகளான தியாகராஜ், புஷ்பா, கிருஷ்ணப்பா, வெங்கடரத்னம்மா, நரசிம்மா ஆகியோர் தைரியமாக ஆலய ஆராதனைகளுக்கு வர; நிலப் பிரச்சனைகளினாலும், நீதிமன்ற வழக்குகளினாலும் கஷ்டங்களை எதிர்கொள்ளும் சிலர், அதனால் ஆலயம் வராமலும், திருச்சபையின் ஆவிக்குரிய செயல்பாடுகளில் ஈடுபடாமலும் இருக்கின்றனர். கர்த்தர் தாமே அவர்களை அவர்களது பிரச்சனைகளிலிருந்து விடுபட உதவி செய்ய; கௌரிபித்தனூர், கங்கட்டா, மாலூர் & சிப்பூர் ஆகிய இடங்களில் நடைபெற்று வரும் ஆலய சீரமைப்புப்பணிகள் யாவும் விரைவில் நன்கு முடிவடைய ஜெபிப்போம்.

## *'இயேசு' என்ற பெயர் பாதுகாக்கும் வல்லமையுடையது!*

*ஆந்திரா மாநிலத்திலுள்ள கலக்கடா பணித்தளத்தில் நமது விசுவாசி ரவி, கோனா கிராமத்தைச் சேர்ந்தவர். அவர் இருசக்கர வாகனத்தில் செல்லும்பொழுது, ஒரு விபத்தில் சிக்கினார். வண்டியிலிருந்து விழும்பொழுது 'இயேசு' என்று கூறிக்கொண்டே விழுந்ததும் மூர்ச்சையடைந்தார். தனது உடல் முழுவதும் காயங்களுடன் உயிர் தப்பினார். தற்போது தேவகிருபையால் சுகமடைந்து வருகிறார். தனது சாட்சியை மற்றவர்களிடம் பகர்ந்துக்கொள்கிறார். கிறிஸ்துவுக்கே மகிமை உண்டாவதாக!*

**28 ஏப்ரல் புதன்** *உபவாச ஜெபநாள்*

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. வான்மதி மாசிலாமணி

### ஷிக்காவ்:

**சுனில் குமார் & சாங்கி சுனில்**

**துதிக்க:** 7 கிராமங்களில் முதன்முறையாகச் சுவிசேஷம் சென்று எட்டியுள்ளது. புதிதாக 5 நபர்கள் கிறிஸ்துவின் மந்தையில் சேர்ந்துள்ளனர். இப்பணித்தளத்திலும் 3 திருச்சபைகளிலும் அநேக மக்கள் புதிதாக ஆராதனைகளில் வந்து கலந்துக் கொள்கின்றனர். சேகரையும் அவரது மனைவியையும் தேவன் பெரிய விபத்திலிருந்து பாதுகாத்தார். நமது ஊழியர் பசவராஜின் மனைவி சுனிதா குடற்புண் பிரச்சனையிலிருந்தும், சாந்தக்கா மாட்டு வண்டியிலிருந்து விழுந்ததினால் தனக்குண்டான காயத்திலிருந்தும் பூரண சுகம்பெற தேவன் உதவி செய்தார். ஜெபத்தின் மூலம் வினாயக் மற்றும் அவரது சகோதரர்களுக்கு நல்ல வேலைகள் கிடைக்கக் கர்த்தர் அருள்புரிந்தார். கலாவதி குடிப்பழக்கத்திலிருந்து விடுபட தேவன் காட்டிய இரக்கத்திற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கடந்தமுறை விவசாயத்தில் ஏற்ற அறுவடையைப் பெறாத நமது விசுவாசி சுபாஷ் இம்முறை நல்ல அறுவடையைப் பெற்றிட; கிருஷ்ணா & தீபாவின் குடும்ப வாழ்வில் கர்த்தரின் சமாதானம் தங்கியிருக்க; புதிய தொடர்பாளரொருவர் நமது திருச்சபையில் சேருவதற்கு எந்தத் தடையும் அவருக்கு நேரிடாமலிருக்க; எட்டு இலட்ச ரூபாய் கடனிலிருக்கும் நமது விசுவாசி ரெண்ணாவிற்கு தேவன் அதிலிருந்து மீள உதவி செய்ய ஜெபிப்போம்.

### முண்டகாட்: சுனில் குமார் & சங்கீதா

**துதிக்க:** புதிதாக 23 கிராமங்களில் சுவிசேஷம் சென்றடைந்துள்ளது. 6 நபர்கள் புதிதாக இயேசுவின் அன்பிற்குள் வந்துள்ளனர். சுவிசேஷத்தை எதிர்த்த பரசுராமின் இருதயத்தைக் கர்த்தர் நலமானதாய் மாற்றியுள்ளதோடு, அம்மனிதரே நமது ஊழியர்களைத் தனக்காக ஜெபிக்கும்படி அழைக்கவும் செய்துள்ளார். கங்கம்மாவின் நிலத்தகராறு முடிவிற்கு வர தேவன் காட்டிய நன்மைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சிறுநீரகப்பிரச்சனையிலிருந்து நமது புதிய விசுவாசி விஜயகுமாரையும் மற்றும் விபத்தினால் ஏற்பட்ட முதுகெலும்பு முறிவிலிருந்து ரமேஷையும் தேவன் அற்புதமாகக் குணப்படுத்த; தனது தாயாரோடு ஜெபத்தில் வந்து கலந்துக்கொள்ளாமலிருக்கும் நமது புதிய விசுவாசி ரேணுகாவிற்காக; நமது விசுவாசி கவிதாவிற்குக் குழந்தை பாக்கியம் கிடைக்க ஜெபிப்போம்.

## தெலங்கானா

### அசிஃபாபாத்:

**வசாவா ரமேஷ்பாய் & சுனிதாபேன்**

**துதிக்க:** புதிதாக ஒரு கிராமத்தைச் சுவிசேஷத்தினால் சந்தித்துள்ளனர். விஜயபாயை மலேரியாவிலிருந்தும், ராம்தாஸை நரம்பு வியாதியிலிருந்தும், லிங்கம்மாவைத் தீராத வயிற்றுப்போக்கிலிருந்தும், வினோத்தைப் பெரிய விபத்திலிருந்தும் தேவன் சுகப்படுத்தி காப்பாற்றியுள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** லட்சுமியின் குடும்பத்தில் தேவ சமாதானம் உட்புக; பாக்ய நகரிலுள்ள ஆலயம் கட்டுவதற்கான நிலத்திலுள்ள பிரச்சனை சுமூகமாக முடிவடைய; ரமேஷ் மற்றும் ஜெயானந்தின் இரட்சிப்பிற்காக; துர்பதா லட்சுமன் குழந்தை பாக்கியம் பெற ஜெபிப்போம்.

**29**
**ஏப்ரல்**
**வியாழன்**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஷீபா ஜி. சந்திரா ஸ்ரீனிவாசன்
திருமதி. லாம்நெய்டிங் தௌதாங்
திருமதி. செல்வ மெரினா மனாசே டேனியல்

# ஆந்திரப் பிரதேசம்

## மதனபள்ளி:

### வெங்கடேசன் & சசிகலா

**துதிக்க:** புதிதாகச் சிங்காரகுண்டா என்ற கிராமத்தில் சுவிசேஷம் அறிவிக் கப்பட்டுள்ளது. புதிதாக 6 நபர்கள் கிறிஸ்துவண்டை நெருங்கி வந்துள்ளனர். சிரவாணி, வெங்கடலட்சுமி, பர்வதம்மா ஆகியோர் தன்னார்வமாகவே வெளிசந்திப்பு ஊழியங்களில் ஈடுபட்டு வருகின்றனர். மாதாந்திர உபவாச ஜெபம், 3 கிராமங்களில் விசுவாசிகள் மத்தியில் நடைபெற்ற இரவுநேர ஜெபக்கூடுகைகள், ஒரு புதிய கிராமத்தில் நடைபெற்ற ஆவிக்குரிய இரவுக்கூட்டம், 2 இடங்களில் நடந்த வெளிசந்திப்பு ஊழியங்கள் யாவையும் தேவன் ஆசீர்வதித்துத் தந்தார். வீடுகள் தோறும் சென்று ஜெபிக்கும் முறை தெந்தலூருவில் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டு, நல்ல விளைவுகளை அது தந்துக்கொண்டிருப்பதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விபத்தினால் அதிக முகச்சிதைவு ஏற்பட்டுள்ள நமது புதிய தொடர்பாளர் வெங்கடரமணாவிற்கு தேவன் அற்புத சுக மருளி, இரட்சிக்க; சிக்கலான வியாதி யினால் துன்பப்படும் பாக்யம்மா பூரண சுகம் பெற; நமது புதிய தொடர்பாளர்களான கதிரம்மா, நாகலட்சுமி, குமார் தங்களது விசுவாசத்தில் திடமாய் நிற்க ஜெபிப்போம்.

## தாமலச்செருவு:

### பிரசாந்த் மீசலா & ரூபா குமாரி

**துதிக்க:** மணியானம்பள்ளி, பில்லி குண்டலபள்ளி, தோட்டாபள்ளி, எல்லம் பள்ளி ஆகிய கிராமங்களில் முதல் முறையாகச் சுவிசேஷம் அநேக மக்க ளுக்கு அன்புடன் அறிவிக்கப்பட்டுள்ளது. சௌதிண்டுலு, மல்லிலசெருவுபள்ளி ஆகிய இடங்களில் ஊழியப்பின்தொடர்பணி சிறப்பாக நடைபெற்றது. நெல்லிமண்ட பள்ளி, தெல்லகுண்டலபள்ளி, கொடுகு சிந்தா, பொலக்கலா ஆகிய கிராமங்களில் சபை மூப்பர்களாக இணைந்து சிறுசிறு குழுவாகக்கூடி ஜெபிப்பது அங்கே பெரிய ஆசீர்வாத விளைவுகளைக் கொண்டு வருகிறது. மணியானம்பள்ளி, சாத்தம் பாக்கம் ஆகிய இடங்களிலுள்ள மக்கள் சுவிசேஷத்தின் மீது அதிக வாஞ்சை காட்டு கிறதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தங்களது விசுவாசத்தைக் கிறிஸ்துவில் அறிக்கை செய்யக் காத்திருப் போருக்கு இருக்கும் தடைகளை அவர்கள் தாண்டி வர; நமது ஊழிய விரிவாக்கத்திற்கென நமக்கு அதிகமான நல்ல அர்ப்பணிப்புள்ள ஊழியர்கள் கிடைக்க; நமது சபை மூப்பரான யோனா ஜோதீஸ்வரின் மரணத்தினால் தவிக்கும் அவரது குடும்பம் தேவ ஆறுதல் பெற; கிறிஸ்துவின் கிருபையைத் தங்களுக்குக் கிடைத்த அற்புத நன்மைகளின் மூலம் பெற்றிருப்போர் அவரை முழுமனதுடன் தங்களது இரட்சகராகவும் ஆண்டவராகவும் ஏற்றுக்கொள்ள; நாகவரதனம்மா, நமது சுதேச ஊழியர் ராமசந்துருவின் தாயார் புற்றுநோயிலிருந்தும், பில்லிகுண்டலபள்ளி கிராம ஜோரி கருச்சிதைவிலிருந்தும் முற்றிலுமாகக் குணமடைய ஜெபிப்போம்.

**30**
**ஏப்ரல்**
**வெள்ளி**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. நகோமி மேத்யூ ஜெபராஜ்
திரு. ஏசு பாபு ஏ., திரு. நிரஞ்சன் பால்

### கலக்கடா: வேடியப்பன் & லக்ஷ்மி

**துதிக்க:** நம்புரிவனல்பள்ளி கிராமம் புதிதாகச் சுவிசேஷத்தினால் சந்திக்கப் பட்டுள்ளது. புதிதாக ஒரு நபர் கிறிஸ்துவின் அன்பை ருசித்துள்ளார். கத்வாரி பள்ளி கிராம நமது புதிய தொடர்பாளர் ராதிகா நமது ஆலய ஆராதனைக்குக் கிரமமாக வந்து பங்குப்பெற தேவன் அவருக்குத் தயவு காண்பிக்கிறதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சிலுவை தியான வாக்கியங்களாகிய இயேசுவின் 7 வாக்கியங்களைக் குறித்து தேவ செய்தியளித்த நமது விசுவாசிகளின் ஆவிக்குரிய வாழ்வின் வளர்ச்சிக்காக; கேரம் பள்ளி கிராம சபா முதுகு வலியிலிருந்தும், கும்மாரம்பள்ளி கிராம செரிபா நெஞ்சு வலியிலிருந்தும், தேவனபள்ளி கிராம சாந்தம்மா கண் பார்வை பிரச்சனையிலிருந்தும், எகுவா பட்டவாரிபள்ளி கிராம லட்சுமி நாராயணா பக்கவாதத்திலிருந்தும் சுகமடைய ஜெபிப்போம்.

## தமிழ்நாடு

### திருவள்ளூர்:

### பால் ஆனந்தன் & சாரா ஜோதி

**துதிக்க:** நமது ஊழியர்களால் வேணு கோபாலபுரம் கிராம விசுவாசிகளுக்குப் போர்வையையும், முத்துகொண்டபுரம் குழந்தைகளுக்கு ஆடைகளையும், விதவைகளுக்கு சேலைகளையும் கொடுத்துதவ தேவன் ஈந்த கிருபைக் காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷத்தின் மீது அக்கறை காட்டும் ரேவதி குடும்பம் மற்றும் சந்திரம்மாள் இரட்சிப்படைய; ஸ்மார்ட் ஃபோன் வசதியில்லாததினால் பள்ளி வகுப்புகளை ஆன்லைன் மூலம் கற்றுக் கொள்ள இயலாமல் பரிதாபமாகக் கல்வியறிவிழந்து நிற்கும் நமது ஏழை பள்ளி மாணவ மாணவியர்களுக்காக; மருத்துவ தாதியர் படிப்பு படிக்கும் நமது விசுவாசியொருவரின் மகளுடைய கல்விச் செலவு சந்திக்கப்பட; அதிமஞ் சோரி பேட்டை கிராம கிருபாவின் குடும்பத்தில் நிலவுகின்ற நிலப்பிரச்சனைகள் யாவும் சுமூகமாகத் தீர ஜெபிப்போம்.

### கெலமங்கலம்: பாலசுப்ரமணியன் & பரஞ்ஜோதி லூசினா

**துதிக்க:** சூளகிரி பகுதியைச் சார்ந்த நமது விசுவாசி பரமேஷிற்கும், பிரபாகரனிற்கும் தேவன் தகுந்த வேலைகளைக் கொடுத்துள்ளார். ஏறத்தாழ அனைத்து நமது விசுவாசிகளும் ஆராதனைகளில் தவறாமல் பங்குப்பெறுகின்றனர். நமது விசுவாசி ஷர்மிளாவிற்கு தேவன் மழலை பாக்கியம் தந்தருளியதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கேவரியம்மாவின் ஆத்தும இரட்சிப்பிற்காக; நமது விசுவாசிகளின் பிள்ளைகள் தங்கிப் படிக்கும் விடுதிகளில் தண்ணீர் பற்றாக்குறை விலக; ஒவிபாளையம் மற்றும் கெலமங்கலம் பகுதிகளில் நடைபெற்றுவரும் ஆலயச் சுற்றுச்சுவர் கட்டுமானப்பணி விரைவில் நல்லமுறையில் நிறைவடைய ஜெபிப்போம்.

# மகிமைக்குள் பிரவேசித்தார்



கருங்கல் பணிமாவட்டம், திக்கணங்கோடு பகுதியைச் சேர்ந்த திரு. சார்லஸ் அவர்கள், பஞ்சாயத்தில் செயல் அதிகாரியாகப் பணியாற்றியவர்கள். இவர் கடந்த 09.02.2021 அன்று தனது 87-வது வயதில் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். இவர் சுமார் 37 ஆண்டுகளாக நமது நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் கௌரவ பொறுப்பாளராகப் பணியாற்றியவர். இவர் ஆரம்ப நாட்களில் ஆலயங்கள்தோறும் சென்று செய்தியளித்தும், ஜெபக்கூடுகை நடத்தியும், முழுஇரவு ஜெபங்கள் நடத்தியும், மக்களிடம் காணிக்கைகளைப் பெற்று அனுப்பியும், இந்தப் பகுதியில் ஊழியம் வளர அயராது பாடுபட்டவர். இவருடைய பெரும் முயற்சியின் பயனாக இன்று குமரியில் 14 பணிமாவட்டங்கள் உருவாகியுள்ளன. இவருடைய தம்பி அருள்திரு. ஹெல்க்கியாவும் அவரது மனைவியும் FMPB-யில் மிஷனெரிகளாகப் பணியாற்றினார்கள். இவர் தனது இறுதிநாட்கள் வரை ஜெபக்கூடுகைகளில் கலந்துக்கொண்டு, நல்லாலோசனைகளை வழங்கி எங்களை உற்சாகப்படுத்தினார். இவர் குடும்பமாக ஒரு மிஷனெரியைத் தாங்கிவந்தார். இவரது பிரிவு எங்களுக்கும் இவர் விட்டுச்சென்றுள்ள இருமகள்களின் குடும்பத்திற்கும் பேரிழப்பாகும். அவர்களுடைய ஆறுதலுக்காக நமது ஜெபங்களில் நினைத்துக்கொள்வோம்.

– FMPB, கௌரவ விரிவுப்பணி செயலர், கருங்கல் பணிமாவட்டம்.

## நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு - ரெட்ஹில்ஸ்
## 3-வது மகளிர் மாநாடு

இடம்: St. ஜோசப் பள்ளி, M.A. நகர், ரெட்ஹில்ஸ்
நாள்: 13.04.2021, செவ்வாய்க்கிழமை
நேரம்: காலை 9.30 மணி முதல் மாலை 4 மணி வரை
*குறிப்பு:* **வேத வினா போட்டி - 1 பேதுரு**
தொடர்பு: 94430 91378

## நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு - அம்பத்தூர்
## 32-வது மகளிர் மாநாடு

இடம்: மெதடிஸ்ட் ஆலய சூசன்னா மண்டபம் - புதூர், அம்பத்தூர்
நாள்: 14.04.2021, புதன் கிழமை
நேரம்: காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை
*குறிப்பு:* **வேத வினா போட்டி - 1 பேதுரு**
தொடர்பு: 94449 44188

Regd. Newspaper for India No.17759/69

# நிதி அலுவலகத்திலிருந்து

**Online Banking**

## இணையதளம் வாயிலாக காணிக்கை அனுப்புவதற்கான விவரங்கள்

A/c Name: **FRIENDS MISSIONARY PRAYER BAND**

ICICI - A/c No. 602701216912 - IFS Code ICIC0006027 - Branch: Anna Nagar

**ICICI Bank UPI ID: fmpb01@icic**

SBI - A/c No. 10402752621 - IFS Code SBIN0000987 - Branch: Ambattur

Indian Bank - A/c No. 406157474 - IFS Code IDIB000A095 - Branch: Venkatapuram

தாங்கள் காணிக்கை அனுப்புகிறபோது remark column பகுதியில் தங்களது பெயர், விலாசம் மற்றும் பிரத்தியேக எண் ஆகியவற்றைப் பூர்த்திசெய்து அனுப்பவும். முதல் முறையாக online-இல் அனுப்பும்போது முகவரியுடன் எந்த வகை ஊழியத்திற்கு பயன்படுத்தப்படவேண்டும் என்பதையும் **receiptsfinance@fmpb.org** என்ற மின்னஞ்சல் வழியாக, **WhatsApp: 7904648270** உடனுக்குடன் எங்களுக்குத் தெரிவிக்க வேண்டுகிறோம்.

**கௌரவ முன்னேற்றப்பணி செயலர்கள் மற்றும் ஜெபக்குழுத் தலைவர்கள் கவனத்திற்கு:** காணிக்கை செலுத்தும் படிவத்தில் தங்களின் கைப்பேசி எண்ணை தயவுசெய்து தெரியப்படுத்துங்கள்.

## நன்கொடையாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் கவனத்திற்கு....

இணையதளம் மூலமாக பணம் பரிவர்த்தனை செய்ய, பாரத ஸ்டேட் வங்கியில் கட்டண நுழைவாயில் **(Payment gateway)** மூலமாக அனைவரும் பணம் செலுத்தும் வசதி பெற்றுள்ளோம். நன்கொடையாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் இந்த வசதியைப் பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**FMPB SB COLLECT** என்ற இணையதளத்தின் மூலமாக பணம் அனுப்பும்போது எந்த நோக்கத்திற்காக பணம் செலுத்துகிறீர்கள் என்பதைத் தெரிவிக்கும்படி பட்சமாய்க் கேட்டுக்கொள்கிறோம்.

கட்டண நுழைவாயிலுக்குள் நுழைவதற்கு உங்கள் இணையதளத்தில் **FMPB SB COLLECT Online subscription** என்ற வார்த்தைகளைப் பதிவு செய்து பிற தகவல்களையும் பரிமாற்றம் செய்ய தயவுடன் வேண்டுகிறோம்.

**Online Fund Transfer**

In google search type: **FMPB SB Collect**

it will show **State Bank Collect - Online SBI**

**Tick the box**

☑ (Click check box to proceed for payment)

**Proceed** State of Corporate / Institution: Select **All India**

Type of Corporate / Institution: Select **Religious Institutions**

**Go** Religious Institutions Name: **Friends Missionary Prayer Band**

**Submit** Select Payment Category: **Donations and subscriptions**

***Published by:*** S. Sutharsan Thomas Jeyaraj on behalf of Friends Missionary Prayer Band from 29, High School Road, Ambattur, Chennai 600 053. Tel. 044-2657 0404 E-mail: info@fmpb.org ***Printed by:*** Rasi Graphics Private Limited 69-71-A, Sidco Industrial Estate, Thirumalisai - 600124. ***Editor: S. Sutharsan Thomas Jeyaraj***